

“தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்”

**சுவடி : 2** **ஏடு : 8**

**சூலை-ஆகத்து 2023**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

சன் நகலகம்

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **‘புதிய சிந்தனையாளன்’**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இணையத்தில் படிக்க

www.keetru.com


**ஆசிரியவுரை**

# பொது உரிமையியல் சட்டம் செய்ய வேண்டியது என்ன?

இந்தியாவில் இரண்டாயிரம் ஆண்டுகளாக இந்து தர்ம சாத்திரங்கள் என்று கூறப்படும் மநு, நாரதர், பராசரர், யக்ஞவல்கியர் முதலிய ஸ்மிருதிகளே சட்ட நூல்களாக இருந்தன. முகலாயர் ஆட்சிக்காலத்தில் கூட முகலாயர்களுக்கு இசுலாமியச் சட்டமும், இந்துக்களுக்கு இந்து சாத்திரங்களின் அடிப்படையிலேயே தீர்ப்புகள் வழங்கப்பட்டு வந்தன.

ஆங்கிலேயர் வருவதற்கு முன்பு வரை இந்துப் பெண்களும், சூத்திரர்களும் அனுபவித்து வந்த கொடுமைகள் கணக்கற்றவை.

1856இல் விதவைகள் மறுமணச் சட்டம் வரும் வரையில் இந்துப் பெண்கள் மறுமணம் செய்துகொள்ள முடியாத நிலையிருந்தது.

வருண-சாதி கலப்பு ஏற்படுவதைத் தடுப்பதற்காக குழந்தைத் திருமணத்தை இந்து சனாதனிகள் திணித்து வந்தனர். 1929இல் குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் இயற்றப்பட்டது.

கணவன் இறந்தவுடன் மனைவியை உயிரோடு சிதையில் தள்ளி எரிக்கும் வழக்கம் நீண்டகாலமாக இருந்து வந்தது. இராசாராம் மோகன்ராய் முன் முயற்சியால் 1829இல் அது சட்டப்படி தடைசெய்யப்பட்டது.

இந்து மதத்தின் பெயரால் பெண்களைத் தேவதாசிகளாக்கி வைத்து அவர்களைப் பார்ப்பனர்கள்-பண்ணையார்களின் காமவேட்கைக்கு ஆட்படுத்தி வந்தனர். இந்த தேவதாசி முறையை ஒழிக்க நீதிக்கட்சி ஆட்சியில் 1929இல் தீவிரமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் 1947இல்தான் இது சட்டமானது.

1955இல் இந்துச் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற வரை இந்து மதத்தில் பலதார மணமுறைக்கு சட்டப்படி தடையில்லாமல் இருந்தது.

இந்து சாத்திரங்களின் அடிப்படையில் இந்துப் பெண்களுக்குச் சட்டப்படி சொத்தில் பங்கில்லாமல் இருந்தது. 1989இல் கலைஞர் கருணாநிதி ஆட்சியில் தமிழ்நாட்டிலும், 2005 முதல் இந்தியா முழுவதிலும் பெண்களுக்கு மூதாதையர் சொத்தில் பங்கு உண்டு என்பது சட்டப்படி உண்டாயிற்று.

மெக்காலே சட்ட ஆணையத்தின் தலைவராக இருந்த போதுதான் இந்தியாவில் அனைவருக்கும் பொதுவான குற்றவியல் சட்டத்தை 1860இல் இயற்றி நடைமுறைப்படுத்தினார்.

இந்துக்களுக்கு இந்து சாத்திரங்களின் அடிப்படையில் இந்துச் சட்டத்தை 1871இல் இயற்றியவர்களும் ஆங்கிலேயர்களே.

இந்துக்களுக்குப் பொதுவான உரிமையியல் சட்டத்தை இயற்ற முயன்ற ஆங்கிலேயர்கள் 1858 விக்டோரியா அரசியின் அறிக்கையின் அடிப்படையில் மதங்களில் தலையீடாக் கொள்கைக் காரணமாக அதைக் கைவிட்டனர்.

எந்த ஒரு சனநாயக நாட்டிலும் குடிமக்களை வழிநடத்தும் நெறிமுறைகள் அடங்கிய சட்டங்கள் குடிமையியல் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டங்கள் என இருவகையாக உள்ளன.

1. சமூக நடத்தை, நன்னெறி, பாதுகாப்பு முதலியவற்றை ஒழுங்குபடுத்துவதும் இந்த நெறிமுறைகளை மீறுவோருக்குத் தண்டனை அளிப்பது பற்றியச் சட்டம் குற்றவியல் சட்டம் (Criminal Procedure Code) ஆகும். இந்தச் சட்டம் நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் பொதுவானது ஆகும்.

2. திருமணங்கள் வரைமுறை, குடும்பம், சொத்துரிமை, ஒப்பந்தங்கள் முதலியவற்றை முறைப்படுத்துவதும் இவற்றை மீறுவோருக்குத் தண்டனை முறைகளும் அடங்கிய சட்டங்களின் தொகுப்பு குடிமையியல் சட்டம் (Civil Code) ஆகும்.

இந்தக் குடிமையியல் சட்டம் குடிமக்கள் அனைவருக்கும் ஒரே தன்மையானது அல்ல. மாறாக இசுலாமியச் சமயத்தினருக்கு இசுலாமிய சரியத் தனிநபர் சட்டம் என்றும் கிறித்துவச் சமயத்தினருக்கு கிறித்துவத் தனிநபர் சட்டம் என்றும் பார்சி சமயத்தவருக்கு பார்சி தனிநபர் சட்டம் என்றும் இந்து, பவுத்தம், சமணம், சீக்சிய சமயத்தினருக்கு இந்துச் சட்டம் என்றும் தனித்தனியாக உள்ளன.

மேற்கூறிய 4 வகையான சட்டங்களைச் சமச்சீராக ஒரே சட்டமாக இயற்றிட வேண்டும் என்பதே பா.ச.க. வலியுறுத்துவது ஆகும்.

வெவ்வேறு மதத்தினரோ, சாதியினரோ திருமணம் செய்துகொள்ள சிறப்பு திருமணச் சட்டமும் (1954) நடைமுறையில் உள்ளது. இந்தச் சட்டத்தில் உள்ள ஒரு குறைபாடு மணமக்கள் பெயர்களை 30 நாள்கள் முன்பே அறிவிக்கை எழுதி பெயர்ப் பலகையில் வைப்பார்கள். இதனால் பல திருமணங்கள் நடைபெறாமலே போய்விடுகின்றன. அந்த ஒரு மாத முன் அறிவிப்பை நீக்க வேண்டும் என கோரிக்கை வலுத்துள்ளது.

இசுலாமியர்களின் திருமணச் சட்டத்தில் தொடக்கக் காலம் முதலே விதவைத் திருமணத்துக்கு அனுமதி உண்டு. மூன்று முறை தலாக் சொல்லி, விவாகரத்து செய்யும் முறையை 30.3.2017 அன்று உச்சநீதிமன்ற 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு செல்லாது என்று அறிவித்தது.

முத்தலாக் முறை செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தபோதிலும், பிரதமர் நரேந்திர மோடி இசுலாமியப் பெண்களின் பாதுகாவலனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளவும் இசுலாமிய இளைஞர்களை மிரட்டவும் “முஸ்லிம் பெண்கள் பாதுகாப்புச் சட்டம் 2019” என்பதை ஒன்றிய அரசு கொண்டு வந்தது. முத்தலாக் கூறினால் இசுலாமிய ஆண்கள் மூன்றாண்டு சிறை செல்ல வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இந்தச் சட்டம் எந்த நிவாரணத்தையும் வழங்கவில்லை.

பாரதிய சனதா கட்சி 2014இல் நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையிலேயே “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் பொது சிவில் சட்டம் கொண்டு வருவோம்” என்று வாக்குறுதி அளித்திருந்தது.

நரேந்திர மோடி தலைமை அமைச்சராக 2014இல் பொறுப்பேற்ற பிறகு 2016இல் 21ஆவது சட்ட ஆணையத்தை ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி பல்பீர்சிங் சவுகான் தலைமையில் அமைத்தார். பொது சிவில் சட்டம் குறித்து பரிந்துரை செய்யுமாறு இந்திய ஒன்றிய அரசு அந்த ஆணையத்தை கேட்டுக் கொண்டது. இரண்டு ஆண்டுகள் ஆய்வு செய்து பல்வேறு தரப்பினரின் கருத்துகளைப் பெற்று 31.8.2018 அன்று 185 பக்க அறிக்கையை ஒன்றிய அரசுக்கு 21ஆவது சட்ட ஆணையம் அளித்தது.

தற்போதுள்ள சூழலில் பொதுச் சிவில் சட்டத்திற்கான வழிமுறையானது “தேவையற்றதாகவும், விரும்பத்தகாததாகவும் உள்ளது. பெண்கள் சமத்துவம் அடைவதற்கான முயற்சிகளை எல்லா சமயச் சட்டங்களிலும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது. தற்போதைய இந்து தனிநபர் சட்டங்களில் இந்துப் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பாரபட்சங்களையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.”

குடும்ப வன்முறை தடுப்பு தொடர்பாக உள்ள சட்டத்தின் அம்சங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பாதிக்கப்படும் இஸ்லாமியப் பெண்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் 21ஆம் சட்ட ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. அதைக் கிடப்பில் போட்டுவிட்டது மோடி அரசு.

கர்நாடக மாநில முன்னாள் தலைமை நீதிபதி ரிது ராஜ் அவஸ்தி தலைமையில் 22ஆவது சட்ட ஆணையக் குழு அமைக்கப்பட்டது. பொது உரிமையியல் சட்டத்தை நடைமுறைப்படுத்த பரிந்துரைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

22ஆவது சட்ட ஆணையம் சூன் 14 முதல் பொது மக்களிடம் பொது உரிமையியல் சட்டம் குறித்து கருத்து கேட்டிருந்தது. ஏறக்குறைய ஒரு கோடி பேர் கருத்து தெரிவித்து உள்ளனர்.

பாரதிய சனதா கட்சியினர் ஒருபக்கம் பொது சிவில் சட்டம் என்று கூறிக்கொண்டு, மறுபக்கம் ‘இந்து ராஷ்டிரம்’ அமைப்போம்; அப்போது இந்து மத ஸ்மிருதிகள்தான் ஆட்சி நூல்களாக இருக்கும் என்றும் கூறி வருகின்றனர்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினர் நீண்டகாலமாக ‘ஒரே நாடு, ஒரே சட்டம்’ என்ற முழக்கத்தை முன்வைக்கின்றனர். அதே முழக்கத்தைத்தான் மோடி அவர்கள் அண்மையில் முழங்கியுள்ளார்.

“ஒரு குடும்பத்தில் நாலு பேர் இருந்தால், நான்கு சட்டங்களை வைத்து எப்படி குடும்பம் நடத்த முடியும்?” என்று கூறியுள்ளார்.

இந்தியாவில் பல்வேறு மொழிகள், இனங்கள், கலாச்சாரங்கள் நீண்டகாலமாக உள்ளன.

வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடி மக்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தவுடன் அவர்களுக்கு விலக்கு அளிப்பதாகக் நாடாளுமன்றத்தின் நிலைக்குழுத் தலைவர் சுசில் மோடி கூறிவிட்டார். அப்படியானால் இது அனைவருக்குமான பொது சிவில் சட்டம் ஆகும்.

அரசமைப்புச் சட்டத்தில் பொது சிவில் சட்டம் குறித்தான கூறு 44 அரசியல் நிர்ணய சபை விவாதத்தின் போது கூறு 35-ஆக இருந்தது.

23.11.1948 அன்று பொது சிவில் சட்டம் பற்றி நடைபெற்ற விவாதத்தில் அண்ணல் அம்பேத்கர் அதனை நடைமுறைப் படுத்துவதில் சில சிக்கல்கள் இருக்கின்றன; கட்டாயத்தின் அடிப்படையில் இல்லாமல் விருப்பத்தின் அடிப்படையில் இருக்க வேண்டுமென்று கூறினார். பிற்காலத்தில் நாடாளு மன்றம் அந்தச் சூழலை உருவாக்கிய பிறகு கொண்டு வரலாம் என்று கூறினார். ஆனால் அம்பேத்கர் கூறியதற்கு முற்றிலும் எதிரான சூழலே இன்று நிலவுகிறது.

பா.ச.க.வை பொருத்தவரை இசுலாமியர் தனிநபர் சரியத் சட்டத்தை நீக்க வேண்டும் என்பதிலேயே குறியாக உள்ளது.

கோவாவில் 163 ஆண்டுகாலமாக பொது சிவில் சட்டம் உள்ளது. அங்கு திருமணம் பிறப்பு, இறப்பு கட்டாயப் பதிவு செய்யப்படுகிறது. திருமணம் நடைபெற்றவுடன் கணவனின் சொத்தில் 50 விழுக்காடு மனைவிக்கு உரிமை வந்து விடுகிறது. இருவரும் இணைந்துதான் சொத்துகளை விற்க முடியும். இப்படி சில சிறப்புகள் இருந்தபோதிலும் சில குறைபாடுகளும் உள்ளன.

25 வயது வரை மனைவி பிள்ளைகள் பெற்றுக்கொள்ள வில்லை என்றாலோ (அ) 30 வயது வரை ஆண் குழந்தை பெற்றுக்கொள்ளவில்லை என்றாலோ கணவன் இரண்டாவது திருமணம் செய்துகொள்ளலாம் என்று உள்ளது. அதேபோல பார்ப்பனர்கள் பகவத் கீதை மீது உறுதிமொழி எடுத்துக் கொள்ள உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது எப்படி பொதுவான சிவில் சட்டமாகும்?

22ஆவது சட்ட ஆணையமோ, ஒன்றிய அரசோ இதுவரை இதுதான் பொது சிவில் சட்டம் என்று அறிக்கை எதையும் மக்கள் முன் விவாதத்திற்கு வைக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ்.காரர்களும், பா.ச.க.வினரும் இதை விழுந்து, விழுந்து ஆதரிப்பதன் மூலம் அவர்கள் காண விரும்புகிற இந்து ராஷ்டிராவின் இந்துச் சட்டத்திற்கு முதற்படியாக இது இருக்கட்டும் என்று எண்ணுகிறார்கள்.

உண்மையான பொது சிவில் சட்டம் என்பது எந்த மதச்சார்புத் தன்மையும் இல்லாமல் இருப்பதேயாகும். அதைத் தான் உண்மையான மதசார்பற்ற ஆட்சியை நிறுவ நினைக்கும் நம்மை போன்றவர்கள் விரும்புவதாகும். ஆனால் பா.ச.க. ஒருபோதும் அப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவராது.

இந்துச் சட்டத்தின் கூறுகளாக உள்ள திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை, தத்தெடுத்தல் போன்றவற்றை பொது சிவில் சட்டம் இதுதான் என்ற பெயரில் மற்ற மதத்தினர் மீது திணித்துவிடும் அபாயம் உள்ளது. எனவே பா.ச.க. கொண்டு வரத் துடிக்கும் பொது சிவில் சட்டம் சிறுபான்மை மதத்த வரின் உரிமைகளைப் பறிப்பதாகவே இருக்கும். அனைத்துச் சாதியினரும் பெண்களும் இந்துக் கோயில்களில் அர்ச்சக ராகும் சட்டத்தை பா.ச.க. ஆட்சி முதலில் இயற்றட்டும். பிறகு பேசலாம் பொதுச் சிவில் சட்டம் பற்றி.

❖

**- வாலாசா வல்லவன்**

## ஆம்பூரில் கண்டன ஆர்ப்பாட்டம்



மணிப்பூர் மாநிலத்தில் கிருத்தவர்கள் மீதும், உத்தரகண்டு மாநிலத்தில் இசுலாமியர்கள் மீதும் நடத்தப்படும் தாக்கு தலைத் தடுக்கக் கோரியும், சிறுபான்மை மக்களைப் பாதுகாக்க இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் மன்றத்தின் சார்பில், நகரச் செயலாளர் தென்னவன் தலைமையில் 28.6.2023 அன்று ஆம்பூரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் அரங்கநாதன், மாவட்டச் செயலாளர் விமல், தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் பழ.இராசேந்திர பிரசாத், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா.மதனகவி ஆகியோர் உரையாற்றினார்கள். நிறைவாக மன்றத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் நேய. சுந்தர் சிறப்புரையாற்றினார்.

## மாநிலங்களின் உரிமைகளைக் காப்போம் தெருமுனைக் கூட்டம்




திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடியில் மாநிலங்களின் உரிமைகளை மீட்போம்-தெருமுனைக் கூட்டம் 8.7.2023 அன்று மாலை கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வேலு அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கா.புருசோத்தமன் வரவேற்புரையாற்றி னார். “ஆளுநரின் அதிகார மீறல்” என்ற தலைப்பில் பழ. இராசேந்திர பிரசாத் அவர்களும், “தொழிலாளர் உரிமை” என்ற தலைப்பில் உருபன், வகுப்புவாரி உரிமை என்ற தலைப்பில் கசேந்திரன் அப்பாதுரை அவர் களும், “அரசியல் உரிமை” என்ற தலைப்பில் ந.செவ்வேள் அவர்களும், “வாழ்வுரிமை” என்ற தலைப்பில் மு. பிரதாபன் அவர்களும், “கல்வி உரிமை” என்ற தலைப்பில் நா.மதனகவி ஆகியோர் உரையாற்றி னார்கள். சிவக்குமார் அவர்கள் நன்றி யுரையோடு கூட்டம் நிறைவுற்றது.

# பொது சிவில் சட்டம் : எழுப்பும் வினாக்கள்!

- நீதிபதி **து.அரிபரந்தாமன்**

**பொ**து சிவில் சட்டம் பற்றிய விவாதம் பாஜக ஆட்சிக்கு வந்த 2014ஆம் ஆண்டுக்கு முந்தைய காலகட்டத்திலிருந்து நடந்து வருகிறது. பாஜகவினுடைய நோக்கம் சிறுபான்மையினருக்கு எதிரானது போல இதைக் கட்டமைப்பது. ஆனால் அது உண்மையில் அப்படி அல்ல. பொது சிவில் சட்டம் என்பது அரசமைப்புச் சட்டம் வரைவாக இருக்கும் போது Article 35ஆக இருந்தது. அந்த Article 35 மீது, நவம்பர் 1948-இல்விவாதம் நடைபெற்று இறுதிப்படுத்தப்பட்டது. இறுதிப் படுத்தப்பட்டபோது அது Article 44-ஆக உருப்பெற்றது. அரசமைப்பு சட்டத்தில் பகுதி, அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் பற்றியது. பகுதிA IV-இல் பொது சிவில் சட்டத்தை வைத்தார்கள். 36லிருந்து 51 வரை IV. பகுதி III.

பகுதி III அடிப்படை உரிமைகள் பற்றியது. அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்தலாம், நீதிமன்றத்திற்குச் சென்று என்னுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுகிறது என்று வழக்குத் தொடுக்கலாம். இப்பகுதியில் இருக்கக்கூடிய அனைத்து உரிமைகளும் நாம் கோரிப் பெறலாம்.

பகுதி IV இல் இருப்பவை வழிகாட்டு நெறிமுறைகள் தான், அதை அரசு கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில்லை. அரசு வேண்டுமானால் சட்டம் இயற்றலாம். அதுதான் அதனுடைய அடிப்படை. அதை நிதானமாகச் செய்யவேண்டும் என்பதுதான் அரசமைப்புச் சட்டத்தை உண்டாக்கியவர்களின் நோக்கம்.

உண்மையான பொது சிவில் சட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவது அல்ல அவர்களின் நோக்கம்.

அரசமைப்புச் சட்டம் பகுதி IV இல் Article 39 உள்ளது. அதில் Article 39(b) கீழ்கண்டவாறு உள்ளது.

“The state shall,inparticular,direct its policy towards securing that the ownership and control of the material resources of the community are so distributed as best to subserve the common good”

இது அப்படியா நடக்கிறது? இயற்கையிலேயே கிடைக்கக் கூடிய வளங்கள் எல்லாம் அனைவருக்குமாகப் பகிர்ந்து அளிக்கப்படும் என்பது நோக்கமாக இருக்கிறது. ஆனால் அதானிக்குத் தான் நான்காயிரம் ஏக்கர், எண்ணூர் அருகே துறைமுகம் கட்டுவதற்காகக் கொடுக்கப்பட்டிருக் கிறது. அதேபோல Article 38(2), ஏற்றத்தாழ்வு இல்லாத வருமானம் அனைவருக்கும் கிடைப்பதற்கு அரசு முயற்சிக்கும் என்றும், பல பகுதிகளில் வசிப்பவர் களுக்கும் பல தொழில்களை செய்பவர்களுக்கும் ஒரே மாதிரியான வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர அரசு முயற்சிக்கும் என்று கூறுகிறது.

“The State shall, in particular, strive to minimise the inequalities in income, and endeavour to eliminate inequalities in status, facilities and opportunities, not only amongst individuals but also amongst groups of people residing in different areas or engaged in different vocations”

இவையெல்லாம் நோக்கங்கள். இவற்றை உரிமை யாகக் கோரமுடியாது.

ஒரு சிறந்த உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், அது Article 47 தான். அது மதுவிலக்கைப் பற்றி கூறுகிறது. அதற்குச் சட்டம் கொண்டு வந்தால் மகிழ்ச்சி. இந்தியா முழுவதும் மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம் என்று பா.ஜ.க அரசு கொண்டு வரவேண்டியதுதானே. எந்த அரசும் கொண்டு வராது.

எனவே பகுதி IV-இல் இருப்பதால்தான், அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்து73 ஆண்டுகள் ஆகியும் இவைகள்-அரசின் வழிகாட்டு நெறிமுறைகள்-இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்த நெறிமுறை களை அமல்படுத்த அரசு முயற்சி செய்யும் என்பதே அரசமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

நாம் முதலில் அரசமைப்பு அவையில் நடந்த விவாதத்தை பார்க்க வேண்டும். யூனிபார்ம் சிவில்



கோடு என்றால் பொதுவான சிவில்சட்டம். அப்படியானால் இன்று பொதுவான சிவில் சட்டம் இல்லையா என்று கேட்டால் ஏற்கனவே பொதுவான சிவில் சட்டம் இருக்கிறது என்று டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார். பொது சிவில் சட்டம் பற்றி அவர் சொல்லும்போது கிரிமினல் சட்டத்தைப் பற்றியும் அவர் சொல்கிறார். கிரிமினல் சட்டத்தைப் பொருத்தவரை அனைவருக்கும் ஒன்றுதான் என்று 1860 முதல் பிரித்தானிய அரசால் கொண்டுவரப்பட்டுவிட்டது. இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) 1860இல் வந்ததைத் தான் அவர் சொல்கிறார். சிவில் சட்டத்தைப் பற்றி சொல்லும் போதும், மிக மிக ஒரு சிறு பகுதி (Little Corner) தவிர, அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரே சிவில் சட்டம்தான் இருப்பதாக டாக்டர் அம்பேத்கர் சொல்கிறார். சொத்துக்களை விற்பதற்கும் அடமானம் வைப்பதற்கும் என சொத்துக்கள் பரிவர்த்தனை சம்பந்தமான சட்டமும், பணப் பரிவர்த்தனை சம்பந்தமான சட்டமும், இன்னும் எண்ணற்ற சட்டங்களும் அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம்தானே என்று சுட்டிக் காட்டுகிறார் டாக்டர் அம்பேத்கர். குடும்பச் சட்டம் என்ற மிக மிக சிறிய பகுதி தவிர மற்ற அனைத்து சிவில் சட்டங்களும் அனைவருக்கும் பொதுவானது என்பதை எடுத்துக்காட்டுகிறார் அம்பேத்கர். அவர் அரசமைப் பவையில் எடுத்து வைத்த வாதத்தின் ஒரு சிறு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

“We have a uniform and complete Criminal Code operating throughout the country, which is contained in the Penal Code and the Criminal Procedure Code. We have the Law of Transfer of Property, which deals with property relations and which is operative throughout the country. Then there are the Negotiable Instruments Acts: and I can cite innumerable enactments which would prove that this country has practically a Civil Code, uniform in its content and applicable to the whole of the country. The only province the Civil Law has not been able to invade so far is Marriage and Succession. It is this little corner which we have not been able to invade so far and it is the intention of those who desire to have article 35 as part of the Constitution to bring about that change.”

அதாவது குடும்பச் சட்டம் என்பது திருமணம் மற்றும் வாரிசுரிமைச் சட்டங்கள் ஆகும். திருமணம் தொடர்பான சட்டம் என்பது விவாகரத்தையும் ஜீவனாம்சத்தையும் உள்ளடக்கியதாகும். திருமணத்தின் ஒரு கூறுதான் விவாகரத்து. குடும்பத்தில் சொத்துக்களைப் பிரித்துக் கொள்வது சம்பந்தமான சட்டமே வாரிசு உரிமைச் சட்டம்.தத்தெடுத்தல் சம்பந்தமான சட்டமும் குடும்பச் சட்டமே.குடும்பச் சட்டமே தனிநபர்சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் குடும்பச் சட்டம் சம்பந்தமானபகுதியை, ஒரு குறைவான பகுதிதான் என்று அம்பேத்கர் சொல்கிறார்.

அந்தந்த மதங்களுக்கான சட்டம் இங்கு நடைமுறையில் இருக்கிறது. திருமணம் என்று எடுத்துக்கொண்டால் இந்துக்கள் எல்லாம் இந்து மதம் சொல்கிற சடங்குகள் மற்றும் சம்பிரதாயத்தின்படி திருமணம் செய்கின்றனர். இஸ்லாமியர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மதத்தின் சடங்குகள் மற்றும் சம்பிரதாயத்தின் படி திருமணம் செய்கின்றனர். அதே போல கிறிஸ்தவர்களும், சீக்கியர்களும், பார்சிகளும் அவரவர் மதம் கூறுகிற சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் படி திருமணங்களை செய்கின்றனர். 1937க்கு முன்னால் பிரிட்டிஷ் இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்துப் பகுதிகளிலும் வாழ்ந்த இஸ்லாமியர்கள், அந்தந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய இந்து மக்களின் பழக்க வழக்கங்களின்படியே தங்கள் குடும்பங்களில் சொத்துக் களைப் பிரித்துக் கொண்டனர் என்று அம்பேத்கர் அரசமைப்பு அவையில் நடந்த விவாதத்தின் போது குறிப்பிடுகிறார். அதுவும் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு பழக்க வழக்கங்கள் இருந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

1937இல் தான் பிரிட்டிஷ் அரசாங்கம் சரியத் சட்டத்தை-இஸ்லாமியருக்கான வாரிசு உரிமைச் சட்டத்தைக்-கொண்டு வந்தது. சரியத் சட்டத்தை நடைமுறைப்படுத்தப்படும் போது பிரிட்டிஷ் அரசு விருப்பத்தேர்வு (Option) கொடுத்தார்கள். உங்களுக்கு விருப்பம் இருந்தால் சரியத் சட்டத்திற்கு வாருங்கள். இல்லையென்றால் நீங்கள் எந்த வழக்கப்படி செய்கிறீர்களோ அதை வாரிசுரிமைக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று அவர்கள் விருப்பத்திற்கு விட்டு விட்டார்கள்.

நம்மை அடிமைப்படுத்தியிருக்கக் கூடிய பிரிட்டிஷ் அரசு சரியத் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் விருப்புரிமை அடிப்படையில் செய்தபோது, சுதந்திர இந்தியாவின் எதிர்கால நாடாளுமன்றம் Article 44ஐ அடிப்படையாகக் கொண்டு சட்டம் செய்கையில் இப்படித்தானே செய்யமுடியும் என்கிறார் அம்பேத்கர். அதாவது சட்டத்தில் இருப்பது போலவோ விருப்பத் தேர்வு மூலமாகவோ எப்படி வேண்டுமோ அப்படிச்




செய்து கொள்வது என்ற அடிப்படையில்தானே பொது சிவில் சட்டத்தை அமல்படுத்தச் சொல்கிறார் டாக்டர் அம்பேத்கர். அவரவருடைய மத அடிப்படையிலான பழக்க வழக்கங்களை வைத்துக் கொள்ள விரும்பி னாலும் வைத்துக் கொள்ளலாம் அல்லது பொது சிவில் சட்டத்தை ஏற்றும் நடக்கலாம். இப்படி ஜனநாயக முறைப்படி தான் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். மிரட்டலின் அடிப்படையில் கொண்டு வரப் படக்கூடாது என்பது அரசமைப்பு அவையில் நடந்த விவாதத்தின் அடிப்படையாக இருக்கிறது.

அரசமைப்புச் சட்ட வரைவுக் குழுவின் தலைவர் டாக்டர் அம்பேத்கர். அந்த குழுவில் ஒரு உறுப்பினர் முன்சி அவர்கள். அரசமைப்பு அவையில் நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட முன்சி அவர்கள் பொது சிவில் சட்டத்தை இந்து சனாதனிகளும் எதிர்க்கிறார்கள் என்பதைப் பதிவு செய்கிறார். ஆண்களுக்கு இணையாக பெண்களுக்குச் சொத்து கொடுக்க வேண்டும் என்பதையும் மற்ற அனைத்திலும் ஆண்களுக்கு இணையாக பெண் களை பாவிக்க வேண்டும் என்பதையும் இந்து மதம் ஒப்புக்கொள்ளவில்லை என்று சனாதனிகள் கூறுகிறார்கள் என்று முன்சி தனது வாதத்தில் பதிவு செய்துள்ளார்.

1948-இல் மேற்சொன்னபடி அரசமைப்பு அவையில் பொது சிவில் சட்டம் சம்பந்தமாக விவாதம் நடந்து இறுதி செய்யப்பட்ட போது, இந்துக்கள் தொடர்பான சட்டங்கள்கூட முடிவாகவில்லை. அதாவது சட்டங்களாக ஆக்கப்படவில்லை. இந்துச் சட்ட மசோதா (Hindu Code Bill) இந்துக்கள் சம்பந்தமான திருமணம், வாரிசுரிமை, தத்தெடுப்பது தொடர்பான சட்டங்களின் மசோதா 1947இல் டாக்டர் அம்பேத்கரால் முதல் நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டும் அது சட்டமாகவில்லை. 1946-டிசம்பரில் இல் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு சபைதான் முதல் நாடாளுமன்றமும் கூட. அந்த நாடாளுமன்றத்தில் பிரத மராக இருந்தவர் ஜவஹர்லால் நேரு. ஜவஹர்லால் நேருவின் தலைமை யிலான அமைச்சரவையில் டாக்டர் அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்தார்.

1947இல் அந்த முதல் நாடாளு மன்றத்தில்-அரசமைப்புச் சபையில்- இந்து சட்ட மசோதாவை தாக்கல் செய்த அம்பேத்கர் அதைச் சட்டமாக்கு வதற்கு முயற்சி செய்தார். அரச மைப்புச் சட்டம் 26 ஜனவரி 1950 முதல் அமலுக்கு வந்தாலும், அரச மைப்புச் சபையின் வேலை 26-11-1949 உடன் நிறைவடை கிறது. 1952-இல் முதல் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வரை முதல் நாடாளுமன்றம் செயல்பட்டது. முதல் நாடாளுமன்றத்தால் எண்ணற்ற சட்டங்கள் இயற்றப் பட்டன. 1947-இல் தொழிற்தகராறு சட்டம் (Industrial Disputes Act 1948), 1948இல் தொழிற்சாலைகள் சட்டம் (Facatoraies Act), 1948 இல் குறைந்தபட்ச ஊதிய சட்டம் (Minimum Wages Act), 1948 இல் மின்சார விநியோக சட்டம் (Electricity Sup-ply Act) என பல்வேறு சட்டங்களைக் கொண்டு வந்தது முதல் நாடாளுமன்றம். இவ்வாறு பல்வேறு சட்டங் களைக் கொண்டு வர முடிந்த அம்பேத்கர் இந்து மக்கள் சம்பந்தமான இந்து திருமண சட்டம், இந்து வாரிசு ரிமைச் சட்டம் மற்றும் தத்தெடுத்தல் சம்பந்தமான சட்டம் ஆகியவைகளைக் கொண்டு வருவதற்கு-மேற் சொன்னபடி மசோதாக்களை தாக்கல் செய்திருந்த போதிலும் அம்பேத்கரால் இந்தச்சட்டங்களை இயற்று வதற்கு முடியவில்லை. சட்டமாக்குவதற்கான அம்பேத் கரின் முயற்சிகள் அனைத்தும் இந்து சனாதனிகளால் தோற்கடிக்கப்படுகிறது. அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அப்படி எடுத்துக் கொள்ளப்பட் டால் உடனே சனாதனிகள் தடுத்து நிறுத்திவிடுவார்கள். அதனால் 27 செப்டம்பர் 1951இல், இந்துக்களுக்கான திருமணச் சட்டம், வாரிசுரிமைச் சட்டம் மற்றும் தத்தெடுத்தல் சம்பந்தமான சட்டம் ஆகியவைகளை இயற்றுவதற்கு சனாதானிகள் இடையூறு செய்ததைக் காரணமாகச் சொல்லி பதவி விலகினார் அம்பேத்கர்.

அதற்குப்பிறகு 1955-56இல் தான் இந்துக் குடும்ப சட்டம்- இந்து திருமண சட்டம், இந்து வாரிசு உரிமைச் சட்டம் மற்றும் தத்தெடுத்தல் சம்பந்தமான சட்டம் -

கொண்டு வரப்பட்டது. இன்னும் கூடப் பிரச்சினை இருக்கிறது. சபரிமலையில் பெண்கள் கோவிலுக்குப் போகலாமா வேண்டாமா என்ற பிரச்சினை உச்சநீதி மன்றத்தில் இருக்கிறது. ஐந்து நீதிபதிகளில் நான்கு நீதிபதிகள் போகலாம் என்று சொன்னார்கள். அப்போது தலைமை நீதிபதியாக இருந்த தீபக்மிஸ்ரா, கன்வில்கர், நரிமன், சந்திரசூட் நால்வரும் பெண்கள் சபரிமலைக்குப் போகலாம் என்று தீர்ப்பளித்தார்கள். இந்துமல் கோத்ரா என்கிற ஒரு பெண் நீதிபதிதான் போகக்கூடாது என்று சொன்னார். இந்தத் தீர்ப்பு அளித்ததற்கு பின்னர் தீபக்மிஸ்ரா ஓய்வு பெற்று விடுகிறார்.

பின்னர் தலைமை நீதிபதியாக ரஞ்சன் கோகாய் வந்தார். அப்போது இந்துத்துவ அமைப்புகள் இந்தத் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்றும், மற்ற மதங்களில் பெண்களுக்கு எதிராக உள்ள மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்து போடப்பட்ட அனைத்து வழக்குகளையும் ஒன்றாக இணைத்து சபரிமலை வழக்குடன் விசாரிக்க வேண்டும் என்றும், அந்த விசாரணையை ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும் என்றும் வழக்குத் தொடுத்தார் கள். மேலே கூறியவாறு சபரிமலை வழக்கை விசாரித்த ஐந்து நீதிபதிகளில் நான்கு நீதிபதிகள் பெண்கள் சபரிமலைக்கு வழிபட செல்லலாம் என்றும் ஒரு நீதிபதி செல்லக்கூடாது என்றும் (4:1) தீர்ப்பளித்து இருந்த நிலையில்,கோகாய், இந்துமல்கோத்ரா ஆகியோரோடு கன்வில்கரும் சேர்ந்து மூவர் அந்த தீர்ப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் மற்ற இருவர் மறுபரிசீலனை செய்யத் தேவையில்லை என்றும் தீர்ப்பளித்தார்கள். அதாவது நான்குக்கு (4:1) ஒன்று என்று இருந்த நிலைமை தலைகீழாக மாறி மேற்சொன்னபடி மூவர் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இருவர் செய்ய வேண்டாம் (3:2) என்றும் தீர்ப்பளிக்கும் நிலை ஏற்பட்டது. சபரிமலை வழக்கை ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும் என்று மறுபரிசீலனை மனுவை விசாரித்த நீதிபதிகளில் மூவர் கூறியிருப்பினும் இது வரை ஏழு பேர் கொண்ட அமர்வு விசாரணை செய்ய வில்லை. அந்த வழக்கு கிணற்றில் போட்ட கல்லாக நிற்கிறது.

இன்றும்கூட கோவிலுக்குள் அனைத்துச் சாதியினரும் போக முடியவில்லை. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தமிழ்நாடு முழுவதும் 54 கோவில்கள் சாதிய மோதல் என்ற காரணத்தால் மூடப்பட்டிருக்கின்றன என்று கூறியிருக்கிறார். விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார் விழுப்புரம் பகுதியில் மட்டும் 300 கோவில்கள் சாதிய மோதல் காரணங்களுக்காக மூடப்பட்டிருக்கின்றன என்று கூறி இருக்கிறார். வேங்கைவயலில் பட்டியல் இனத்தவரின் குடிநீர் தொட்டியில் மலம் கலக்கப்பட்டது என்ற பிரச்சனை எழுந்த போதுதான், அதே ஊரில் உள்ள கோயிலில் பட்டியல் இனத்தவர் வழிபட அனுமதிக்கப்படுவதில்லை என்பதும் தெரிய வந்தது. அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 25 (2) அனைத்துச் சாதியினரும் கோயிலுக்குள் சென்று வழிபடலாம் என்பதை அடிப்படை உரிமை என்று அறிவிக்கின்றது. ஆனால் பட்டியல் இனத்தவர் கோயிலுக்குள் சென்று வழிபட முடியவில்லை என்பது நிதர்சனமான உண்மை.

எனவே பொது சிவில் சட்டம் பற்றி இவர்கள் சொல்வதில் உள்நோக்கம் இருக்கிறது. அதைத் தாண்டி உண்மையில் இதைக்கொண்டு வரவேண்டும் என்ற எண்ணமெல்லாம் அவர்களுக்கு இல்லை.

22ஆவது சட்ட ஆணையம் 14 சூன் 2023 அன்று பொது சிவில் சட்டம் நடைமுறைப்படுத்துவது பற்றி கருத்துத் தெரிவிக்குமாறு ஒரு பொது அறிவிப்பு கொடுத்தது. அதன் பிறகுதான் இப்போது தொடர்ந்து விவாதங்கள் நடைபெறுகின்றன. 2016இல் மோடி அரசு பொது சிவில்சட்டம் பற்றி 21ஆவது சட்ட ஆணை யத்திடம் அறிக்கை அளிக்குமாறு கேட்டது. அவர்கள் இதுதொடர்பாக இதேபோல் பொது அறிவிப்புக் கொடுத்து அனைவரையும் கேட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் 31.8.2018 அன்று “Consultative paper on reform of Family Law” என்ற 185 பக்கங்கள் கொண்ட அறிக்கையை ஒன்றிய அரசிற்கு சமர்ப்பித்தார்கள். அவர்களுடைய பரிந்துரையில் பொது சிவில் சட்டம் இப்போதைக்கு தேவையும் இல்லை அவசியமும் இல்லை (Uniform Civil code is neither necessary nor desirable) என்று சொன்னார்கள். இப்போதைய உடனடி தேவை ஒவ்வொரு மதங்களிலும் குடும்பச் சட்டங்கள்-அதாவது தனிநபர் சட்டங்கள் செய்யப்பட வேண்டும் (Codify) என்று 21ஆவது சட்ட ஆணையம் பரிந்துரை செய்தது. ஏற்கனவே உள்ள குடும்ப சட்டங் களில் தேவையான திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் அந்த பரிந்துரை கூறியது. மேலும் அனைத்து மதத்தினருக்கும் பொதுவாக உள்ள சட்டங்களில் தேவையான திருத்தங்கள் செய்வதுடன், பல புதிய பொதுவான சட்டங்களையும் நாடாளுமன்றம் இயற்ற வேண்டும் என்றும் பரிந்துரை செய்தது 21ஆவது சட்ட ஆணையம்.

21ஆவது சட்ட ஆணையத்தின் மேற்சொன்ன பரிந்துரைகளைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்தது மோடியின் அரசு. அந்த ஆணையம் சொன்ன பரிந்துரைகளை அமல்படுத்த தயாராக இல்லை மோடியின் தலைமையிலான ஒன்றிய அரசு.

21ஆவது சட்ட ஆணையம் எல்லா மதங்களிலும் உள்ள தனிநபர் சட்டங்களை, அதாவது குடும்பச் சட்டங்களைத் திருத்தச் சொன்னது. இஸ்லாமியருக்கான தனிநபர் சட்டங்கள், கிறிஸ்தவர்களுக்கான தனிநபர் சட்டங்கள், சீக்கியர்களுக்கான தனிநபர் சட்டங்கள், பார்சிகளுக்கான தனிநபர் சட்டங்கள் ஆகியவற்றை முறைப்படுத்தச் (Codify) சொன்னது. அந்த அந்த சமூகங்களில் உள்ள வர்களோடு தேவையான விவாதங்கள் நடத்தி அந்தந்த சமூகங்களுக்கான தனிநபர் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும். ஆனால் அந்த வேலைகள் எதுவும் செய்ய மோடி அரசு தயாராக இல்லை.

இந்துக்களுக்கான சட்டங்கள் மட்டும் (Codify) செய்யப்பட்டு ஒரு தூண் இருக்கிறது. அதேபோல வரிசையாக எல்லா மதங்களுக்குமான சட்டங்கள் செய்யப்பட்டு பல தூண்கள் (Pillars) வரவேண்டும். அப்போதுதான் அதன் மேல் பொது சிவில் சட்டம் என்னும் சாலை அமைக்க முடியும். எல்லா சமூகத் தையும் சேர்ந்தவர்களும் இன்று இருதார மணத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏழாம் நூற்றாண்டில் நபிகள் நாயகம் அவர்கள், நான்கு பெண்களைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொன்னபோது மன்னராட்சியில் போரில் இளம் வீரர்கள் மடிந்துவிடும் சூழல் நிலவியது. அப்போது இளம் விதவைகள் மட்டுமல்ல இரண்டு வயது மூன்று வயது சிறு குழந்தைகளையும் அனாதைகளாக விட்டுவிட்டு போரில் மடிந்து விடுவார் கள். இப்படி கைவிடப்படுபவர்கள் விபச்சாரம் என்கிற நிலைக்குத் தள்ளப்படும் வறுமை நிலை ஏற்பட்டுவிடும் என்பதால் நான்கு திருமணங்கள் செய்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். அவர்கள் அங்கே ஏழாம் நூற்றாண்டில் இப்படி நீதி சொன்னபோது, இங்கே சதி என்று சொல்லி கணவன் இறந்ததும் பெண்ணையும் தீயிலிட்டுக் கொளுத்தினார்கள். இன்று இரண்டுமே சரி கிடையாது என்பதுதான் சரியான பார்வையாக இருக்கும். எனவே இருதார மணங்களைத் தடை செய்து சட்டம் இயற்றப்பட வேண்டும். அந்தச் சட்டம் அனைத்து மதத்தினருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். ஏற்கனவே குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம், சிறப்பு திருமணச் சட்டம் போன்றவை அனைத்து மதத்தினருக்கும் பொதுவான சிவில் சட்டங்களாக இருப்பதை இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ளலாம். எந்த மதத்தைச் சேர்ந்தவர் குழந்தைத் திருமணம் செய்தாலும்-தீட்சிதர்கள் குழந்தைத் திருமணம் செய் தாலும்-அது சட்டப்படி குற்றம்.

சூன் 14 அன்று பொது சிவில் சட்டம் பற்றி கருத்துத் தெரிவிக்க அறிவிப்பு வெளியிடப்பட்டு விவாதங்கள் நடந்து கொண்டிருக்கும் வேளையில் பாஜகவின் கூட்டணிக் கட்சியினர், அவர்கள் ஆட்சி செய்யக் கூடிய வடகிழக்கு மாநிலங்களில் மலைவாழ் பழங்குடியின மக்களுக்கு மேகாலயாவில், மிசோரமில், நாகாலாந்தில் பொதுசிவில் சட்டத்தை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று தெளிவாகச் சொல்லி விட்டார்கள். உடனே நாடாளுமன்ற நிலைக்குழுவில் அதன் தலைவர் சுஷில் மோடி நாங்கள் பொது சிவில் சட்டத்திலிருந்து பழங்குடியினருக்கு விலக்கு அளிப்போம் என்று சொல்லிவிட்டார். பட்டியல் இன மக்களில் கிட்டத்தட்ட பாதி அளவுக்கு பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு விலக்கு அளித்துவிட்டால் இது எப்படிப் பொதுவான சட்டமாகும்?

வாரிசுரிமையில் பெண்களுக்குச் சமமான சொத்துரிமை என்பது 2005ல்தான் வருகிறது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருகிறார்கள். அதற்கு முன்னர் வரைக்கும் அதைக் கொண்டுவர முடிய வில்லை. அதுதான் நிலைமை. பெண்களுக்கும் ஆண் களுக்கு நிகராகச் சொத்தில் பங்கு தரலாம் என்று சொன்னால் அனைத்துச் சமூகங்களும் அதை ஏற்றுக் கொள்ளும். ஒவ்வொரு சமூகத்திற்கும் இதுபோன்ற சட்டங்களைக் கொண்டு வந்து அதற்குப் பிறகு ஒரு பொதுவான சிவில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும்.

பொது சிவில் சட்டம் கொண்டு வரவேண்டாம் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் கொண்டுவரும் முறைதான் தவறு என்று சொல்கிறோம். குழந்தைத் திருமண ஒழிப்புச் சட்டத்தை யாராவது எதிர்ப்பார்களா? முதன்முதலில் குழந்தைத் திருமண ஒழிப்புச் சட்டம் வந்தபோது அதை எதிர்த்தவர் திலகர். இந்துப் பெண்களை எந்த வயதில் வேண்டுமானாலும் திருமணம் செய்து கொடுப்போம் என்று சொன்னார். சங்கராச்சாரியார் 6 வயதில் 8 வயதில் திருமணம் செய்து கொள்ளலாம் என்று சொன்னார். ஆனால் சனாதனவாதிகளாக இருப்பவர்கள் கூட இன்றைக்கு இதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இது போன்ற மதச்சார்பற்ற சட்டங்கள் கொண்டு வரப்பட்ட வேண்டும்.

இன்று பாஜகவின் கூட்டணிக் கட்சியாக இருப்பவர் களும், எதிர்க்கட்சி அணியில் இல்லாத கட்சிகளும்

இப்பொழுது பொது சிவில் சட்டம் கொண்டு வருவதைக் கடுமையாக எதிர்க்கிறார்கள். எடப்பாடி பழனிச்சாமி நாங்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொல்லிவிட்டார். பாட்டாளி மக்கள் கட்சியும் பொது சிவில் சட்டத்தை இப்போது கொண்டு வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறது. அதேபோல மாயாவதியும் சொல்லி இருக்கிறார்.

ஆம் ஆத்மி கட்சியினர் இந்துத்துவக் கருத்துகளைக் கொண்டவர்கள் தான். அவர்கள் பொது சிவில் சட்டத்தை ஆதரிப்பதாகச் சொன்னார்கள். அகாலிதளம் பொதுசிவில் சட்டத்தை எதிர்த்தது, ஆம்ஆத்மிக்கு எதிராகப் பரப்புரை செய்தவுடன் ஆம்ஆத்மி கட்சியின் முதலமைச்சர் பஞ்சாபில் நாங்களும் பொது சிவில் சட்டத்தை எதிர்க்கிறோம் என்று சொல்கிறார். 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது அகாலி தளம் பாஜக கூட்டணியில் இருந்த கட்சி. எனவே இந்தச் சூழலில் பொது சிவில் சட்டம் கொண்டு வருவது உகந்தது இல்லை என்பதும் அனைத்து தரப்பினரின் சம்மதத்துடன்தான் பொது சிவில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

ஆகவே அம்பேத்கர் அவர்கள் அரசமைப்பு அவையில் நடந்த விவாதத்தில் சொன்னது போல பொது சிவில் சட்டம் என்பது வற்புறுத்தலின் பெயரில் இல்லாமல் விருப்பத் தேர்வாக இருக்கவேண்டும். அதை இந்த அரசாங்கம் தெளிவாக மக்களுக்குச் சொல்ல வேண்டும். வாரிசுரிமையில் பெண்களுக்கு சரிசமமாகச் சொத்துகளைக் கொடுக்கவேண்டும் என்பதை இன்று அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்வார்கள். குடியுரிமைச் சட்டத்திருத்திற்கு எதிராக ஷாகின்பாக்கில் போராடியவர்கள் பெண்கள்தான். தலாக் தலாக் தலாக் என்று சொல்வதை இன்று ஏற்றுக்கொள்வார்களா? எனவே இந்தப் பிரச்சனைகளுக்கு எல்லாம் தீர்வு என்பது நிதானமாக அனைவருடைய ஒப்புதலின் அடிப்படையிலும் இந்துச் சட்டம் போன்று இஸ்லாமிய தனிநபர் சட்டங்களையும், உருவாக்கிக் மற்ற ஒவ்வொரு மதத்தினருக்குமான தனிநபர் சட்டங்களையும் கொண்டு வரவேண்டும். எல்லாத் தரப்பினரின் தனிநபர் சட்டங்களும் ஒவ்வொரு தூணாக ஆக ஒரே உயரத்திற்கு வரும்போது நாம் பொதுசிவில் சட்டம் என்றொரு சாலையை அமைப்பது எளிதாக இருக்கும். ஏனென்றால் நாம் யாரும் பொதுசிவில் சட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஐரோப்பா முழுவதும் பொது சிவில் சட்டம் இருக்கிறது, எகிப்தில் இருக்கிறது, துருக்கியில் இருக்கிறது என்று அந்த விவாதத்தில் அம்பேத்கரும் முன்ஷியும் அல்லாடி கிருஷ்ணசாமியும் சொல்லி இருக்கிறார்கள்.

விவாகரத்தை உள்ளடக்கிய திருமணம் தொடர்பான சட்டங்கள், வாரிசுரிமை தொடர்பான சட்டங்கள் ஆகிய இவை அனைத்தும் மதம் சார்ந்திருப்பதற்குப் பதிலாக பொதுவான ஒருசட்டமாக அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் ஆஸ்திரேலியாவிலும் இருப்பது போன்ற ஒரு சட்டத்தை இங்கேயும் கொண்டு வரவேண்டும் என்பது தான் நம்முடைய இலட்சியமாக இருக்கிறது. ஆனால் பொதுவான சட்டங்களை கொண்டு வரும் நோக்கம் ஏதும் இந்த மோடி அரசுக்கு இல்லை. ஏனென்றால் இவர்கள் குழந்தைத் திருமண ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்தவர்கள், அதேபோல் சிறப்புத் திருமண சட்டத்தை ஆதரிக்காதவர்கள். சிறப்புத் திருமணச் சட்டத்தில் கொடுக்கப்படும் அறிவிப்பு காலத்தில் லவ் ஜிகாத் என்ற பெயரில் தகராறு செய்து இரண்டு மதங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையில் நடைபெறும் திருமணத்தை நிறுத்திவிடும் அடாத செயலைச் செய்கிறார்கள் சனாதனிகள்.

எனவே பொதுவான சட்டங்களைக் கேட்பவர்கள் நாம்தான். சட்டங்கள் மதச்சார்பற்றவையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் இதனைச் சிறுபான்மையினருக்குப் பீதியை ஏற்படுத்தும் வகையில் செய்யக்கூடாது என்பதைத் தான் நாம் கேட்கிறோம். அவர்கள் கூட்டணியில் இருக்கக் கூடிய வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடி சமூகத்தைச் சார்ந்தவர்கள் இதை எதிர்த்த உடனேயே அவர்களுக்கு விலக்கு அளித்தபோதே அவர்கள் தோல்வி அடைந்துவிட்டார்கள். அதை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும். எனவே பொதுசிவில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமானால் 21ஆவது சட்ட ஆணையம் வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். ❖

## தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி மக்கள் கவன ஈர்ப்புக் கருத்தரங்கம்

தமிழ்வழிக் கல்வி இயக்கமும், தமிழர் நீதிக்கட்சியும் இணைந்து 29.7.2023 அன்று செயங்கொண்ட சோழபுரத்தில் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி மக்கள் கவன ஈர்ப்பு கருத்தரங்கத்தை நடத்தியது. ப. முத்துக்குமரன் தலைமை தாங்கினார். புலவர் இர. அரங்கநாடன் தொடக்கவுரையாற்றினார். அ.சி. சின்னப்ப தமிழர், சி. பன்னீர்செல்வம், தமிழ்க்களம் த.இளவரசன், தங்கத்தமிழன் சுப. இளவரசன் ஆகியோர் கருத்துரையாற்றினர். சீனி அறிவுமழை பாடல் பாடினார். கோ. இராமகிருட்டிணன் நன்றியுரையாற்றினார்.

# நரேந்திரரே!
# நீங்கள் ஆண்டது போதும்! மக்கள் மாண்டது போதும்!

- பேராசிரியர் மு. நாகநாதன்

அமைதியான சூழலில் தான் சமூகத் தளத்தில் ஒற்றுமை ஓங்கும்.

ஒற்றுமை மிகுந்த நாட்டில் தான் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

சமூக நீதியோடு இணைந்த பொருளாதார வளர்ச்சியில் தான் பகிர்வு நீதி நிலைபெறும்.

இன்று எங்கும் பிளவு, எதிலும் பிணக்கு என்பதையே ஆட்சியியலாக மாற்றி, அதை ஊக்குவிக்கும் தன்மை சங்கிகளின் இன்றைய ஆட்சியில் தலைவிரி கோலமாகத் தாண்டவமாடுகிறது.

குஜராத்தில் கோத்ராவில் தொடங்கி மணிப்பூர் வரை மக்களைப் பிளவுபடுத்திக் குருதி குளியலில் மக்கள் மடிந்தனர்; மடிகின்றனர். மக்களின் அன்றாட நுகர்பொருட்களின் விலைகள் விண்கலன் வேகத்தில் மேல் நோக்கிப் பயணம் செய்கின்றன. பல பொருளாதார அறிஞர்களின் கணிப்புகள் பொய்த்து வருகின்றன. இங்கிலாந்து நாட்டின் பொருளாதாரப் பேராசிரியர் ஆல்பிரட் மார்ஷல் 81 வயது வரை வாழ்ந்தவர். 1924-ஆம் ஆண்டு மறைந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றினார். ஆல்பிரட் மார்ஷல் மறைவுக்குப் பிறகு பல்கலைக்கழக நூலகத்திற்கு அவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மார்ஷல் எழுதிய “பொருளாதாரக் கோட்பாடுகள்” என்ற நூலைப் பாடத் திட்டத்தில் சேர்க்காத பல்கலைக்கழகங்கள் இல்லை எனலாம். தேவை ஆர்வம் (Demand), அளிப்பு (Supply) என்ற இரு கூறுகள் சந்தைப் பொருளாதாரத்தை இயக்குகிறது; மாற்றுகிறது. விலை உயர்வு, விலை சரிவு ஆகியன சந்தையில் பொருட்களின் அளிப்பு தன்மையாலும், நுகர்வோரின் தேவை ஆர்வத்தாலும் ஏற்படுகின்றன என்று ஆல்பிரட் மார்ஷல் விளக்கினார். நுகர்வோர் மிகை என்ற கோட்பாட்டையும் முன்மொழிந்தார். அழுகும் பொருட்களை (Perishable Commodities) வாங்கும் விற்கும் சந்தையைத் தற்காலிகச் சந்தை (Short Term Market) என்று அழைத்து அச்சந்தை இயங்கும் முறைகளையும் மார்ஷல் விளக்கினார்.

தக்காளி போன்ற நுகர்பொருட்கள், பழங்கள் ஆகிய பொருட்களின் அளிப்பு காரணிகளுக்கேற்ப (Supply Factors) விலைகள் ஏறும், இறங்கும் என்று விளக்கம் அளித்தார். இப்பொருட்கள் விரைவில் அழுகும் அல்லது அழிந்து விடும் நிலை இருப்பதால் மற்ற நீண்டகால பொருட்களின் விலை ஏற்றம் போல் அமையாது என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் இந்தியாவில் குறுகிய கால சந்தைப் பொருட்களுக்கும், நீண்டகால சந்தைப் பொருட்களுக்கும் மார்ஷல் கூறியது போன்று பெரும் வேறுபாடுகளைக் காணமுடியவில்லை. தற்போது ஒரு கிலோ தக்காளி விலை 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. பெட்ரோலியப் பொருட்களின் விலையைவிட இரட்டிப்பு விலையில் விற்கப்படுகிறது. வெங்காயம், இஞ்சி, பூண்டு, பச்சை மிளகாய், உருளைக் கிழங்கு ஆகிய உணவுப் பொருட்களின் விலையும் சந்தைப் பொருளியலாளர்கள் குறிப்பிட்ட, கணித்த அடிப்படை கூறுகளைச் சிதைத்து உயர்ந்து வருகின்றன.

சந்தைப் பொருளாதாரம் கொள்ளை இலாபம் ஈட்டும் கருவியாக மாறி, இந்தியா முதலாளிகளின் சொர்க்கமாக மாறிவிட்டது. ஏழைகள் விலைவாசி உயர்வு எனும் கொதி கலனில் வெந்து, வீழ்ந்து வருகின்றனர்.

சான்றாக, ஆப்பிளும் தற்காலிக சந்தை கூறுகளை உள்ளடக்கிய ஒரு நுகர்பொருளாகும். இமாச்சல மாநிலத்தில் விளையும் ஆப்பிள் விலை இன்று ஒரு கிலோ ரூபாய் 320/-க்கு விற்பனை செய்யப் படுகிறது. ஆண்டிற்கு ரூபாய் 5000 கோடி அளவுக்கு ஆப்பிள் வேளாண்குடியினரால் உற்பத்தி செய்யப்படுகிறது. 2022-ஆம் ஆண்டு இமாச்சல மாநிலத்தின் ஆப்பிள் உற்பத்தி செய்யும் வேளாண் குடியினர் பிரதமர் நரேந்திரரின் பேரன்பர் அதானி நடத்தும் வேளாண் பொருட்கள் குழுமத்தின் முன்பு முற்றுகை போராட்டம் நடத்தினர்.

என்ன காரணம் தெரியுமா?



2017-ஆம் ஆண்டு அதானி வேளாண் குழுமம் ஒரு கிலோ ஆப்பிள் ரூபாய் 85 விலைக்கு உழவர்களிடமிருந்து நூற்றுக்கணக்கான டன் ஆப்பிள்களை வாங்கியது. ஆனால் 2022-ஆம் ஆண்டில் கிலோ ஆப்பிள் ரூபாய் 76-க்குத் தான் வாங்க முடியும் என்று அறிவித்தது. விவசாயிகள் கடந்த சில ஆண்டுகளாக உற்பத்தி செலவு 50 மடங்கு உயர்ந்துவிட்டது எனக் குறிப்பிட்டு அதானி குழுமத்தின் அடாவடி விலை குறைப்பிற்கு எதிராகப் போராட்டம் அறிவித்தனர். பிரதமர் நரேந்திரர் தலைமையிலான ஒன்றிய அரசு இமாச்சல மாநிலத்தின் விவசாயிகளுக்கு ஆதரவாக எவ்வித நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை.

2020-ஆம் ஆண்டில் ஒன்றிய அரசு மூன்று வேளாண் சட்டங்களை இயற்றி, தனியார் முதலாளிகளின் பிடியில் வேளாண் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்யும் முறையை அதாவது சந்தைப்படுத்தல் முறையை நடை முறைப்படுத்த முற்பட்டது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு இலாபம் ஈட்டும் வகையில் இந்தச் சட்டங்கள் பயன்படும் என்று மனதின் குரல் நாயகன் நரேந்திரர் மன சாட்சியின்றி உரத்த குரலில் ஒலித்தார். அவரது அடிப்பொடிகள் தப்புத்தாளம் தட்டினர்.

இன்று ஆப்பிள் சந்தையில் அதானி குழுமம் இலாப வேட்டை ஆடும் போக்கை நன்கு கணித்து, உணர்ந்து ஓராண்டிற்கு மேல் புதுதில்லியை முற்றுகையிட்டுப் போராடி வேளாண் குடியினர் வெற்றி பெற்றனர். மூன்று சட்டங்களும் ஒன்றிய அரசால் திரும்பப் பெறப்பட்டன.

இந்தச் சட்டங்கள் நிறைவேற்றப்படாமலேயே வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யும் விவசாயிகளும் நுகர்வோர் களும் சுரண்டப்படுகின்றனர். சட்டம் இயற்றப்பட்டிருந்தால் அரசுத் துணையோடு மக்களைச் சூறையாடியிருப்பார்கள்.

மணிப்பூர் மௌன குரு நரேந்திரர் முன் வைக்கும் ஒவ்வொரு சட்டத்திற்கும், ஒவ்வொரு நகர்விற்கும் பின் அதானி அம்பானிகள்தான் உள்ளனர். ஆஸ்திரேலியா சுரங்கம் தொடங்கி இலங்கை சூரிய ஒளி மின்சார உற்பத்தி ஒப்பந்தம் வரை அதானி அதானி என்பதைத்தானே வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இதுபோன்ற முறையற்ற கொள்ளை இலாபம் அடித்ததால்தானே உலகின் பணக் காரர்கள் பட்டியலில் அதானியால் இடம்பெற முடிந்தது.

எப்படி மோசடி செய்து அதானி பணக்காரராக ஆனார் என்பதை ஹின்டன்பர்க் அறிக்கையும் அம்பலப்படுத்தியது.

இதுபோன்று காட்டை, நாட்டை முதலாளிகளிடம் ஒப்ப டைக்கும் நிலைக்குக் கண்டனம் தெரிவிக்கும் உரையாடல் களை ஊடகங்களில் காணமுடியாது. இந்திய ஊடகங்களைப் பெரும் முதலாளிகள் வாங்கி விட்டனர். செய்திகள் உண்மை களை உணர்த்தாது. சாணியைச் சந்தனம் என்று முதல் பக்கத்தில் வெளியிடுகிறார்கள். புரட்டுத் திருட்டுகளை வலதுசாரிகள் என்கிற சங்கிகள் நேர்மை நீதி என்று ஒளி ஊடகங்களில் பிதற்றுகிறார்கள்.

ஏழை, நடுத்தர மக்களின் அன்றாட வாழ்க்கை கேள்விக் குறியாக மாறி வருகிறது. விலையேற்றம், வேலையில்லாக் கொடுமை, தற்காலிக வேலையில் குறைந்த கூலி, தாங்க முடியாத மறைமுக வரிகள்! மக்கள் சுமைதாங்கிகளாக அச்சத்தோடும் மனதில் கவலையோடும் வாழ்கிற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இச்சூழலில் மணிப்பூர் பெண்கள் கற்பழிப்பு படுகொலை கள் உலக நாடுகளிடையே இந்தியாவிற்குக் களங்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்களின் கோபம் எங்கும் காணப் படுகிறது.

நரேந்திரரே நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும் என்று மக்கள் மன்றம் கேட்கத் தொடங்கிவிட்டது.

(1956ஆம் ஆண்டு அரியலூரில் தொடர் வண்டி விபத்து நடந்தது. 110 பேர்கள் இறந்தார்கள். அப்போது தொடர் வண்டி துறையின் அமைச்சராக இருந்த லால்பகதூர் சாஸ்திரி பதவி விலகினார். அப்போது துணை அமைச்சராக இருந்த தமிழ்நாட்டைச் சார்ந்த ஓ.வி. அழகேசன் பதவி விலகவில்லை. இதுகுறித்து அறிஞர் அண்ணா - ‘‘அரியலூர் அழகேசரே! நீங்கள் ஆண்டது போதும்; மக்கள் மாண்டது போதும்’’ என்று குறிப்பிட்டார்.

அண்ணாவின் சொல்லாடல் இன்றும் தேவைப்படு கிறதல்லவா!

**- முகநூல் பதிவு**

## கலைஞர் நூற்றாண்டு விழா தெருமுனைக் கூட்டம்




புதிய குரல் அமைப்பின் சார்பில் 22.7.2023 சனி மாலை 6 மணிக்கு கோடம்பாக்கம் காமராசர் காலனி 6ஆவது தெருவில் கலைஞர் நூற்றாண்டு விழா நடைபெற்றது. தியாகராயர் நகர் ச.ம.உ. ஜெ.கருணாநிதி வாழ்த்துரை வழங்கினார். வாலாசா வல்லவன் அவர் களும் ஓவியா அவர்களும் சிறப்புரையாற்றினர். மந்திரமா தந்திரமா, நிகழ்வும் ‘‘நவீன ஏகலைவன்’’ நாடகமும் நடைபெற்றது. மகாலட்சுமி வரைவேற்பு ரையாற்றினார். உதயகுமார் நன்றிரையாற்றினார்.

# மணிப்பூர் கலவரத்தின் ஆணிவேர்

- க. முகிலன்

இப்போது இந்தியாவின் மக்கள் தொகை 142.8 கோடி. உலக மக்கள் தொகையில் இந்தியா சீனாவை (142.5 கோடி) விஞ்சி முதலிடத்தில் இருக்கிறது. ஆனால் இந்தியாவின் வடகிழக்கில் மியான்மரை ஒட்டியுள்ள 34 இலட்சம் மக்கள் தொகை கொண்ட சிறிய மாநிலமான மணிப்பூரில் கடந்த மூன்று மாதங்களாக குக்கி-மெய்தி இன மக்களுக்கிடையே நடந்துவரும் வன்முறை மோதல்களை நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஒரு முடிவுக்குக் கொண்டு வரவில்லை.

மோடி உலகத்திற்கே வழிகாட்டக்கூடிய தலைவர் - விஸ்வ குரு - என்று சங்பரிவாரங்கள் தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கின்றன. உலக நாடுகள் இந்தியாவை உற்று நோக்கி பெருமிதத்துடன் பார்க்கின்றன என்று நரேந்திர மோடி அவ்வப்போது திருவாய்மலர்ந்து கொண்டிருக்கிறார். மோடியின் படைத் தளபதியாக விளங்கும் அமித்ஷா இந்தியா கண்டெடுத்த இரண்டாவது சாணக்கியன் என்றும் அரசியலில் காய் நகர்த்துவதில் சூராதிசூரன் என்றும் சங்கிகளாலும் முதலாளிய ஊடகங்களாலும் புகழப்படுகிறார். அமித்ஷா மே மாத இறுதியில் நான்கு நாட்கள் பயணமாக மணிப்பூர் சென்று வந்த பின்னும் அங்கு மரண ஓலங்கள் ஓயவில்லை. பிரான்சில் மோடி விருது வாங்கிக் கொண்டிருந்த வேளை யில் அய்ரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம் மணிப்பூர் கலவரங்கள் குறித்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியது. அமெரிக்காவின் அயலுறவுத் துறை அமைச்சர் தன் கண்டனத்தையும் பதிவு செய்துள்ளார்.

இந்தியாவின் வடகிழக்கில் உள்ள அசாம், மணிப்பூர், திரிபுரா, நாகாலாந்து, இமாசலப்பிரதேசம், மிசோரம், மேகலாயா ஆகிய மாநிலங்கள் 'ஏழு சகோதரிகள்' எனப்படுகின்றன. இவற்றுள் அசாம் மாநிலம் தவிர்த்த மற்ற மாநிலங்கள் சிறியவை; மலைகளும் காடுகளும் நிறைந்தவை; பெருமளவில் பழங்குடியினர் வாழ்பவை. சுதந்திரத்திற்குமுன் மணிப்பூரும் திரிபுராவும் மன்னராட்சிப் பகுதிகளாக இருந்தன.

முதல் உலகப் போரின் போது வெளிநாடுகளுக்குச் சென்று போரிடுவதற்கு பிரித்தானியப் படையில் சேர குக்கிகள் மறுத்ததற்காக குக்கிகளுக்கும் ஆங்கிலேயப் படையினருக் கும் இடையில் 1917-19-இல் போர் நடந்தது. குக்கிகள் தரப்பில் பெரும் உயிரிழப்பு ஏற்பட்ட போதிலும், ஆங்கிலேயர்க்கு அடிபணிய மறுத்த மறவர்கள் அவர்கள். குக்கிகளின் போர் முழக்கத்துடன் எழுப்பப்பட்ட போர் நினைவிடம் மணிப்பூர் தலைநகர் இம்பாலில் இருக்கிறது. ஆனால் கடந்த மே மாதம் குக்கி-மெய்திகளுக்கிடையே மோதல் ஏற்பட்ட பின், குக்கிகளின் போர் முழக்கக் கல்வெட்டு நீக்கப்பட்டதுடன், நினைவுச் சின்னமும் இழிவுபடுத்தப்பட்டது.

1949 செப்டம்பர் 21 அன்று மணிப்பூர் இந்தியாவுடன் இணைந்தது. அப்போது அரசமைப்புச் சட்டக் கூறு 371-சி




மூலம் மணிப்பூரில் குக்கி, நாகா உள்ளிட்ட பழங்குடிகள் நிலத்தின்மீது பெற்றுள்ள உரிமை பாதுகாக்கப்படும் என்று உறுதி செய்யப்பட்டது. மலைவாழ் பழங்குடியினரிடையே நிலத்தின் மீதான தனியுடைமை என்பதில்லை. மலையும் காடும் நிலமும் அனைவருக்கும் உரியது என்றே எண்ணுவர். மணிப்பூரில் தற்போதுள்ள கலவரத்திற்கு மூலமுதல் காரணம் பழங்குடியினரிடமிருந்து நிலத்தையும் காடுகளையும் பறித்து தனியார் முதலாளிய நிறுவனங்களுக்குத் தரவேண்டும் என்கிற பா.ச.க.வின் கொள்கையே ஆகும்.

1972-இல் மணிப்பூருக்கு மாநிலத் தகுநிலை ஒன்றிய அரசால் அளிக்கப்பட்டது. அரசமைப்புச் சட்டக் கூறு 371சி-யின் அடிப்படையில் மலைப் பகுதிக்கான ஒரு குழு உருவாக் கப்பட்டது. இதில் மலைப்பகுதியின் 19 சட்டமன்ற உறுப்பினர்கள் (இப்போது மணிப்பூர் சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர் 60; மலைப் பகுதிக்கு 20; சமவெளிக்கு 40) இருப்பார்கள். 13 துறைகள் மீதான பொறுப்பு இக்குழுவிடம் ஒப்படைக் கப்பட்டது. இக்குழுவின் ஒப்புதல் இல்லாமல் மலைப் பகுதியில் நிலம் வாங்க முடியாது. காலப்போக்கில் மலைப் பகுதிக்கான குழு முறையாகச் செயல்படவில்லை.

மலைப்பகுதியின் நிலங்களைக் கைப்பற்ற வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு பள்ளத்தாக்குப் பகுதியில் வாழும் மெய்திகள் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று தொடர்ந்து போராடி வருகின்றனர். மணிப்பூரில் கல்வி, அரசு வேலை வாய்ப்பு, மருத்துவம், பொருளாதார வளர்ச்சி முதலானவற்றில் மக்கள் தொகையில் 53 விழுக்காட்டினராக உள்ள மெய்தியினரே பெரும்பங்கைப் பெற்றுள்ளனர். மணிப்பூரில் உள்ள 9 பல்கலைக்கழகங் களில் 8 தலைநகர் இம்பாலில் உள்ளன. பழங்குடியினருக் கான இந்திராகாந்தி பல்கலைக்கழகம் மட்டும் இம்பால் நகரையொட்டிய மலையடிவாரத்தில் உள்ளது.

**மணிப்பூர் பல்கலைக்கழகத்தில் வேலையில் இருப்போர் பட்டியல்**

| | மொத்த இடங்கள் | பழங்குடியினர் |
|---|---|---|
| பேராசிரியர்கள் | 165 | 3 |
| கற்பித்தல் அல்லாத பணிசெய்வோர் | 322 | 38 |
| ஒப்பந்தப் பணியாளர் | 130 | 3 |

**கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் மணிப்பூர் மாநிலத்தில் உள்ள இடப்பங்கீடு அளவு**

| | |
|---|---|
| பிற்படுத்தப்பட்டோர் | 17% |
| தாழ்த்தப்பட்டோர் | 2% |
| உயர்சாதி பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் (EWS) | 10% |
| பட்டியல் பழங்குடியினர் | 31% |
| மொத்த இடஒதுக்கீடு | 60% |

மெய்திகள் பிற்படுத்தப்பட்டோருக்கான 17%, EWS 10% மற்றும் பொதுப் போட்டியில் உள்ள 40% இடங்கள் என 67% இடங்களை அனுபவிக்கின்றனர். மொத்த மக்கள் தொகையில் மெய்திகள் 53%. அவர்களின் விகிதத்தைவிட கூடுதலாகவே கல்வியிலும் வேலையிலும் இடஒதுக்கீடு பெறுகின்றனர். அதனால் மெய்திகள் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோருவது பழங்குடிகள் வாழும் நிலப்பகுதியைக் கையகப்படுத்த வேண்டும் என்பதற்காகவேயாகும். மேலும் பழங்குடியினர் பட்டியலில் இடம்பெற்றால் மலைகளில் வாழும் குக்கி, நாகா பழங்குடியினருக்கான 31% இடஒதுக்கீட்டையும் ஏப்பம் விடலாம் என்பது இரண்டாவது காரணம்.

பள்ளத்தாக்குப் பகுதியில் வாழும் மெய்திகள் வைணவத்தைப் பின்பற்றும் இந்துக்கள். தங்களைச் சத்திரியர் என்று கூறிக்கொள்வதால் தங்கள் பெயருக்குப் பின் ‘சிங்’



என்று சேர்த்துக் கொள்கின்றனர். மணிப்பூர் முதலமைச்சர் பெயர் பிரேன்சிங். இவர்கள் வேளாண்மையும், தொழிலும், வணிகமும் செய்பவர்கள். நாகரிக வாழ்க்கை வசதிகள், உயர்கல்வி, உயர் பதவிகளில் இருக்கின்றனர். அரசியல் அதிகாரம் இவர்களிடமே உள்ளது. எனவே எவ்வகையிலும் பழங்குடிப் பட்டியலில் மெய்திகளைச் சேர்க்கப்படுவதற்கான எந்தக் கூறும் இல்லை.

இவர்கள் முன்வைக்கிற வாதம் - மணிப்பூரின் மொத்தப் பரப்பில் 10 விழுக்காடு நிலப்பகுதியில் 53 விழுக்காட்டினரான மெய்திகள் வாழ்கின்றனர்; மீதி 90 விழுக்காடு நிலப்பரப்பில் 41 விழுக்காடாக உள்ள பழங்குடியினர் வாழ்கின்றனர்; எனவே மலைப்பகுதியில் எங்களுக்கு நிலம் பெறும் உரிமை வேண்டும் என்பதாகும். பழங்குடியினர் கரடுமுரடான மலைப்பகுதிகள், அடர்ந்த காடுகள், வாழ்வாதாரத்திற்கான வாய்ப்புகள் அற்ற வறுமை நிலையில் வாழ்கின்றனர் என்கிற உண்மையை மெய்திகள் மூடி மறைக்கின்றனர். **மெய்திகளைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பது பழங்குடியினரின் இடஒதுக்கீட்டை அவர்களுக்குக் கிடைக் காமல் செய்வதுடன், இடஒதுக்கீட்டு வாய்ப்பின் மூலம் கல்வியிலும் பணிவாய்ப்பிலும் பொருளாதாரத்திலும் முன்னேறவிடாமல் தடுக்கும் சூழ்ச்சியாகும்.** பெரும்பான்மையினர் இந்துக்களாக இருக்கும் மெய்திகளுக்கும் பெரும்பான்மை யினர் கிறித்தவர்களாக உள்ள குக்கி, நாகா இனத்தவருக்கு மான மத முரண்பாடு என்ற அளவில் இதைச் சுருக்கிப் பார்க்க முடியாது. அதேசமயம் குக்கி-மெய்தி மோதலில் மதம் வகிக்கும் பங்கை அடியோடு புறக்கணிக்கவும் முடியாது. 2017-2021 காலத்தில் மணிப்பூரில் ஒதுக்கப்பட்ட 21,900 கோடி நிதியில் மெய்தி பகுதிக்கு 20,480 கோடியும் பழங்குடியினர் பகுதிக்கு 420 கோடியும் பிரித்தளிக்கப்பட்டது என்பதிலிருந்தே பழங்குடியினர் எந்த அளவுக்குப் புறக்கணிக்கப்படுகின்றனர் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

தற்போது மணிப்பூர் முதலமைச்சராக உள்ள பிரேன்சிங் 2003 முதல் 2016 வரை காங்கிரசுக் கட்சியில் இருந்தவர்; அமைச்சராகவும் இருந்தார். 2017இல் சட்டமன்றத் தேர்தலுக்கு 5 மாதங்களுக்கு முன் பா.ச.க.வில் இணைந்தார். பா.ச.க.வில் வெற்றி பெற்று மணிப்பூரின் முதலாவது பா.ச.க. முதல்வரானார். அசாமில் தற்போது பா.ச.க. முதலமைச்சராக உள்ள ஹிமந்தா பிஸ்வாஸ் சர்மா காங்கிரசில் தலைவராக இருந்தவர். பா.ச.க.வால் கடுமையான ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளானவர். பா.ச.க.வில் சேர்ந்ததும் புனிதராகி முதலமைச்சராகிவிட்டார். வடகிழக்கு மாநிலங்களிலும் மத்தியப் பிரதேசம், கர்நாடகம், மகாராட்டிரம் போன்ற பெரிய மாநிலங்களிலும் பா.ச.க. தன் அரசியல் அதிகாரத்தை, பண வலிமையைப் பயன்படுத்தி கும்பலாக சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி தன் கட்சி ஆட்சியை அமைத்து சனநாயக நெறிமுறைகளைக் குழி தோண்டிப் புதைத்து வருகிறது. **மணிப்பூர் முதல்வர்**

**பிரேன்சிங் 2019இல் சட்டமன்றத்தில் மெய்தி களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பேன் என்று அறிவித்தார். பா.ச.க. தேர்தல் அறிக்கையிலும் இது இடம்பெற்றிருந்தது. இவ்வாறாக 2012 முதலே குக்கி-மெய்தி பிரிவினருக்கிடையே வெறுப்பும், நம்பிக்கை யின்மையும், பகையும் உருவாவதற்கான சூழலை பா.ச.க. திட்டமிட்டு உருவாக்கி வந்தது.**



இத்திட்டத்தின் ஒரு பகுதியாக 2018-இல் பா.ச.க. ஆட்சி, பழங்குடிகள் பெற்றுள்ள நிலவுரிமையைக் குலைக்கும் வகையில் ஒரு சட்டத்தை இயற்றியது. இதை குக்கி, நாகா பழங்குடியினர் கடுமையாக எதிர்த்துப் போராடினர். சுராசந்த் மாவட்டத்தில் நடந்த காவல்துறையின் துப்பாக்கிச் சூட்டில் ஒன்பது குக்கிகள் மாண்டனர். இச்சட்டம் ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு, கிடப்பில் இருக்கிறது.

தங்கள் நிலவுரிமைக்கு ஏற்பட்டுவரும் அச்சுறுத்தலைத் தடுக்கும் வகையில் மணிப்பூர் மலைப்பகுதிக்குழுவைச் (Hill Area Council - HAC) சேர்ந்த 18 சட்டமன்ற உறுப்பினர்கள் தன்னாட்சி மாவட்ட அவைகள் சட்டத்திருத்தத்தைச் (Autonomous District Councils Amentment Bill) சட்டமன்றத்தில் முன்மொழிந்தனர். முதல்வர் பைரேன்சிங் இம்முன்மொழிவு நீர்த்துப் போகும் வகையில் ஒரு சட்ட முன்வரைவைக் கொண்டு வந்தார். இதை குக்கி, நாகா பழங்குடியினர் எதிர்த்தனர். எந்த முடிவும் எட்டப்படாமல் இடையில் நின்று போனது.

சங் பரிவாரங்களும் பா.ச.க.வும் ஒரு தாக்குதலைத் தொடுப்பதற்குமுன், அதற்கான சூழலை உருவாக்குவார்கள். அதற்காக பொய்யான வதந்திகளைப் பரப்புவார்கள். அதை குறிப்பிட்ட அளவு மக்கள் நம்பும் வகையில் தீவிரமாகச் செயல்படுவார்கள்.

ஒரு பொது எதிரியைச் சுட்டிக்காட்டி மக்களை அணிதிரட்டுவார்கள். 1980 முதல் இவர்களின் செயல்பாடு இத்தன்மையில் இருப்பதைக் காணலாம். அயோத்தியில் இராமன் பிறந்த இடம் 400 ஆண்டுகளாக இருக்கும் பாபர் மசூதி தான் என்று நம்ப வைத்து அதை இடித்தார்கள். முகலாயர் ஆட்சியில் இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன; இந்துக்கள் கொடுமைப்படுத்தப்பட்டனர் என்று கூறிவரு கின்றனர். இசுலாமியர்கள் இந்திய நாட்டின் மீது 'விசுவாசம்' இல்லாதவர்கள்; இந்துக்களின் எதிரிகள் என்று வெறுப்பு நெருப்பை நாள்தோறும் உமிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வெறுப்பு அரசியலை மூலதனமாகக் கொண்டு தொடர்ந்து ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள்.

மணிப்பூரிலும் குக்கிகளை மெய்திகள் எதிரிகளாகக் கருதுவதற்கான பரப்புரைகளை, செயல்பாடுகளை பா.ச.க. ஆட்சி மேற்கொண்டு வருகிறது. 1971-க்குப் பிறகு வங்க தேசத்திலிருந்தும் மியான்மரிலிருந்தும் குக்கிகள் பெரும் எண்ணிக்கையில் மணிப்பூரில் குடியேறி வாழ்ந்து வரு கின்றனர் என்று கூறுகின்றனர். எனவே மணிப்பூருக்கான தேசிய குடிமக்கள் பதிவேட்டை ஏற்படுத்த வேண்டும். 1961-ஆம் ஆண்டிற்குப் பின் மணிப்பூரில் குடியேறிய குக்கிகளை வெளியேற்ற வேண்டும் என்று மெய்திகள் கோரி வருகின்றனர். **மெய்தி இளைஞர்களைக் கொண்ட மெய்தி லீபம், அரம்பாய் டென்கோல் எனும் இரண்டு தீவிரவாத அமைப்புகள் உள்ளன. இவ்விரு அமைப்புகள் தாம் காவல் துறையின் 4000 துப்பாக்கிகளைக் களவாடிச் சென்றனர்.** மெய்தி லீபம் தலைவர் பிரமோத் சிங், பிரித்தானியர்கள் பர்மாவிலிருந்து குக்கிகளை மணிப் பூரில் குடியமர்த்தினர்; எனவே குக்கிகள் அனைவருமே வந்தேறிகள்; மெய்திகள் மட்டுமே மணிப்பூரின் தொல்குடியினர் என்று கூறுகிறார். ஆனால் முதல்வர் பிரேன் சிங் அய்ந்து ஆண்டுகளுக்கு முன் மணிப்பூரில் புலம்பெயர்ந்த குடியேறிகள் யாரும் இல்லை என்றார்.

குக்கிகள் போதை தரும் (POPPY) பயிர்களைப் பயிரிடு கின்றனர்; போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. மலைப் பகுதிகளில் மனித நடமாட்டம் இல்லாத இடங்களில் வறுமையின் காரணமாக சிலர் இதைப் பயிரிடுகின்றனர். அதனால் குக்கிகள் அனை வருமே இதைப் பயிரிடுவது போல் சித்தரிக்கப்படுகின்றனர். ஆயினும் போதைப் பயிர்களைப் பயிரிடுவதற்குப் பணம் தருவதும், அதைக் கடத்துவதும், விற்பனை செய்வதும் மெய்தியைச் சேர்ந்த மாஃபியா கும்பல்களே ஆகும். பா.ச.க. ஆட்சியின் அரவணைப்புடன் இதைச் செய்கின்றனர் என்பது அண்மையில் அம்பலமானது. மணிப்பூர் மாநிலத்தின் காவல் துறை துணை கண்காணிப்பாளரான மனோஜம் பிருந்தா என்கிற நேர்மையான பெண் அதிகாரி போதைப்பொருள் கும்பல் தலைவனைக் கைது செய்தார். அவனை உடனே விடுதலை செய்யுமாறும், இதை பிரேன்சிங் தெரிவித்த தாகவும் மணிப்பூர் மாநில பா.ச.க. துணைத் தலைவர்

பிருந்தாவிடம் தொலைபேசியில் கூறினார். ஆனால் பிருந்தா அவனைச் சிறையில் அடைத்தார். உடனே நீதிமன்றம் மூலம் அவன் பிணையில் விடுதலையானான். இதனால் எரிச்சலடைந்த பிருந்தா இந்த விவரத்தைத் தன் முகநூலில் பதிவிட்டார். அதன்பின் அரசு பணியிலிருந்து விலகினார். இந்து கோயில்கள் மீது தாங்களே குண்டுவீசிவிட்டு முகமதியர் மீது பழிபோடுவது சங்பரிவாரங்களுக்குக் கைவந்த கலையாகும். மணிப்பூரில் போதைப் பயிர் ஒழிப்பு என்பதும் இதுபோன்றதேயாகும்.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்றும், காட்டுப்பகுதி விரிவாக்கம் செய்யப்படுகிறது என்றும் கூறி 2023 பிப்பிரவரி முதல் குக்கிகளை அவர்களின் வாழ்விடங்களிலிருந்து பிரேன் சிங் ஆட்சி விரட்டியடித்தது. இவ்வாறு 291 குடியிருப்புகளை அகற்றியதாக அரசே கூறுகிறது. அரசு, ஆயுதப்படையுடன் எப்போது தங்கள் குடியிருப்பை அகற்றுமோ என்று குக்கிகள் அச்சத்தில் ஆழ்ந்தனர்.

மலைப் பகுதிகளில் குக்கிகளை அவர்களின் வாழ்விடங் களிலிருந்து விரட்டும் பிரேன்சிங் ஆட்சியைக் கண்டித்து தொல் பழங்குடித் தலைவர்கள் கூட்டமைப்பு 10.3.2023 அன்று மலை மாவட்டங்களில் போராட்டம் நடத்தியது. பிரேன் சிங் ஆட்சி காவல்துறையை ஏவி அப்போராட்டத்தை ஒடுக்கியது. குக்கி தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண்பதற்கு மாறாக குக்கி தேசியப்படை (KNA), சோமி புரட்சிகரப் படை (ZRA) ஆகிய ஆயுதமேந்திய குழுக்களுடன் 2008-இல் செய்துகொண்ட எதிர்நடவடிக்கை நிறுத்த ஒப்பந்தத்தை (Suspension of Operations-SoO) திரும்பப் பெறுவதாக அறிவித்தது. இது குக்கிகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அரசு அணியமாகிவிட்டது என்பதையே காட்டியது.

மெய்திகளுக்கும்-குக்கிகளுக்கும் இடையிலும், பா.ச.க. ஆட்சிக்கும் - குக்கிகளுக்கு இடையிலும் உறவு நைந்து கொண்டிருந்த நிலையில், மெய்திகளைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்ற வழக்கில் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் பொறுப்பு தலைமை நீதிபதி எம்.வி. முரளிதரன், மெய்தி மக்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்து மணிப்பூர் அரசு நான்கு கிழமைகளுக்குள் ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை அறிக்கை அனுப்ப வேண்டும் என்று 27.3.2023 அன்று தீர்ப்பளித்தார். தீர்ப்பின் முழு விவரம் ஏப்பிரல் 19 அன்றுதான் வெளியிடப்பட்டது.

மணிப்பூர் மாநிலத்தின் மலைப் பகுதியில் வாழும் 34 வகைப்பட்ட பழங்குடியினரும் இத்தீர்ப்பால் அதிர்ச்சியும் சினமும் கொண்டனர். அரசமைப்புச் சட்டக்கூறு 371-சி உறுதி செய்துள்ள நிலத்தின் மீதான தங்கள் உரிமைப் பறிக்கப்படுவதைக் கண்டித்து 3.5.2023 அன்று மணிப்பூர் அனைத்துப் பழங்குடி மாணவர் கூட்டமைப்பு சார்பில் மலை மாவட்டங்களில் ஒற்றுமைப் பேரணியை நடத்தினர். இப்போராட்டத்தினால் குக்கி-மெய்தி இன மக்களிடையே மோதல் வெடித்தது. வீடுகள், கடைகள், நிறுவனங்கள், தேவாலயங்கள் தாக்கப்பட்டன; பல இடங்களில் தீக்கிரை யாக்கப்பட்டன. பெண்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்; பாலியல் துன்புறுத்தல்களுக்கும் வல்லுறவுக்கும் ஆளாக்கப் பட்டனர். பெரும் பாதிப்புக்கு உள்ளானவர்கள் குக்கிகளே ஆகும்.

கோத்ரா இரயில் பெட்டி எரிப்பையொட்டி, குசராத்தில் 2002 பிப்பிரவரி 27, 28, மார்ச்சு 1, 2, 3 ஆகிய நாள்களில் முசுலீம்கள் மீது சங்பரிவாரங்கள் திட்டமிட்டு தாக்குதல் நடத்தினர். 2000-க்கு மேற்பட்ட முசுலீம்கள் கொல்லப் பட்டனர். ஒரு இடத்தில் கலவரத்தை எவ்வாறு ஏற்படுத்துவது, அப்போது எப்படித் தாக்குதல் நடத்துவது என்று சங்கிகள் முன்கூட்டியே திட்டமிட்டு வைத்துக் கொண்டுள்ளனர். அதே தன்மையில் 2023 மே 3 முதல் 7 வரையில் சங் பரிவார மெய்திகள் குக்கிகள் மீது காவல் துறையின் துணையுடன் தாக்குதல் நடத்தினர். மலைப் பகுதியில் தொலைவில் உள்ள தேவாலயங்களை இருசக்கர வாகனத்தில் சிறு சிறு குழுக்களாக வந்த மெய்தி இளைஞர்கள் பெட்ரோல் குண்டு களை வீசி எரித்தனர். இவ்வாறு 400-க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் எரிக்கப்பட்டன. குக்கிகள் எதிர்வினையாகத் திருப்பித் தாக்கியதில் மெய்திகளும் சிலர் கொல்லப்பட்டனர். மொத்தத்தில் 140-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக அரசு கூறுகிறது. 60,000 பேர் வீடுகளையும் உடைமை களையும் இழந்து உயிருக்கு அஞ்சி முகாம்களில் உள்ளனர். மிசோரம் உள்ளிட்ட அண்டை மாநிலங்களுக்கும் சென்றுள் ளனர். இவர்கள் அனைவரும் குக்கிகளே!

மே முதல் வாரத்தில் மணிப்பூரில் தொடர்ந்து கொடிய தாக்குதல்களும், கொலைகளும் நடந்து கொண்டிருந்த போது, பிரதமர் நரேந்திர மோடி கர்நாடகத்தில் தேர்தல் பரப்புரையில் 'வீதி நாடகம்' நடத்திக் கொண்டிருந்தார். உள்துறை அமைச்சர் அமித்ஷா மட்டும் தேர்தல் பரப்பு ரையை நிறுத்திவிட்டு தில்லிக்குச் சென்றார். மணிப்பூரில் கலவரத்தை அடக்க அசாம் ஆயுதப்படை, எல்லைப் பாது காப்புப் படை, மத்திய ரிசர்வ் படை ஆகியோரைக் கொண்ட 40,000 பேர் அனுப்பப்பட்டனர். அமித்ஷா மே 29 முதல் நான்கு நாட்கள் மணிப்பூரில் திட்டங்களைத் தீட்டிக் கொடுத்தார். ஒன்றிய அரசு விசாரணை ஆணையத்தை அமைத்தது. ஆனால் மூன்று மாதங்களாக வன்முறைத் தாக்குதல் தொடர்கின்றன.

இணைய சேவை முடக்கப்பட்டதால் மணிப்பூர் கலவரத்தில் உண்மை நிலை என்னவென்று வெளி உலகிற்குத் தெரியாமல் இருந்தது. சூலை 20 அன்று நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் தொடங்கவிருந்த நிலையில் - அதற்கு முதல் நாள் சூலை 19 அன்று மணிப்பூரில் மே 4 அன்று குக்கி பெண்கள் இருவர் நிர்வாணமாக ஒரு கும்பல் புடைசூழ நடக்க வைத்து அழைத்துச் செல்லப்படும் காட்சி இந்தியா முழுவதும் ஒளிபரப்பாகி மக்களை அதிர்ச்சிக்

குள்ளாக்கியது. இப்பெண்களில் ஒருவரின் தந்தையும் தம்பியும் தடுக்க வந்தபோது அப்பெண்ணின் கண் முன்னா லேயே அவர்கள் அக்கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டனர். ஒரு பெண்ணின் கணவர் இராணுவத்தில் பணிபுரிந்தவர்; கார்கில் போரில் கலந்து கொண்டவர். இவ்விரு பெண்களும் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். வெறுங்காலுடன் 48 மணிநேரம் காட்டில் நடந்த பிறகு நாகா குடியிருப்பில் அடைக்கலமாயினர். இந்த வீடியோ குறித்து முதல்வர் பிரேன் சிங்கிடம் கேட்கப்பட்டது. இதுபோல் நூற்றுக்கும் மேற்பட்டவை நடந்துள்ளன என்று, இக்கொடுமை இயல்பானது என்கிற போக்கில் பதில் அளித்தார்.

சூலை 20 அன்று பிரதமர் மோடி நாடாளுமன்றத் திற்குள் நுழைவதற்கு முன் இக்கொடுமை குறித்து - மணிப்பூர் கலவரம் தொடங்கி 77 நாட்களுக்குப் பிறகு - சுருக்கமாக செய்தியாளர்கள் முன் தன் கண்டனத்தைப் பதிவு செய்தார். “இக்கொடிய நிகழ்ச்சி என்னை மிகவும் கவலை கொள்ளவும் சினமுறவும் செய்துவிட்டது; குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இராஜஸ்தான், சத்திஸ்கர் போன்ற மாநிலங்களிலும் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்கொடுமைகள் தண்டிக்கப்பட வேண்டும்” என்று கூறினார். இதில்கூட அரசியல் செய்தது அருவருப்பானதாகும்.

பிரதமரைப் பின்பற்றி தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்கும் பா.ச.க.வினர் மேற்கு வங்காளம், இராஜஸ்தான், சத்தீஸ்கர், கேரளம் ஆகிய எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங் களில் பெண்கள்மீது நடத்தப்படும் பாலியல் கொடுமைகள் பற்றியே தொடர்ந்து பேசுகின்றனர். நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் பிரதமர் மணிப்பூர் கலவரம் குறித்து விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோரிவருகின்றன. பிரதமர் மோடியின் மவுனத்தைக் கலைக்க அரசு மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்துள்ளனர். ஆகத்து 8, 9 நாள்களில் மக்களவையில் மணிப்பூர் குறித்த விவாதம் நடைபெறும் என்றும் 10,8,2023 அன்று பிரதமர் மோடி பதிலளிப்பார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹிண்டன்பர்க் அறிக்கை அதானி மீது 20,000 கோடிக்கு சுமத்திய குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவையில் மோடி எதுவும் பேசாமல், மற்ற செய்திகளைப் பற்றிப் பேசியது போல், இப்போதும் மணிப்பூர் பற்றிப் பேசாமல் இரண்டு, மூன்று மணிநேரம் 2024 தேர்தலுக் கான சொற்பொழிவாற்றக் கூடும் (இக்கட்டுரை 4.8.2023 அன்று எழுதப்பட்டதாகும்).

பாலியல் வன்கொடுமைக்குள்ளான அவ்விரு பெண்களில் ஒருவர் மே 18 அன்று காங்பேக்பி மாவட்டத்தில் புகார் அளித்தார். முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யப்பட்டது. ஆனால் அப்பெண்ணுக்கு அக்கொடுமை நேர்ந்த காவல் நிலையத்துக்கு சூன் 21 அன்று தான் அத்தகவல் அனுப்பப் பட்டது. ஆனால் அதன்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை. சூலை 19 அன்று வீடியோ வெளியான பிறகுதான் இதுதொடர்பாக ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். இந்த வீடியோ வெளிவந்த பிறகு மேலும் பல பெண்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட பாலியல் கொடுமைகளைப் பதிவு செய்துள்ளனர். இக்கொடுமைகள் நடந்த போது காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்க முன்வராமல் இருந்துள்ளனர். சில சமயம் அவர்களே இக்கொடுமைக்குத் துணைபுரிந் துள்ளனர். ‘சுடரொளிப் பெண்கள்’ என்கிற அமைப்பைச் சேர்ந்த மெய்திப் பெண்கள், குக்கி பெண்களைத் தாக்கு வதிலும், மெய்தி இளைஞர் படையினரிடம் பாலியல் வல்லுறவுக்காக ஒப்படைப்பதிலும் முன்னின்று உள்ளனர். இந்த இழிநிலைக்கு குக்கிகள் மீது திட்டமிட்டு பல ஆண்டு களாக உருவாக்கிய வெறுப்பு அரசியலே காரணமாகும்.

**உச்சநீதிமன்றம் 31.7.2023 அன்று மணிப்பூரில் சட்டம் ஒழுங்கு முற்றிலுமாகச் சீர்குலைந்துவிட்டது; நிர்வாகம் தன் கடமையிலிருந்து தவறியுள்ளது என்று கண்டித்த பிறகும் மணிப்பூர் மாநில முதலமைச்சர் பிரேன் சிங் பதவி விலகவில்லை. பதவி விலகுமாறு பா.ச.க.வின் தலைமையும் சொல்லவில்லை. இவர்கள் பேசும் ‘இந்து தர்மம்’ இதுதான்.**

உச்சநீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதிகளைக் கொண்ட ஆணையம் மணிப்பூர் கலவரத்தை விசாரிக்க வேண்டும். குக்கி பகுதியின் பா.ச.க. சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 10 குக்கி சட்டமன்ற உறுப்பினர்கள் மெய்திகளுடன் இனி இணைந்து வாழமுடியாது; பழங்குடியினர் பகுதியைத் தன்னாட்சிப் பெற்ற தனி நிர்வாகப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதை ஒன்றிய அரசு ஏற்றுச் செயல்படுத்த வேண்டும்.

மணிப்பூர் கலவரம் பெண்கள் மீதான பாலியல் வன் கொடுமை என்கிற அளவில் ஊடகங்களில் பேசப்படுகிறது. ஆனால் மலைவாழ் குக்கிகள் உள்ளிட்ட பழங்குடியினரின் நில உரிமையை மெய்திகள் மூலமாகப் பறித்து முதலாளியப் பெரு நிறுவனங்களின் இலாபவேட்டைக்குத் தாரைவார்ப்பதே மணிப்பூர் சிக்கலின் அடித்தளமாகும். ஆடுகளை மோதவிட்டு அவை சிந்தும் குருதியைக் குடிக்கும் ஓநாயின் வேலையை பா.ச.க. செய்து கொண்டிருக்கிறது.

மதம், சாதி இன்னபிற முரண்பாடுகளைக் கூர்தீட்டி, வெறுப்புப் பேச்சு, வெறுப்பு அரசியல் அணிதிரட்டல் மூலம் மக்களைப் பிளவுபடுத்தி, மணிப்பூரில் நடந்தது போல் மற்ற மாநிலங்களிலும் கொடிய மோதல்களைச் சங்கிகளும் பா.ச.க.வும் சேர்ந்து நடத்தக் கூடிய ஆபத்து நம் முன் இருக்கிறது. இவ்வாறு நிகழாமல் தடுக்க பாசிச பா.ச.க. ஆட்சியை ஒன்றியத்தில் மட்டுமல்லாது, மாநிலங்களிலும் வீழ்த்த வேண்டும். அப்போதுதான் சனநாயகம் காக்கப்படும்.

❖

# சிதம்பரம் நடராசர் கோயில் தீட்சிதர்களின் அத்துமீறல்

**- வாலாசா வல்லவன்**

சிதம்பரம் நடராசர் கோயில் சோழ அரசர்கள் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். அங்கு பணியில் உள்ள தீட்சிதர்கள் வாரணாசியிலிருந்து வரவழைக்கப் பட்டவர்கள் என தென்ஆர்க்காடு மாவட்ட ஆவணப் பதிவேடு (South Arcot District Gazetteer) கூறுகிறது.

கோயில்களில் ஊழல்கள் பெருமளவில் நடைபெறு வதால் 1871-இல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கோயில்கள் அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப் பட்டன.

சிதம்பரம் தீட்சிதர்கள் நடராசர் கோயில் தங்களுக்கே சொந்தம் என சென்னை உயர்நீதிமன்றத்தில் 1885-இல் வழக்குத் தொடுத்தனர். சிதம்பரம் நடராசர் கோயில் தீட்சிதர்களுக்குச் சொந்தமானது என்பதற்கு எந்தவிதமான சான்றுகளும் இல்லை என நீதிபதிகள் தி. முத்துசாமி அய்யர் மற்றும் நீதிபதி செப்போர்டு அமர்வு தீர்ப்பளித்தது (AS Nos.108 and 159 of 1888 Dt.17.3.1890).

1950இல் சென்னை மாகாண முதல்வர் குமாரசாமி ராசா அவர்கள் சிதம்பரம் கோயிலுக்கு தனி அலுவலர் நியமனம் செய்ததை எதிர்த்து தீட்சிதர்கள் மேல்முறையீடு செய்தனர். 3.12.1951 அன்று சென்னை உயர்நீதி மன்றம் தீட்சிதர் களின் மனுவை தள்ளுபடி செய்தது.

தீட்சிதர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். 9.2.1954 அன்று இராசாசி தலைமையிலான அரசு வழக்கை திரும்பப் பெற்றதால் சிதம்பரம் நடராசர் கோயில் நிர்வாகப் பொறுப்பு தீட்சிதர்களிடம் சென்றுவிட்டது.

நீதிமன்ற உத்தரவுப்படி 2001இல் செயலலிதா ஆட்சிக் காலத்தில் கோயில் நிர்வாகப் பொறுப்பு தீட்சிதர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சிதம்பரம் நடராசர் கோயிலில் தீட்சிதர்கள் செய்யும் தில்லுமுல்லுகளை பொதுமக்கள் தமிழ்நாடு முதலமைச் சராக இருந்த எம்.ஜி.ஆரிடம் புகார் அளித்தனர். 1987-இல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் தனி அலுவலர் நியமனம் செய்யப்பட்டார். தீட்சிதர்கள் இதை எதிர்த்து மேல்முறை யீடு செய்தனர். 1997-இல் தீட்சிதர்கள் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

2006-இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குத் தனி அலுவலரை நியமனம் செய்தது. இதை எதிர்த்து 2006-இல் தீட்சிதர்கள் மீண்டும் வழக்குத் தொடுத்தனர். 2009-இல் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி பானுமதி தனி அலுவலர் நியமனம் செல்லும் என்று தீர்ப்பளித்தார். இதை எதிர்த்து பா.ச.க.வின் சுப்பிரமணியன்சாமி தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் 6.1.2014 அன்று வழங்கிய தீர்ப்பில் தீட்சிதர் களே சிதம்பரம் நடராசர் கோவிலை நிர்வாகம் செய்து கொள்ளலாம். அரசு இதில் தலையிடக் கூடாது என்று தீர்ப்பளித்தது. இதை எதிர்த்து தமிழ்நாட்டு அரசின் இந்து அறநிலையத் துறை மேல்முறையீடு செய்தது. 8.1.2019 அன்று தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், தமிழ்நாடு அரசு அதில் தலையிடக்கூடாது என்று தீர்ப்பளித்தது. இதனால் சிதம்பரம் நடராசர் கோயில் நிர்வாகம் தற்போது தீட்சிதர்களின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் முன் எச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்காக தீட்சிதர்கள் திருச்சிற்றம்பல மேடை தரிசனத்தை நிறுத்தி வைத்திருந்தனர்.

கொரோனா கட்டுப்பாடுகளை அரசு தளர்த்திய பிறகும் பொது மக்கள் யாரையும் அனுமதிக்கவில்லை.

திருச்சிற்றம்பல மேடை ஏறி தரிசனம் செய்ய முயன்ற ஜெயசீலா என்ற பட்டியல் வகுப்பு பெண் பக்தையை சாதிப் பெயரைச் சொல்லி திட்டியதாக இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் இருபது தீட்சிதர்கள் மீது வன்கொடுமை வழக்கு சிதம்பரம் காவல் நிலையத்தில் பதியப்பட்டது.

திருச்சிற்றம்பல மேடையில் பக்தர்களை அனுமதிக்க வேண்டும் என்று ஜெமினி ராதா என்பவர் நீதிமன்றத் தில் வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்ற தீர்ப்பின் அடிப் படையில் தமிழ்நாட்டு அரசின் இந்து அறநிலையத் துறை 17.5.2023 அன்று திருச்சிற்றம்பல மேடையில் பொது மக்கள் அனைவரும் ஏறி தரிசனம் செய்யலாம் என்று அரசாணைப் பிறப்பித்தது.

தீட்சிதர்களின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அங்கு தலைவிரித்தாடத் தொடங்கியது.

தீட்சிதர்களில் திருமணமானவர்களுக்கு அந்த கோயில் வருமானத்தில் தனி பங்கு உண்டு என்ற காரணத்தி னால் குழந்தைத் திருமணங்களை நடத்தி வருகின்றனர். பெரிய பணக்காரர்கள் அங்கு திருமணம் செய்துகொள்ள வாய்ப்பளித்தனர். பக்தர்களை அடித்து துன்புறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த ஆண்டு (ஆனி மஞ்சனம்) திருவிழாவை யொட்டி சூன் 24 முதல் 27 வரை நான்கு நாள் களுக்குப் பொது மக்கள் யாரும் திருச்சிற்றம்பலம் எனப் படும் கனகசபை மேடையில் ஏறி தரிசனம் செய்யக் கூடாது என்ற அறிவிப்பு பதாகையை தீட்சிதர்கள்

வைத்தனர். பொது மக்கள் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

சிதம்பரம் காளிக் கோயில் செயல் அலுவலர் இரண்யா மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்கள் சிதம்பரம் வட்டாட்சியர் செல்வக்குமார் ஆகியோர் 26.6.2023 அன்று நடராசர் கோயிலுக்குள் சென்று கனகசபை மேடை அருகே வைத்திருந்த அறிவிப்புப் பலகையை அகற்ற முயன்றனர். அப்போது தீட்சிதர்களுக்கும் இவர்களுக்கும் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்து சமய அறநிலையத் துறையின் சிதம்பரம் காளிக்கோயில் செயல் அலுவலர் சரண்யா மற்றும் அலுவலர்கள் "தமிழ்நாடு அரசின் அரசாணை மீறி கனகசபை மீது ஏறக்கூடாது" என்று பதாகை வைக்கக் கூடாது. உடனடியாக அகற்றுங்கள் எனக் கூறினர். தீட்சிதர்கள் அறிவிப்பு பதாகையை அகற்ற மறுத்ததால் காவல் துறையினர் வரவழைக்கப்பட்டனர். காவல் துறையினர் உதவியுடன் அறிவிப்பு பதாகையை அகற்றினர்.

பதாகையை அகற்றிய பின்னரும் தீட்சிதர்கள் பொது மக்கள் கனகசபை மேடையில் ஏறி வழிபட எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

27.6.2023 அன்று காங்கிரசு கட்சியினர் கனகசபை வாயிலில் அமர்ந்து கனகசபையில் ஏறி வழிபட அனுமதிக்க வேண்டும் என முழக்கங்களை எழுப்பினர். பெரியாரிய இயக்கத்தினரும் பொதுவுடைமை இயக்கத்தினரும் கனகசபையில் ஏறி வழிபட பக்தர்களுக்கு அனுமதி அளிக்க வேண்டும் எனப் பேராட்டங்களை நடத்தினர்.

பாரதிய சனதா கட்சியினர் அங்கு வந்து கனக சபையில் மக்கள் வழிபடுவதற்கு எதிராக முழக்கமிட்டனர். இதனால் கோயிலில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

இந்து சமய அறநிலையத் துறையினர் அரசு ஆணையை நிறைவேற்றும் வகையில் மற்றொரு வழியாக காவல் துறையினருடன் கனகசபை மீது ஏறிச் சென்றனர். தீட்சிதர்கள் அவர்களைத் தடுத்து கீழே தள்ளி கனக சபையை பூட்டினர். இதனால் மீண்டும் தகராறு ஏற்பட்டது. அரசு ஊழியர்களைச் செயல்படாமல் தடுத்தாக பதினொரு தீட்சிதர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பரபரப்பான இந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் உதவியுடன் பொது மக்கள் கனகசபை மீது ஏறி அதிகாரிகள் துணையுடன் வழிபாடு செய்தனர்.

தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் தீட்சிதர்களின் அட்டூழியங்களை எடுத்துக்கூறி சீராய்வு மனுச்செய்து, சிதம்பரம் நடராசர் கோயிலை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே நிரந்தரத் தீர்வாக அமையும். ❖

# பெரியாரும் பார்ப்பனப் புழுவும்!

**பேராசிரியர் இரா. சோதிவாணன்**

பிறந்தமேனி ஓட்டமோடி மன்னர்முன்பு
பெருங்குண்டி காட்டிநிலக் கொடைகள்(மானியம்) பெற்று
இறந்தமானம் பாடையேற்றி மினுக்கி வாழ்ந்த
இம்முன்னோர் வழிவந்த உமாஆனந்தன்
சிறந்தசாதிப் பாப்பாத்தி எனும்பேர் காட்டிச்
செந்தழலின் பெரியாரின் ஒளிக்காணாது
திறந்தவெளிக் கழிவுதின்று நாறுகின்றாள்.
நிமிர்ந்தமதி வான்மீதே துப்புகின்றாள்.

தாழ்வீதி மனுநீதிச் சறைக்குள் பட்டுத்
தாழ்வாரப் புழுவாக நெளிந்த பெண்கள்
நீள்வான் வீதியில் உரிமைச் சிறகடிக்க
நேர்வீதிப் புரட்சியாளன் 'விடியல்' தந்தார்.
தாள்வீதி(எழுத்து) நாவீதி(பேச்சு) வழியே பெண்கள்
தீப்பொறியாய்த் தெறித்து வீறுகொள்ள வைத்தார்.
காலச் சலவையாளன் கைகளில், மண்டிக்
கிடந்த 'பார்ப்பான்துறை அழுக்குத்'தின்றும், மாமி!

பெண் ஏன் அடிமையானாள் என்று தந்தைப்
பெரியாரே எழுதியநூல் படித்துப் பார்ப்பாய்.
பெண்ஏன் அடங்கிவாழ வேண்டும் என்ற
பிற்போக்கு மனுநூலும் படித்துப் பார்ப்பாய்.
பெண்பிறப்பே இழிவாகும்; காம இச்சைப்
பிழிவாகும்; இரண்டகம்(துரோகம்) செய்யுமென்று கூறும்
பெண்சிறப்புப் பெண்ணுரிமைப் பெரியார் காக்கப்
பிறழ்நாக்கில் 'நாயகன்' என்பதை 'நாயக்கன்' என்றாய்.

பாலியல் உறவை வெளிநாடு ஒன்று (சுவீடன்)
விளையாட்டில் சேர்த்துளது; நமது நாட்டில்
தோலியல் உணர்வைத்தன் கணவன் அன்றித்
துணைவேற்றானிடம் தீர்க்கத் 'தீர்ப்பே' உண்டாம்.
மாலைபோல் மனைவி மாற்றும் 'ஊரே'(கேரளம்) கண்டோம்
மணிப்பூரில், பிறந்தமேனியாக்கி வீதி
மேலிழுத்து வந்து பெருங்கூட்டுப்புணர்வின்
மாக்கொடுமை. மாமிவயிறு கலக்கலையோ?

விட்டெறிந்த கல்லுக்கும் செருப்புகட்கும்
இட்டடைத்த சிறைகளுக்கும் மனம்அஞ்சாது
சுட்டெரித்த ஆரியத்தின் சூழ்ச்சியெல்லாம்
சுட்டுவிரல் முனையத்தில் முறியடித்து
வெட்டரியும் களப்போரில் நிமிர்ந்துநின்று
வீழ்ந்திருந்த தமிழகத்தின் தலைநிமிர்த்திக்
கொட்டடியில் அஃறிணைபோல் கிடந்த பெண்கள்
கோலோச்ச வைத்தவர்பேர் (பெரியார்பேர்) உதட்டில் பூசு! (மாமி)

# அரியானா

## இந்துத்துவ வெறியர்கள் இசுலாமியர் மீதுத் தாக்குதல்

- சா.குப்பன்

**சூ**லை 31 அன்று அரியானா நூ மாவட்டத்தில் இசுலாமியர்கள் மீது இந்துத்துவ வெறியார்கள் தொடங்கிய தாக்குதல்கள் பக்கத்தில் உள்ள குருகிராமிற்குக் கொண்டு செல்லப்பட்டு, அடுத்த நாள் ஆகஸ்டு-01 அன்று நள்ளிரவில் செக்டார் 57-இல் உள்ள அஞ்சுமான் ஜாமா மசூதி யினுள் இருந்தவர்கள் தாக்கப்பட்டனர்; அந்த மசூதியில் இருந்த துணை இமாம் 26 அகவை முகமது சாத் என்ற இளைஞர் கொல்லப்பட்டார்; அந்த மசூதி தீ வைத்து எரிக்கப் பட்டது. இவை தற்செயலாக நிகழ்ந்தவைதாமா? அல்லது திட்டம் வகுத்துச் செயல்படுத்தப்பட்டனவா? என்பதே எழுவினா.



துணை இமாம்
முகமது சாத்

ஈத் மற்றும் பக்ரா-ஈத் (பக்ரித்) ஆகிய இரு நாள் களிலும் இசுலாமியர்கள் அதிக எண்ணிக்கையினர் தொழுகையில் ஈடுபடுவதால் பள்ளிவாசலுக்கு (மசூதி) உள்ளே இடம் போதாமை காரணமாகப் பொது இடங்களில் தொழுகை நடத்துவது வழக்கம். அப்படிப் பொது இடத்தில் தொழுகை நடத்த குறிப்பிட்ட இடமே வேண்டும் என இசுலாமியர் வலியுறுத்துவதில்லை. இதில் ஏற்பட்ட சிக்கல் காரணமாக அரியானா மாநில அரசு 15 ஆண்டுகளுக்கு முன் குருகிராம், செக்டர் 57-இல் மசூதிக் கட்டிக்கொள்ள ஓரிடத்தை அளித்து அங்கு 3 அடுக்குக் கட்டடம் கட்டிக்கொள்ள இசைவு வழங்கியது.

மேற்படி மசூதிக் கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயில் அங்குக் கட்டடம் கட்டுவதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

உச்சநீதிமன்றம் அப்போது உள்ள நிலையே நீடிக்க வேண்டும் என இடைக்கால உத்தரவு அளித்தது. உச்சநீதிமன்றத்தில் 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்த வழக்கு 2 ஆண்டுகளுக்கு முன் 2021-இல் தள்ளுபடிச் செய்யப்பட்டது. வழக்கு 12 ஆண்டுகளாக நிலுவையில் இருந்ததன் காரண மாக மசூதிக் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி காலாவதியாகிவிட்டது. பூச்சு வேலை முதலான கட்டடப் பணிகளை நிறைவு செய்திட, கட்டுமானப் பணிக்கான அனுமதியின் காலநீட்டிப்பு அளிக்கக் கோரும் விண்ணப்பம் அரியானா மாநில அரசிடம் காத்திருப்பில் உள்ளது.

ஆர்.எஸ்.எஸ்.-இன் துணை அமைப்பான விசுவ இந்து பரிசத் அரியானா நூ மாவட்டம் உள்ளடங்கிய பகுதியில் “பிரிஜ் மண்டல் யாத்திரை” என்று ஒரு நாள் யாத்திரையை 2021-இல் தொடங்கி ஆண்டு தோறும் நடத்தி வருகிறது.

அரியானாவில் நூ மாவட்டம் தில்லியில் இருந்து தெற்கில் 60 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கு இசுலாமியர் 76.53 விழுக்காட்டினரும், இந்துகள் 23.09 விழுக்காட்டினரும் வாழ்கின்றனர். அரியானா மாநிலத்தில் ஏழ்மை 11.2 விழுக்காடு. ஆனால் நூ மாவட்டத்திலோ ஏழ்மை 40 விழுக்காடு. இது ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அளித்துள்ள புள்ளி விவரம். அரியானாவில் எழுத்தறிவு பெற்றோர் 69 விழுக் காட்டினர். நூ மாவட்டத்தில் எழுத்தறிவு பெற்றோர் 55 விழுக்காட்டினர். மேலும் வடமேற்கு இந்தியாவிலேயே நூ மாவட்டம் ஏழை மக்கள் மிகுதியாகவும் செறிவா கவும் மக்கள் வாழும் பகுதியாகும்.

இந்து நாள்காட்டிப்படி 5ஆம் மாதத்தில் அந்தப் பகுதியில் வாழும் இந்துகள் புனிதப் பயணங்கள் மேற்கொள்ளுவது நீண்டகால வழக்கமாகும். இசுலாமியர் மிகுதியாக வாழும் நூ உள்ளிட்ட பகுதிகள் வழியாகப் பயணம் செய்யும் இந்துகளை வரவேற்று வாழ்த்துக் கூறுவதும், உணவளித்து உபசரிப்பதும் சிலர் தங்குவதற்கு இடம் அளிப்பதும் இசுலாமியர் களுக்கு வழக்கமாகும். “பிரிஜ் சவுராசி கோஸ் பரிகிரமா” என்ற யாத்திரை பக்கத்தில் உள்ள உ.பி. மதுராவில் 30.7.2023-இல் தொடங்கி நூ மாவட்டத்தில் உள்ள நல்ஹார் சிவன் கோவிலில் வழிபட்டு, பயணம் தொடரும் வழியில் பல கோயில்களை வழிபட்டு 16.8.2023 வரை அப்பயணம் நீடிக்கும்.





*குருக்குராம் பாதுஷாபூர் பகுதியில் எரியும் கடைகள்*

விசுவ இந்து பரிசத்தும் அதன் இளைஞர் பிரிவான பஜ்ரங் தள்ளும் 2021 முதல் ''பிரிஜ் மண்டல் யாத்திரை'' என்ற பெயரில் ஒரு நாள் பயணம் மேற்குறிப்பிட்ட பயணத்தின் போதே நடத்துகின்றனர். இந்த யாத்திரையை நூ மாவட்டத்தில் உள்ள நல்ஹார் சிவன் கோவிலில் தொடங்கி சிங்கரில் உள்ள மாதா மந்திர் மற்றும் பெரோஸ்கபூர் ஜிர்காவில் உள்ள மகாதேவ் சிவன் கோயில் வரை நடத்துகின்றனர்.

இந்த ஆண்டு பிரிஜ் மண்டல் யாத்திரையில் பஜ்ரங் தள் சார்பு அமைப்பான பசு பாதுகாப்புப் படை (கோ ரக்ஷா தள்)யைச் சேர்ந்த மோநு மனேசார் என்கிற மோகித் யாதவ் பங்கேற்க உள்ளதாக சமூக ஊடகங்களான வலையொளி (யூடியூப்) முதலானவற்றில் செய்தி பரப்பப்பட்டது. இது அப்பகுதி மக்களிடையே அச்சத்தையும் அமைதியின்மையையும் உருவாக்கியது. ஏனெனில் இராஜஸ்த்தான் மாநிலம் பரத்பூரைச் சேர்ந்த நசீர் மற்றும் ஜுனைது ஆகிய இரண்டு இளைஞர்கள் பசுவைக் கடத்தியதாகக் கூறி, எரித்துக் கொலை செய்யப்பட்ட வழக்கில் முதல் குற்றஞ்சாட்டப்பட்டவன் தான் மோகித் யாதவ்.

சங்கிகளின் - இந்துத்துவ வெறியர்கள் யாத்திரையின் பாதையைத் தெரிந்தெடுப்பதும் இசுலாமியர்கள் செறிவாக வாழும் பகுதிகள் ஊடாகச் செல்லும் போது அவர்களின் சினத்தைத் தூண்டும் பேச்சுமே நாட்டில் நடக்கும் வன்முறைகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. சூலை 31 அன்றும் நூ-வில் கேடியாமோட் என்ற இடத்தை யாத்திரைக் கடக்கும் போது பேசிய சினத்தைத் தூண்டும் பேச்சே வன்முறையை மூட்டியது. யாத்திரைச் சென்றவர்கள் கையில் வாள்களையும் ஆயுதங்களையும் எடுத்துச் சென்றனர். வாள்கள் மற்றும் ஆயுதங்களை யாத்திரையில் எடுத்துச் செல்ல காவல்துறையும் அரசும் அனுமதித்ததன் நோக்கம் என்ன?

இந்த வன்முறைத் தாக்குதல்களில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 88 பேர் காயப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த வன்முறையில் ஈடுபட்டவர்கள் என அரியானா மாநில அரசால் அடையாளப்படுத்தப்பட்ட இசுலாமி யர்களின் வீடுகளும் கடைகளும் என நூ மாவட்டத்திலும் குருகிராம் மாவட்டத்திலும் அரசு இடங்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டக் கட்டடங்கள் என இதுவரை 1208 கட்டடங்கள் புல்டோசர் கொண்டு இடிக்கப்பட்டுள்ளன.

இதனால் பா.ச.க. ஆட்சியை அறிஞர்கள் ''புல்டோசர் ராஜ்'' எனப் பெயர் சூட்டி அழைக்கின்றனர்.

சங் பரிவாரங்களால் விளைவிக்கப்படும் அனைத்து வன்முறைகளும் திட்டமிட்டும் ஒரே தன்மையிலும் நிகழ்த்தப்படுவதைக் காணலாம்.

அறிவாளர்களும், எழுத்தாளர்களும், செயற்பாட்டாளர்களுமான நரேந்திர தபோல்கர், 20.8.2023இலும் கோவிந்த் பன்சாரே 16.2.2015இலும் எம்.எம். கல்புர்கி 30.8.2015-இலும் கவுரிலங்கேஷ் 5.9.2017 இலும் என இந்த நால்வரும் ஒரே மாதிரியாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலை செய்தவர்கள் எப்படித் தப்பிவிடுகிறார்கள்? கொல்வதற்கு ஆயுதம் அளித்தவர்கள் யார்? கொலை செய்திட வெறியூட்டியவர்கள் யார்? என்பதெல்லாம் கண்டுபிடிக்க முடியாத புதிர் அல்ல.



இதே முறையில்தான் சங் பரிவாரங்களால் தூண்டப்படும் வன்முறைகள் அனைத்தும் ஒரே மாதிரி, திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. சங் பரிவார பா.ச.க. மோடி ஆட்சியில் பெருகி வரும் வன்செயல்களுக்கு காரணம்தான் என்ன?

நரேந்திர மோடி கூறும் இரட்டை எஞ்சின் ஆட்சி முறையே தான் என்பதே விடையாகும்.

இந்துத்துவ அரச பயங்கரவாதத்தை முற்றாக வீழ்த்த பா.ச.க. மோடி ஆட்சி அதிகாரத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். சனாதன - இந்துத்துவ - பார்ப்பனிய பாசிச சித்தாந்தத்தை மக்களிடமிருந்து முற்றாகக் களையப்பட மக்கள் நாயகத்தில் நம்பிக்கையுள்ள முற்போக்கு இயக்கங்கள் வலிமையானப் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்துதல் வேண்டும். ❖

# ‘பெண் ஏன் அடிமையானாள்?’, ‘பெண்ணின் பெருமை’
## இருநூல் பிறந்த பின்னணி

செந்தலை ந. கவுதமன்

மிகுந்த எண்ணிக்கையில் பரவிவரும் நூலாகி விட்டது பெரியார் எழுதிய ‘பெண் ஏன் அடிமையானாள்?’ நூல்! அந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பும் ஓர் இலட்சம் படிகளுக்குமேல் விற்பனையைக் கடந்துவிட்டது.

தமிழ்த்தென்றல் திரு.வி.க. எழுதிய ‘பெண்ணின் பெருமை’ நூலுக்குள்ள வரவேற்பும் இன்றும் குறையாமல் தொடர்கிறது.

“திராவிடர் இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் பெரியார் என்றால் தாயாக இருப்பது நான்” - எனப் பெருமையுடன் கூறிக்கொண்டவர் திரு.வி.க.

பெண்ணின் இழிவுக்கான காரணத்தையும் உயர்வுக் கான தேவையையும் வலியுறுத்தி இருவரும் ஒரே நேரத்தில் எழுதிய நூல்களே ‘பெண் ஏன் அடிமையானாள்?’, ‘பெண்ணின் பெருமை’ இருநூலும்!

இருநூல் பிறப்பிற்கும் காரணமானது, செட்டிநாட்டுப் பகுதியில் சாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிராக எழுந்த எதிர்ப்புச் சூழல்தான்!

மறுமலர்ச்சி சிந்தனைகளும் விடுதலை இயக்கங்களும் அச்சுநூல் வருகையும் அறிவுத் துறைகளின் அறிமுகமும் படிப்படியாய்த் தமிழ்நாட்டை விழிப்படைய வைத்தன. திராவிடர் இயக்கமும் பொதுவுடைமை இயக்கமும் நாட்டு விடுதலை முயற்சிகளும் விழிப்பை விரைவுபடுத்தி வளர்த்தன. பெண்ணுரிமைக் குரல் ஊக்கம் பெறவும் பெண்ணுரிமைப் போராளிகள் உருவாகவும் அவை காரணமாயின.

குடிஅரசு, விடுதலை, புரட்சி, பகுத்தறிவு, ரிவோல்ட் (ஆங்கில இதழ்) முதலியவற்றின் வாயிலாகத் தமிழ்நாட்டுச் சிந்தனை மறுமலர்ச்சிக்குப் பேரூக்கமானார் பெரியார்.

சாதியால் பிரிந்து நிற்போரைத் ‘தமிழர்’ என்னும் ஒரே அடையாளத்தோடு ஒன்றிணைக்க முனைந்தது திராவிடர் இயக்கம். சாதி கடந்த சாதிமறுப்பு (கலப்பு)த் திருமணங்கள் திராவிடர் இயக்க வளர்ச்சியோடு இணைந்து வளர்ந்தன.

தமக்கை, தங்கை எனக் குடும்பமாய் முன்வந்து குடும்பங்களை உருவாக்கிய வியப்பு நிகழ்ச்சிகளும் உண்டு.

குஞ்சிதம், காந்தம் இருவரும் அக்கா, தங்கையர்,

குஞ்சிதம் குத்தூசி குருசாமியை மணந்தார். காந்தம் நெ.து. சுந்தரவடிவேலை மணந்தார். இரண்டும் சாதி மறுப்புத் திருமணம்.

முத்துலட்சுமி, நல்லமுத்து இருவரும் உடன்பிறந்தோர், சாதி கடந்து திருமணம் புரியும் உறுதியோடிருந்தனர்.

முத்துலட்சுமி சுந்தரரெட்டியை மணந்து முத்துலட்சுமி ரெட்டி ஆனார். நல்லமுத்து இராமமூர்த்தி அய்யரை மணந்து ‘அக்கிரகாரவாசி’ ஆனார்.




சாதி கடந்த திருமணங்கள் எளிதாக நடந்துவிடவில்லை; இருவீட்டார் எதிர்ப்புக்கும் அச்சுறுத்தலுக்கும் இடையேதான் நடந்தன.

பெரியாரும் நாகம்மையாரும் சாதி மறுப்புத் திருமணங் களை நடத்துவதில் துணிச்சலோடு முன்நின்றனர். திருமண அழைப்பிதழைத் தங்கள் பெயரிலேயே அச்சிட்டனர். மணமக்கள் வீடாகத் தங்கள் வீட்டு முகவரியையே தந்தனர். தங்கள் வீட்டுத் தோட்டத்திலேயே சாதி மறுப்புத் திருமணங் களைச் சிறப்பாக நடத்தி மனம் மகிழ்ந்தனர் பெரியார்-நாகம்மை இருவரும்!

குஞ்சிதம்-குத்தூசி குருசாமி திருமணம் 8.12.1929-இல் ஈரோடு பெரியார் இல்லத்தில் நடந்தது. குஞ்சிதம் இசை வேளாளர் குருசாமி தொண்டை மண்டல முதலியார் ஏற்பாட்டுத் திருமணம்தான்! ஏற்பாடு செய்தவர் மூவலூர் ஆ. இராமாமிர்தம் அம்மையார். தமது பொறுப்பில் நடத்தியவர் தந்தை பெரியார்.

நகரத்தார் குடும்பங்களில் சாதி மறுப்பு தலைநீட்டிய போது, திருமணத்தைத் தடுக்கும் எதிர்ப்பு பல மடங்காய்ப் பெருகியது. அஞ்சாமல் முன்நின்று நடத்திய பெரியாரை அரக்கனாகப் பார்த்துச் சாதிவெறி சீறியது.

நீலாவதி திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்தவர்; நாயுடு வகுப்பு. அவரை மணக்க விரும்பிய இராம. சுப்பிரமணியம் காரைக்குடி கொத்தமங்கலத்தைச் சேர்ந்தவர்; நகரத்தார் செட்டியார் வகுப்பு. பெரியாரும் நாகம்மையாரும் அழைப்பது போல் திருமண அழைப்பிதழ் அச்சானது. திருமண முயற்சிக்கு உறுதுணையாய் நின்றவர் காரைக்குடி 'குமரன்' இதழாசிரியர் சொ. முருகப்பா ('வெண்பா போட்டி' என்ற வடிவத்தை முதன்முதலாக தம் 'குமரன்' இதழில் அறிமுகப் படுத்தியவர்).

சுந்தரி-அருணகிரி திருமணம் சாதி மறுப்புத் திருமணமாக நடக்கக் காரணமும் பெரியார் தொண்டரான சொ. முருகப்பாதான்!

சுந்தரி நகரத்தார் செட்டியார் வகுப்பு. திரைப்படத் தயாரிப்பாளர் ஏ.வி.எம். சரவணன் மாமனார், மாமியார் சுந்தரி-அருணகிரி என இப்போது எளிதாய்ச் சொல்லிவிடலாம்.

அப்போது நிலைமை அவ்வளவு எளிதாக இல்லை. 'செட்டி நாட்டில் அடுத்தடுத்துச் சாதி மறுப்புத் திருமணமா' எனக் கொந்தளிப்பான சூழலில் நடந்த திருமணம் அது! ஒரு சாதிக்குள் மட்டுமே திருமணம் எனச் சாதியுணர்வாளர்கள் ஒன்று சேர்ந்தனர். 'சிவநேசம் திருக்கூட்டம்' எனத் தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொண்டனர். 'சிவநேசன்' என இதழ் உருவானது. சாதி மறுப்புத் திருமணம் செய்தோரையும் திருமணம் நிகழக் காரணமானோரையும் இழிவாகவும் அருவருப்பாகவும் எழுதுவதே இந்தஇதழின் செயல்பாடானது. அந்த இதழுக்கு ஆசிரியராக இருந்தவர் 'சிவநேசம்' பலவான்குடி இராமசாமி செட்டியார்! சொ. முருகப்பாவைக் கடுஞ்சொற்களால் வசைபாடுவதைச் 'சிவநேசர்' வழக்கமாக வைத்திருந்தார்.

பொறுமை காத்துவந்த பெரியார் பொங்கி எழுந்து, 'சிவநேசம் சிறுமை' எனக் குடிஅரசு இதழில் ஆசிரியவுரை எழுதினார். படமெடுத்த சாதிப்பாம்பு பதுங்கத் தொடங்கியது.

சாதிவெறியால் ஒடுக்கப்படும் பெண்களுக்காகப் பரிந்து பேசிய பெரியார் அப்போது எழுதி வெளியிட்ட நூலே 'பெண் ஏன் அடிமை ஆனாள்?'

தம் நண்பர் தந்தை பெரியார் கருத்துக்கு அரண் செய்வதுபோல், தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள், அதேநேரத்தில் வெளிப்படுத்திய நூல் 'பெண்ணின் பெருமை'.

இருநூல்களும் பிறக்கக் காரணமானது செட்டிநாட்டுச் சாதிவாதிகள் காட்டிய எதிர்ப்பு.

சாதி மறுப்பு மணமக்களுக்கு எதிர்ப்பைக் காட்டுவதற்காகவே 'சிவநேசம்' இதழ் நடத்தி வெறுப்பை உமிழ அணிதிரட்டியவர் பலவான்குடி இராமசாமி செட்டியார்! நடந்த வேடிக்கை என்னவென்றால், அதே 'சிவநேசர்' இராமசாமி செட்டியார் தஞ்சாவூர் அருகே உள்ள திட்டை என்னும் ஊருக்கு வந்து சாதி மறுப்பு (கலப்பு)த் திருமணம் செய்து கொண்டதுதான்!

கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கை காட்டி! - பாவேந்தர்

❖

# ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்களில் பேராசியர் பணியிடங்களில் இதரப் பிற்படுத்தப்பட்டோரின் ஈன நிலை

இந்திய ஒன்றிய அரசு நாற்பத்து அய்ந்து பல்கலைக் கழங்களை நடத்தி வருகிறன்றது. ஒன்றிய அரசு வேலைகளில் 1992 முதல் இதரப் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீடு இருந்தும் வெறும் 4 விழுக்கட்டினர் மட்டுமே பணி நியமனம் பெற்றுள்ளனர். கீழ்க்காணும் தகவல் ஒன்றியக் கல்வித்துறை இணையமைச்சர் சுபாஷ்சேகர் மக்கள் அவை உறுப்பினர் சஞ்சீவ் குமார் சிங்கரி எழுப்பிய வினாவிற்கு 27.07.2023 அன்று அளித்த பதில்.

பொதுப்போட்டி என்றப் பெயரில் பார்ப்பனர்களும் உயர் சாதியினருமே 85 விழுக்காட்டு இடங்களை அபகரித்து அனுபவத்து வருகின்றனர். கீழே உள்ள விவரம் 01.04.2023 அன்று உள்ளபடி

| எண் | பதவிகள் | பொது | பட்டியல் வகுப்பினர் | பட்டியல் பழங்குடி வகுப்பினர் | இதரப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | உயர்சாதி ஏழைகள் | மாற்றுத் திறனாளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | பேராசிரியர் | 1146 (85.5%) | 96 (7%) | 22 (2%) | 60 (4.5%) | 3 | 14 | 1341 |
| 2 | இணைப் பேராசிரியர் | 2304 (82%) | 231 (8%) | 69 (2.5%) | 187 (6.5%) | 7 | 19 | 2817 |
| 3. | துணைப் பேராசிரியர் | 8734 (65.75%) | 1421 (11%) | 625 (5%) | 1901 (14.5%) | 192 | 225 | 13098 |
| 4. | துணைவேந்தர் | 38 | 01 | 01 | 05 | -- | -- | 45 |
| 5. | பதிவாளர் | 38 | 02 | 02 | 03 | -- | -- | 45 |

# சாதீயால் சுடும் மேல்பாதி

- நா. மதனகவி



சேரிப் பறையர் என்றும்
தீண்டாதார் என்றும் சொல்லும்
வீரர் நம் உற்றாரடி – சகியே
வீரர் நம் உற்றாரடி!

என்று 1936-இல் பாவேந்தர் குமுறினார்.

விழுப்புரம் மேல்பாதி திரௌபதி கோயிலில் கடந்த ஏப்பிரல் 7ஆம் தேதி இரவு தீமிதி விழா நடைபெற்றது. அப்போது கூட்ட நெரிசல் காரணமாக பட்டியலின இளைஞர்கள் கதிரவனும் அவரது நண்பரும் கோயிலுக்குள் சென்றுள்ளனர்.

தாழ்த்தப்பட்டவர்களான நீங்கள் எங்கள் கோயிலுக்குள் எப்படி வரலாம் என்று ஊராட்சி மன்றத் தலைவர் மணிவேல் உள்ளிட்டவர்கள் கடுமையாகத் திட்டியுள்ளனர். வன்னியர்களில் சாதிவெறி பிடித்த சிலரால் அந்த இளைஞர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். கதிரவனின் நண்பரை மீட்கச் சென்ற நண்பரின் பெற்றோரையும் தாக்கினர்.

தாக்கப்பட்ட இளைஞர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைக்க அவசர ஊர்தியில் மக்கள் ஏற்றிய பின்பும், ஊர்தியைச் செல்ல விடாமல் மறித்து ஊர்தியின் உள்ளே சென்ற சாதி வெறியர்கள் இளைஞர்களை மீண்டும் தாக்கினர்.

இதைத் தடுக்க முடியாமல் தன் பிள்ளையை விட்டுவிடுங்கள் என்று அழுது துடித்த பெற்றோரின் காணொளியும், சாதிவெறியர்கள் இளைஞர்களைத் தாக்கும் காணொளியையும் நாம் அனைவரும் சமூக வலை தளங்களில் கண்டோம்.

இந்த நிகழ்வு தொடர்பாக ஆதிக்க சாதியினர் 18 பேர்மீது வளவனூர் காவல் துறையினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப் பதிந்து கைது செய்தனர்.

2023ஆம் ஆண்டு வரலாற்றில் முக்கியமானது, கேரள மாநிலத்தின் பெரும் பகுதியிலும், தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் சில பகுதிகளில் சாதிக் கொடுமையால் பெண்கள் இடுப்புக்குமேல் தோள் மீது ஆடை அணிவதற்கு இருந்த தடையை எதிர்த்து நடைபெற்ற தோள் சீலை போராட்டத்தின் 200ஆம் ஆண்டு இந்தாண்டு ஆகும்.

தீண்டப்படாத வகுப்பினர் திருவிதாங்கூர் மன்னராட்சியில் வைக்கத்தில் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் நுழையக்கூடாது என்று தடுக்கப்பட்டதை எதிர்த்து 1924-ஆம் ஆண்டு நடைபெற்ற வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு இந்தாண்டு ஆகும்.

இந்த இரண்டு வரலாற்று நிகழ்வுகள் சாதியின் பெயரால் நடத்தப்பட்ட வன்கொடுமைகளுக்கு எதிராக நடந்த போராட்டங்கள் ஆகும். இது நடந்து 100, 200 ஆண்டுகள் ஆகியும் மானுட உரிமையை-சமத்துவத்தை மறுக்கும் இந்த இழிநிலை இன்றும் மேல்பாதி ஊரைப் போலவே பல ஊர்களில் சாதியின் பெயரில் வெவ்வேறு வடிவில் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடப்பது வெட்கக் கேடானதாகும்.

மேல்பாதியில் பட்டியலின மக்களும் திரௌபதி கோயிலுக்குள் சென்று வழிபட அனுமதிப்பது தொடர்பாக விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் இரவிச்சந்திரன் அவர்கள் தலைமையில் 6 முறையும், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழநி அவர்களின் தலைமையில் 2 முறையும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது.

திரௌபதி கோயில் வன்னியர் சமூக மக்களுக்காக அவர்களின் சொந்தப் பணத்தில் கட்டப்பட்டது. எனவே பட்டியலின மக்களை வழிபட அனுமதிக்க முடியாது என்ற நிலைபாட்டில் உறுதியாக சாதிவெறியர்கள் இருந்ததால் அரசு நடத்திய 8 சுற்றுப் பேச்சு வார்த்தைகளும் தோல்வியடைந்து தீர்வு எட்டாத நிலையில் மாவட்ட நிர்வாகம் கோயிலைப் பூட்டி முத்திரையிட்டது.

இந்நிலையில் கோயில் தங்களுக்குத்தான் சொந்தம் என்று வன்னியர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர். அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் கோயில் அமைந்துள்ள இடம் அரசுக்குச் சொந்தமானது என்றும், 1978-ஆம் ஆண்டு முதல் கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளதற்கான சான்றையும் நீதிமன்றத்தில் அரசு வழங்கியது.

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி திரௌபதி கோயில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமானது என்று சாதி வெறியர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியது.

அதற்குப் பிறகும் தாழ்த்தப்பட்ட மக்களை கோயிலுக்குள் அனுமதிக்க மறுத்து போராட்டம் நடத்திக் கொண்டுள்ளனர்.

பட்டியல் என்கிற சாதியினர் மட்டுமின்றி பார்ப்பனர் அல்லாதார் அனைவருமே கோயில் கருவறைகளில் தீண்டப் படாதாராகவே இன்றுவரை இந்துமத ஆகமங்களின் பெயரால் கருதப்படுகின்றனர். ஆகவேதான் அனைத்து சாதி யினரும் அர்ச்சகர் ஆக்கப்பட வேண்டும் என்று பெரியார் கோரினார்.

பெரியார் மறைந்து 50 ஆண்டுகள் கழித்து 2021ஆம் ஆண்டில்தான் பல தடைகளைமீறி திமுக அரசு பார்ப்பனர் அல்லாத சாதியினர் கோயில் கருவறைக்குள் சென்று சிலையைத் தொட்டு அர்ச்சகர் பணிசெய்ய சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தியது.

திரௌபதி கோயிலில் பட்டியலின மக்களை அனுமதிக்க மறுக்கும் வன்னியர்கள் உள்ளிட்ட அனைத்துப் பார்ப்பனல்லாதவர்களும் பார்ப்பனியத்தால் கருவறைகளில் தீண்டப்படாதவர்களாகவே 2023 இலும் கருதப்படுகின்றனர்.

பார்ப்பனர் அல்லாத இந்துக்கள் இந்தியா முழுவதும் உள்ளனர். இவர்கள் இந்துச் சட்டப்படியும் சாத்திரப்படியும் சத்திரியர், வைசியர், சூத்திரர் என மூன்று வருணத்தாராக இருக்கிறார்கள். இதற்கு இந்து தாய பாகச் சட்டப்பிரிவு அடிப்படையாகும்.

தமிழ்நாட்டில் பார்ப்பனர் சூத்திரர் மட்டுமே உண்டு. பார்ப்பனர் அல்லாத இந்துக்கள் 100க்கு 97 பேர், இவர்கள் அனைவரும் சூத்திரர்கள் என்ற ஒரே வருணத்தாராக வைக்கப்பட்டுள்ளனர். இது இந்து மிதாட்சரச் சட்டப் பிரிவுப்படி உள்ள ஏற்பாடு.

இந்துச் சாத்திரங்களின்படி சூத்திரர்கள் பார்ப்பனர்களின் வைப்பாட்டி மக்கள். இது இவர்களுக்குப் பிறவி காரணமாகச் சுமத்தப்பட்ட இழிவு. இதற்கு 2023ஆம் ஆண்டிலும், இந்துச் சட்டத்திலும் இந்திய அரசமைப்புச் சட்டத்திலும் பாதுகாப்பு உண்டு. இவற்றை பாதுகாக்கும் மநு ஸ்மிருதியை மகத் மாநாட்டில் 25.12.1927 அன்று மேதை அம்பேத்கர் எரித்தார்.

பார்ப்பனர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்குதான் சாதிகள். மற்றவை உள்சாதிகள் 82 விழுக்காடு உள்ள பிற்படுத்தப்பட்ட மக்கள் பார்ப்பனிய வாழ்க்கை முறைக்கு அடிமையாகி இந்திய அளவில் 6000 உள்சாதி யாகவும் தமிழ்நாட்டளவில் 400 உள்சாதியாகவும் பிரிந்து கிடக்கிறார்கள்.

இந்த உள்சாதியில் வன்னியர் சாதியும் ஒன்று. அப்படி இருக்க சமூக அளவில் தாங்கள் உயர்ந்தவர்கள், ஆண்ட பரம்பரை, சத்திரியர்கள் என்று தங்களைத் தாங்களாகவே உயர்வாகக் கருதிக் கொண்டு இந்து தர்மப்படி வன்னியர்கள் சூத்திரராக வைக்கப்பட்டிருக்கும் நிலையை உணராமல் தங்களை இழி சாதியாய் வைத்திருக்கும் இந்துத்துவ பார்ப்பனியத்தின் மீது கோபம் கொள்ளாமல் சமூக அமைப் பில் அடித்தட்டில் இருக்கும் ஒடுக்கப்பட்ட சமூகமான பட்டியலினத்தவர்களின்மீது சாதி வெறுப்பைக் காட்டுவது கேடானது. சூத்திரர்களின் பல உள்சாதியினரிடமும் இதே மனப்போக்கு இருக்கிறது. இது சமூக சனநாயக உணர்வு வளர்வதற்குப் பெருந்தடையாக உள்ளது. இதனால் மேல் பாதி ஊரில் உள்ளதுபோலவே ஊரகப் பகுதிகளில் கோயில் களில் தாழ்த்தப்பட்டோர் நுழைய முடியாதநிலை நீடிக்கிறது.

இவர்களைப் போன்றே சூத்திரர்களாக உள்ள எந்த உள்சாதியினரும் வாழ்வியலில் பார்ப்பனியப் பண்பாடான பிறவி உயர்வு-தாழ்வு என்பதைக் கடைபிடிப்பதிலிருந்து மாறவே இல்லை. பார்ப்பனியச் சடங்கு வாழ்க்கை முறையைக் கைவிடவே இல்லை. தமிழராய் ஒன்று சேரமுடியாமல் பிரிந்து கிடப்பதற்கு இதுவே காரணம்.

“என் மக்களைச் சூத்திரர்களாக, நாலாஞ் சாதிக்காரர் களாக விட்டுச் சாகிறேனே” என்ற தன் கவலையை கடைசி சொற்பொழிவான 19.12.1973-இல் மானிட விடுதலைக் குரலாய் ஓங்கி ஒலித்தார் பெரியார்.

அவர் மறைந்து அய்ம்பது ஆண்டுகள் கடந்தும் இந்நிலை மாற்றப்படாமல் அப்படியே தொடர்வது, மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரியர்களுக்கு நமக்கும் தலைகுனிவே ஆகும்.

வருண-தீண்டாமை பழக்க வழக்கச் சட்டத்தை காக்கும் அரசமைப்புச் சட்ட விதிகள் 13, 25, 26, 372(1) இவற்றை அடியோடு நீக்க வேண்டும் என்று 26.11.1957-இல் பெரியார் விடுத்த ஆணையை ஏற்று 10000 பெரியார் தொண்டர்கள் அரசமைப்புச் சட்ட நகலை எரித்தார்கள். 2997 பேர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். அதில் தண்டனை பெற்றவர்களில் அறிஞர் வே.ஆனைமுத்துவும் ஒருவர். இன்று வரை இந்த இழிவை நம்மால் நீக்க முடியவில்லை. சாதியை, வருண பேதத்தை ஒழிக்க முடியவில்லை.

இத்தன்மையிலிருந்துதான் இந்திய அளவிலும் தமிழ் நாட்டு அளவிலும் பிற்படுத்தப்பட்டோருக்கு இடையிலான மோதலையும், பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோ ருக்கும் இடையான சாதிய மோதலையும் நாம் நோக்க வேண்டியுள்ளது.

இந்தப் புரிதலின் அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் பெரியார்-மேதை அம்பேத்கர் காட்டிய வழியில் ஒன்றுபட்டு சமூகம், பண்பாடு, பொருளியல், அரசியல் ஆகிய தளங்களில் இணைந்து தீவிரமாகச் செயல்படவேண்டியதே நம்முன் உள்ள கடமையாகும்.

❖

# மனித உரிமை, கருத்துரிமைப் பறித்திடும் பா.ச.க. பாசிச அரசும் நீதித்துறையின் நீதியற்றப் போக்கும்

சா.குப்பன்

"இந்த எல்லாத் திருடர்களின் பெயர்களும் 'மோடி' என்று முடிவதாகவே உள்ளது ஏன்?" என காங்கிரசுத் தலைவர்களில் ஒருவரான இராகுல் காந்தி 13.04.2019 கர்நாடகத்தில் ஒரு தேர்தல் பொதுக் கூட்டத்தில் பேசினார். மோடி என்ற பின்னொட்டு பெயருள்ள 13 கோடி மக்களையும் இராகுல் காந்தி இழிவுப்படுத்திவிட்டார் என குசராத்து பா.ச.க. தலைவர்களில் ஒருவரான புர்னேஷ் மோடி சூரத் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் 2019-இல் வழக்குத் தொடுத்தார்.

3 ஆண்டுகளுக்குப் பின் 23.03.2023 அன்று அந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இராகுல் காந்தி அப்படிப் பேசியது 'மிகக் கடுமையான குற்றம்' என, இந்த வகைக் குற்றத்திற்கு அளிக்கக்கூடிய மிக அதிக அளவான 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.


சுதந்திர இந்தியாவில் - கடந்த 75 ஆண்டுகளில் அவதூறுப் பேச்சுக்காக ஒரு அரசியல்வாதிக்கு 2 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்பட்டது இதுவே முதல்முறை ஆகும். 2 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டால் மக்கள் பிரநிதித்துவச் சட்டத்தின்படி :

1. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளவர் பதவியை இழக்க வேண்டும்.
2. தண்டனைக் காலம் முடிந்த பின் அடுத்த 6 ஆண்டுகளுக்குத் தேர்தலில் போட்டியிட முடியாது.

மோடியின் விருப்பத்திற்கு ஏற்ப வழங்கப்பட்டத் தீர்ப்பு இது.

அந்தத் தீர்ப்பை நிறுத்தி வைத்திடக் கோரி இராகுல்காந்தி சூரத் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முறையீடு செய்தார். அந்த நீதிமன்றம் அந்த முறையீட்டை ஏற்காமல் நிராகரிப்ப தாக 20.04.2023 அன்று கூறிவிட்டது. இதற்கிடையில் நாடாளுமன்ற மக்களவையில் இராகுல் காந்தியின் உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

இராகுல் காந்தி குசராத்து உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். குசராத்து உயர்நீதிமன்றத்தில் 5.7.2023 அன்று நீதிபதி ஏமந்த் எம்.பிரச்சக், "இராகுல்காந்தி இழைத்தது மிகவும் கடுமையான குற்றம் என்பதால் அவருக்கு உயர்ந்த அளவான 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளித்தது சரியே" என்று மேல்முறையீட்டினைத் தள்ளுபடி செய்தார். இராகுல் காந்தி இதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளார்.



சஞ்சீவ் பட்

2001-இல் நரேந்திர மோடி குசராத்து மாநிலத்தின் முதலமைச்சராகப் பதவி ஏற்றது முதலே குசராத்து மாநில நிர்வாகமும் நீதித்துறையும் இந்துத்துவ மயமாக்கப்பட்டு விட்டன.

2002 குசராத்து கலவரத்தில் நரேந்திர மோடியின் பங்கு பற்றிய உண்மையைச் சொன்னதற்காக இ.கா.ப. காவல் அதிகாரியான சஞ்சீவ் பட், பதவி நீக்கப்பட்டு, வேறொரு வழக்கில் ஆயுள் சிறைத் தண்டனை அளித்து சிறையில் தள்ளியது எந்த வகை நீதி?

27.02.2002 அன்று குசராத்து கோத்ரா தொடர் வண்டி நிலையத்தில் சபர்மதி விரைவு வண்டியின் பெட்டிகள் சில எரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் போன்ற சங் பரிவார அமைப்பினர் இசுலாமி யரின் கடைகள், வீடுகள் என சொத்துக்களுக்குத் தீ வைத்து அழித்தும் இசுலாமியப் பெண்கள் மீது பாலியல் வன் கொடுமைகளை நிகழ்த்தியும் சுமார் 2000-க்கும் மேற்பட்ட இசுலாமியரைக் கொன்றும் வெறியாட்டம் ஆடினர். இந்தக் கலவரம் நடப்பதற்கு முன் 27.02.2002 அன்று குசராத்து முதலமைச்சராக இருந்த நரேந்திர மோடி இல்லத்தில் உயர் அதிகாரிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அந்தக் கூட்டத்தில் நரேந்திர மோடி "இசுலாமியருக்கு எதிரான இந்துக்களின் சினத்தை வெளிப்படுத்த தடையில்லாமல் விட்டுவிடுமாறு" சொன்னார்.

சஞ்சீவ் பட் காவல் துறையில் 1999-2002-இல் (அகமதாபாத்) காந்தி நகர் புலனாய்வுப் பணியகத்தில்

துணை ஆணையராகப் பணிபுரிந்தார்; முதலமைச்சர் நரேந்திர மோடியின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்றிருந்தார். இந்தக் காரணத்தினால் முதலமைச்சர் நரேந்திர மோடி வீட்டில் நடந்த மேலே சொன்ன கூட்டத்தில் இருந்தார்.

2002 குசராத் கலவரங்கள் தொடர்பாக பல புலனாய்வு விசாரணைகளிலும், நீதிமன்ற வழக்குகளிலும் பல உண் மைகள் வெளிவராமல் புதைக்கப்பட்டன. சஞ்சீவ் பட், 14.4.2011-இல் உச்சநீதிமன்றத்திற்கு அளித்த சான்று வாக்கு மூலத்தில் 27.02.2002 அன்று முதலமைச்சர் நரேந்திர மோடி வீட்டில் நடத்தப்பட்ட கூட்டத்தில் நரேந்திர மோடி மேலே குறிப்பிட்டவாறு சொன்னார் என்பதைத் தெரிவித்தார்.

சஞ்சீவ் பட் உச்சநீதிமன்றத்திற்கு அளித்த வாக்கு மூலத்தின் உண்மைத்தன்மையை அறிய உச்சநீதிமன்றம் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழுவை அமைத்தது. அந்தப் புலனாய்வுக் குழு, 27.02.2002 அன்று நரேந்திர மோடி வீட்டில் ஏற்பாடு செய்திருந்தக் கூட்டத்தில் சஞ்சீவ் பட் பங்கேற்கவில்லை என்று உச்சநீதிமன்றத்திற்கு தெரிவித்தது. அதனடிப்படையில் சஞ்சீவ் பட் உச்சநீதிமன்றத்திற்கு அளித்த சான்று வாக்குமூலம் உச்சநீதிமன்றத்தால் 06.05.2011-இல் நிராகரிக்கப்பட்டது.

சஞ்சீவ் பட் அனுமதியின்றி பணிக்கு வரவில்லை என்றும் பணியில் இல்லாத போது அரசு மகிழுந்தைப் பயன்படுத்தினார் என்றும் 08.08.2011 அன்று ஜுனாகத், மாநில ரிசர்வ் காவல் மய்யத்தின் தலைவர் என்ற காவல் பணியிலிருந்து தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் 19.08.2015-இல் காவல் பணியிலிருந்து முழுமை யாக நீக்கப்பட்டார்.

சஞ்சீவ் பட் 22 ஆண்டுகளுக்கு முன் 1989-இல் ஜாம் நகர் உதவி மாவட்டக் காவல் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்தார். அப்போது எல்.கே. அத்வானி நடத்திய இரத யாத்திரைத் தொடர்பாக அங்கு எழுந்த கலவரத்தில் 30.10.1990-இல் 132 பேர் காவல் நிலையக் காவலில் வைத்திருந்து அப்போதே 132 பேரும் விடுவிக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட பின் சில நாட்கள் கழித்து அதில் ஒருவரான பிரபுதாஸ் வைஷ்ணன் என்பவர் சிறுநீரகப் பழுது காரணமாக 18.11.1990 அன்று இறந்துவிட்டார். அவர் காவல் நிலையக் காவலில் இருந்ததன் காரணமாகத் தான் இறக்க நேர்ந்தது என இறந்தவரின் அண்ணன் வழக்குத் தொடர்ந்திருந்தார். கிடப்பில் கிடந்த இந்த வழக்கைத் தோண்டி எடுத்து அந்த வழக்கில் சஞ்சீவ் பட் இருந்ததால் சஞ்சீவ் பட்டுக்கு 20.06.2019 அன்று ஆயுள் சிறைத் தண்டனை அளிக்கப் பட்டது. சஞ்சீவ் பட் குசராத்து உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தும் 25.09.2019-இல் தள்ளுபடி செய்யப் பட்டது. இந்தக் காலப் பகுதியில் 16 ஆண்டுகளில் குசராத்தில் காவல் நிலையப் பாதுகாப்பில் இறந்த 180 நிகழ்வுகளில் இதுபோல் ஒருவரும் தண்டிக்கப்பட்டதில்லை என்பதிலிருந்து சஞ்சீவ் பட் எவ்வாறு மோடி அரசால் திட்டமிட்டுப் பழிவாங் கப்பட்டிருகிறார் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

குசராத்தின் காவல்துறை கூடுதல் பொது இயக்குனராக இருந்த சிறீகுமார் என்பவர் 2002 கலவரத்தில், கலவரக் காரர்களுக்குச் சார்பாக காவல்துறை செயல்பட்டது என வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தை சிறப்புப் புலனாய்வுக் குழுவும் நானாவதி-மேத்தா விசாரணை ஆணையமும் ஏற்கவில்லை. மாறாக சிறீகுமார் பொய்யான தகவல்களைத் தந்து அப்பாவிகள் மீது குற்றஞ்சாட்டுகிறார்; பொய்யானத் தகவல்களை அளித்து பரபரப்பை ஏற்படுத்தி னார் என்று 25.06.2022-இல் கைது செய்யப்பட்டார்.

குசராத்து கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக தொடர்ந்து போராடிவரும் தீஸ்தா செதால்வத் குசராத்து மாநில அரசாலும் நீதித்துறை யாலும் பல கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்.

குசராத்து மாநில அரசின் பழிவாங்கும் மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு நீதித்துறையின் போக்கு இசைவாக இருந்து வருகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற உண்மை ஆகும்.

### அறிவாளர்கள், சமூகச் செயற்பாட்டாளர்களை நகர்ப்புற நக்சல்கள் என நசுக்கும் புதிய நாசிச பா.ச.க.

01.01.1818-இல் மராட்டிய மாநிலம், பூனா நகரில் இருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள பீமா கேரேகான் என்ற இடத்தில் 200 ஆண்டுகளுக்கு முன், மராட்டியத்தை ஆண்ட பேஷ்வாக்களின் பெரும்படையை எதிர்த்து கிழக் கிந்தியக் கம்பெனியின் பம்பாய் மாகாண இராணுவத்தில் இருந்த மராட்டிய பட்டியல் வகுப்பினரான மகார் வீரர்களைக் கொண்ட சிறிய படை போரிட்டு வெற்றியடைந்தது; அவ்விடத் தில் வெற்றித் தூண் நிறுவப்பட்டது. அந்த நிகழ்வை ஆண்டுதோறும் சனவரி முதல் நாளில் அந்த வட்டாரத்தில் உள்ள தலித் மக்கள் அவ்விடத்தில் கூடிக் கொண்டாடுவது வழக்கம். 2018-இல் 200-ஆம் ஆண்டு என்பதால் அந்த நிகழ்வு பெரிய அளவில் கொண்டாடப்பட்டது.

‘உரத்த அறைகூவல்’ என்ற பொருள் கொண்ட ‘எல்கர் பரிஷத்’ என்ற மாநாட்டை 31.12.2017 அன்று உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.பி.சாவந்த் மற்றும் மும்பை உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி.ஜி. கோல்சே படேல் முதலா னோர் முன்னின்று ஏற்பாடு செய்திருந்தனர். தலித் ஆதர வாளர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் ஏராளமான பேர் அதில் பங்கேற்றனர்.

அந்த நிகழ்வு பெரிய அளவில் நடைபெறுவதை விரும்பாத இந்துத்துவத் தலைவர்களான சாம்பாஜி பிடே, மிலிந்த் எக்போட் முதலானோர் அங்கு அடியாட்களை ஏவி கலவரத்

தைத் தூண்டினர். நிகழ்விடத்தில் கல்வீச்சு நடந்தது. கலவரத் தைத் தூண்டியவர் மீது காவல் துறையில் புகார் அளிக்கப் பட்டது. மிலிந்த் எக்போட் என்பவரை 14.03.2018-இல் கைது செய்து, பின் பிணையில் விடுவித்தது. சாம்பாஜி பிடே என்பவர் கைது செய்யப்படவே இல்லை. அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறியது காவல்துறை.

ஆனால் நிகழ்வில் பங்கேற்றவர்கள் மற்றும் இதற்கு துணைபுரிந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் தில்லி, மும்பை என இந்தியா முழுவதும் பல இடங்களில் தேடித் தேடி புனா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர். அப்போது மராட்டியத்தின் முதலமைச்சராக இருந்த பா.ச.க. பார்ப்பன ரான தேவேந்திர பட்னாவிஸ் அரசால் அப்படி கைது செய்யப்பட்ட 16 பேர் விவரம் வருமாறு :

கபீர் கலாமஞ்ச் அமைப்பைச் சார்ந்த ஜோதி ரகோபா ஜக்தாப், சாகர் தத்யாராம் கோர்கே, இரமேஷ் முரளிதர் கெய்சார், சுகிர்தவாலே ஆகிய நால்வர்; மற்றும் வழக்கறி ஞரும் மனித உரிமை-தலித் உரிமை செயற்பாட்டாளருமான சுரேந்திர காட்லிங், மனித உரிமை செயற்பாட்டாளர் மகேஷ் ராவுத், நாக்பூர் பல்கலைக்கழக ஓய்வுபெற்ற பேராசிரியரும் எழுத்தாளருமான சோமாசென், ஆராய்ச்சியாளர் ரோனா வில்சன், வழக்கறிஞர் அருண் பெரைரா, வழக்கறிஞரும் தொழிற்சங்கவாதியுமான சுதா பரத்வாஜ், கவிஞர் வரவர ராவ், வழக்கறிஞர் வெர்னான் கோன்சால்வஸ், மார்க்சிய - தலித் அறிஞர் ஆனந்த் டெல்டும்டே, வழக்கறிஞர் கவுதம் நவ்லகா, தில்லி பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹனிபாபு, சமூக செயற்பாட்டாளர் பாதிரியார் ஸ்டேன் சுவாமி ஆகியோர் ஆவர்.

மேற்குறிப்பிட்ட அறிஞர்களையும் சமூகச் செயற்பாட் டாளர்களையும் கைது செய்து சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத் (UAPA)தின் பல பிரிவுகளில் குற்றம் சுமத்தி, விசாரணை இன்றி சிறையில் அடைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாக விசாரணை ஏதுமில்லாமல் சிறையில் வைத்துள்ளதைப் பற்றி சுதந்திரமான ஒரு விசாரணைக் குழு அமைத்து விசாரித்திடுமாறு வேண்டி ரொமிலாதாப்பர் மற்றும் அறிஞர்கள் சிலரும் உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தனர். ஆனால் உச்சநீதிமன்றம் அதனை ஏற்க மறுத்து விட்டது.

22.01.2020-இல் மராட்டிய மாநில அரசு மாறியதும் இது தொடர்பான விசாரணையை மாநில அரசின் ஒப்புதல் பெறாமலே தேசியப் புலனாய்வு முகமை (NIA) கையில் எடுத்துக் கொண்டது. ரோனா வில்சன் உள்ளிட்ட சிலரின் மடி கணினியில் அவர்களுக்குத் தெரியாமலே 'ஹேக்' செய்து பல செய்திகளை உள்ளிட்டுவிட்டு, அவர்கள் மாவோயிய அமைப்பினருடன் தொடர்புள்ளவர்கள் என்று தேசியப் புலனாய்வு முகமை கூறியது. மோடியைக் கொல்லவும் சதி இருந்ததாகக் கதைகள் கட்டி உலவவிட்டது. நரேந்திர மோடி உள்ளிட்ட எல்லா சங்கிகளும் அவர்களுக்கு எதிராகக் கருத்து கூறும் அறிஞர்களை நகர்ப்பற நக்சல்கள் எனப் பெயர் சூட்டிப் பரப்பிக் கொண்டுள்ளனர்.

83 அகவை ஸ்டேன் சுவாமிக்கு பர்க்கின்சன் நோய் இருந்தது. அதனால் குவளையைப் பிடித்து எடுத்து நீர் அருந்தவும் முடியவில்லை என அவர் சிறை வைக்கப் பட்டிருந்த தலோஜா சிறை நிர்வாகத்திடம் உறிஞ்சு குழாய் அளிக்க வேண்டினர். ஆனால் சிறை நிர்வாகம் உறிஞ்சு குழல் அளிக்க முன்வரவில்லை. வெளியில் இருந்து பலர் சிறைக்கு உறிஞ்சு குழல்களை ஏராளமாக அனுப்பினர். அதன் பின்பே அவருக்கு உறிஞ்சு குழல் அளிக்கப்பட்டது.

சுதா பரத்வாஜ் பிணை வழக்கு 60 முறை விசா ரணைக்கு வந்தது; 40 முறை காவல் துறையினர் அவரை நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லவில்லை. தேசத் துரோகக் குற்றச்சாட்டுடன் உபா சட்டத்தின் கீழும் சிறையில் இருந்த 60 அகவையான சுதா பரத்வாஜ் முடக்குவாதத்தால் மிகவும் உடல்நலம் குன்றிய நிலையில் 3 ஆண்டுகள் தூய்மையற்ற மிகவும் மோசமான பைகுல்லா சிறையில் இருந்த பின் மும்பை உயர்நீதிமன்றத்தில் 09.12.2021 அன்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

கவுதம் நவ்லகா, சுதா பரத்வாஜ் ஆகியவர்கள் படிப்பதற்கு செய்தி இதழ்கள் மற்றும் நூல்கள் அளிக்க சிறை நிர்வாகங்கள் மறுத்தன. 68 அகவை ஆன கவுதம் நவ்லகாவின் படிப்ப தற்கான கண் கண்ணாடி களவாடப்பட்டுவிட்டது. அவரது குடும்பத்தினர் வேறு புதிய கண்ணாடி வாங்கி அளித்ததை சிறை நிர்வாகம் அவருக்கு அளிக்க மறுத்தது. இதை அவரது குடும்பத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

பாதிரியார் ஸ்டேன் சுவாமி வேலூர் சி.எம்.சி. மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்தவர். ஜார்கண்டில் பழங்குடி மக்களுக்கு நீண்டகாலமாக பல வகைகளில் உதவியாகச் செயல்பட்டவர். அவரை பயங்கரவாதி என்றது மோடியின் பாசிச அரசு. அவரது பிணை கோரிக்கை பலமுறை மறுக்கப் பட்டது. சிறையில் அவரது உடல்நிலை மிகவும் நலிவடைந்து 05.07.2021 அன்று இறந்தார்.

அவரது சாவு அவர் மோடி அரசை விமர்சித்ததற்கான விலை ஆகும். ஆனால் அவர் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் மீதும் இந்திய நீதித் துறையின் மீதும் நம்பிக்கைக் கொண்டி ருந்தார். பாதிரியார் ஸ்டேன் சுவாமியின் இறப்பு இந்த நாட்டின் ஜனநாயக நடைமுறையிலோ அரசாட்சியின் நடைமுறையிலோ நீதித் துறையின் போக்கிலோ எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது?

அதன்பின் ஆனந்த் டெல்டும்டே பிணையில் விடுவிக்கப் பட்டார். 28.07.2023 அன்று வெர்னான்கோன்சால்வசும்

அருண் பெரைராவும் உச்சநீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டனர். பீமா கோரேகான் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டு இவர்கள் மாவோயிஸ்டுகள் என்பதே ஆகும். மாவோவியக் கருத்து களைக் கொண்டிருப்பதாலோ மாவோயிஸ்டுகளை ஆதரிப்ப தாலோ ஒருவரைக் குற்றவாளி என்று கூறமுடியாது; அவர் வன்முறையில் ஈடுபடும்படித் தூண்டினால் - நேரடியாக வன்முறையில் ஈடுபட்டால் மட்டுமே குற்றஞ்சாட்ட முடியும் என்று உச்சநீதிமன்றம் பல தீர்ப்புகளில் தெளிவுபடுத்தி யுள்ளது. ஆனால் பீமா கோரேகான் வழக்கில் உச்சநீதிமன்ற விளக்கத்தின்படி கீழமை நீதிமன்றம் முதல் உச்சநீதிமன்றம் வரை நடந்துகொள்ளவில்லை என்பது பேரவலமாகும். மனித உரிமைகளைவிட ஆட்சியாளரின் விருப்பமே முதன்மை என்று உயர்நீதித்துறையும் கருதுகிறது என்ற முடிவுக்கு மக்கள் வரவேண்டியுள்ளது.

அயோத்தி பாபர் மசூதி இடிப்பு வழக்கில் மசூதியை இடித்தது குற்றம் தான் என்றாலும் அந்த இடத்தை இராமன் கோயில் கட்டுவதற்கு அளித்துத் தீர்ப்பளித்ததும் அதோடு நிற்காமல் இராமன் கோயில் கட்டுவதற்காக 3 மாதங் களுக்குள் ஒரு அறக்கட்டளை உருவாக்கிட வேண்டும் எனத் தீர்ப்பளித்ததும் நீதித்துறை வரலாற்றில் புரியாத புதிராகும். 2024 சனவரியில் அயோத்தியில் இராமன் கோயில் திறக்கப்பட உள்ளது. பா.ச.க.வுக்கு நாடாளுமன்றத் தேர்த லுக்கான துருப்புச் சீட்டாக அது இருக்கும்.

ரபேல் போர் வானூர்திகள் இறக்குமதியில் - கொள் முதலில் ஊழல் நடந்துள்ளதான வழக்கில் ஒன்றிய அரசு, அது தொடர்பான கோப்பே பாதுகாப்புத் துறை அலுவலகத் தில் இருந்து காணாமல் போய்விட்டது என்று தெரிவித்தது; உச்சநீதிமன்றம் அது தொடர்பாக எந்த விசாரணையையும் ஏற்காமல் நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு தள்ளுபடி செய்துவிட்டது.

காஷ்மீரத்துக்கு இருந்த சிறப்புரிமைப் பிரிவு 370 இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருந்து நீக்கியதை ஒட்டி காஷ்மீரத்து அரசியல் தலைவர்கள் சிறைவைக்கப்பட்டது தொடர்பான வழக்கை நீதிபதி ரஞ்சன் கோகாய் விசார ணைக்கு ஏற்கவே மறுத்துவிட்டார்.

நீதிபதிகள் பணிநிறைவுக்குப் பின் அரசோ, அரசியல் கட்சிகளோ வழங்கும் வேறு பதவிகளை ஏற்பது எப்படி நியாயமாகும்?

நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றமே மேற்சுட்டியவாறு நடந்துகொண்டால் மக்களுக்கு நீதித்துறை மீதுள்ள நம்பிக்கை நீடிக்குமா என்பது கேள்விக்குறியே!

குடிமக்கள் தனிமனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் கருத்துரிமையை மீட்டெடுக்கவும் பாசிச பா.ச.க.வை அதிகாரத்திலிருந்து அகற்றுவதைத் தவிர இப்போதைக்கு வேறு வழியில்லை. ❖

## பொது சிவில் சட்டத்தைக் கண்டித்து கூட்டம்



வாழ்வுரிமை கூட்டமைப்பின் சார்பில், கூட்டமைப்பின் ஒருங்கி ணைப்பாளர் ந.வேலு அர்களின் தலைமையில் மாலை 5.30 மணிக்கு வாணியம்பாடியில் 31.7.2023 அன்று தெருமுனைக் கூட்டம் நடை பெற்றது. "பா.ச.க.வின் சதித் திட்டம், பொது சிவில் சட்டம் இந்தியர்களுக்கு எதிரானது" என்ற தலைப்பில் கசேந்திரன் அப்பாதுரை, உரூபன், பசிக் அக்ரம், தோழர் சலீம் பாசா ஆகியோர் உரையாற்றினார்கள்.

"பற்றி எரியுது மணிப்பூர், கையாலாகாத ஒன்றிய அரசு, வாய் திறக்காத பிரதமர் மோதி" என்ற தலைப்பில் நா. செவ்வேள், ந. முகமது நயீம், தோழர் இரா.முல்லை, நா. மதனகவி ஆகியோர் உரையாற்றினார்கள். மு.பிரதாபன் வரவேற்புரையாற்றினார். மரு.சு. ஞானசேகரன், புலவர் அ.சகாதேவன், மு.சுரேசு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். கா. புருசோத்தமன் நன்றியுரையுடன் தெருமுனைக் கூட்டம் நிறைவுற்றது.

## தமிழக மக்கள் முன்னணி நடத்திய கண்டனப் பொதுக்கூட்டம்




மணிப்பூர் பழங்குடி மக்களை இனப் படுகொலை செய்யும் ஒன்றிய, மாநில பா.ச.க. அரசுகளே பதவி விலகு! தமிழ்நாட்டின் மாண்புக்கும், மரபுக்கும், அரசுக்கும் எதிராக அடாவடித்தனம் செய்யும் ஆளுநர் ஆர்.என். இரவியே தமிழ்நாட்டை விட்டு வெளியேறு! என்னும் முழக்கங்களை வலியுறுத்தி தமிழக மக்கள் முன்னணி சார்பில் 4.8.2023 வெள்ளி அன்று மாலை 6 மணிக்கு சென்னை புதுவண் ணையில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. தோழர் நிலவழகன் தலைமைத் தாங்கினார். தோழர் செல்வமணி வரவேற்புரை யாற்றினார். தோழர் செவ்வேள் தொடக்கவுரையாற்றினார்.

தோழர்கள் பொழிலன், வாலாசா வல்லவன், மங்கையர்ச் செல்வன், பாவேந்தன், பாவெல், குமரன், காஞ்சி அமுதன், தெய்வமணி, சுப்புமகேசு, சிவ.செந்தில்வாணன், சின்னப்பத் தமிழர், சீராளன் ஆகியோர் உரையாற்றினர்.

# அர்ச்சகர் வழக்கில் வரவேற்கத்தக்க தீர்ப்புகள்

—வாலாசா வல்லவன்

சேலம் சுகனேஸ்வரர் கோயிலுக்கு அர்ச்சகர் பணிக்கு ஆகமப் பயிற்சி முடித்த தகுதியானவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற் கப்படுகின்றன என்று இந்து அறநிலையத் துறை 18.1.2018 அன்று நாளேடுகளில் விளம்பரம் செய்திருந்தது. இதை எதிர்த்து அந்தக் கோயிலில் அர்ச்சகர் பணியிலிருந்த முத்து சுப்பிரமணிய குருக்கள் என்பவர் "இந்தக் கோயில் காமீக ஆகம அடிப்படை யில் அமைந்துள்ளது. நாங்கள் நீண்டகால மாக இங்கு அர்ச்சகர் பணி செய்து வருகிறோம். பாரம்பரிய முறையில் பழக்கம் வழக்கம் என்ற அடிப்படையில் சிவாச்சாரியார் பிரிவைச் சேர்ந்த நாங்கள் தான் அர்ச்சகராகத் தகுதி உடையவர்கள். எனவே தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறை மேற்கொள்ளும் புதிய அர்ச்சகர் பணிநியமனத்திற்கு தடை விதிக்க வேண்டும்" என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

8.6.2023 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் ஆர். சிங்காரவேலன் மற்றும் எம். முருகானந்தம் ஆகியோர் வழக்காடினர். தமிழ்நாடு அரசின் இந்து அறநிலையத் துறையின் சார்பில் அரசு வழக்குரைஞர் என்.ஆர்.ஆர். அருண் நடராசன் வழக்காடினார். நீதிபதி ஆனந்த் வெங்கடேசு முன்னிலையில் நடைபெற்ற இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி 26.6.2023 அன்று தன் தீர்ப்பை அளித்தார்.

"ஆகமக் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கப் படுபவர்களுக்கு ஆகமங்களும் சடங்குகளும் தெரிந்திருந் தால் போதும். அவர்களுக்கு சாதி தடையாக இருக்க முடியாது. எவர் ஒருவரும் பரம்பரை உரிமைக் கோர முடியாது" என்று கூறினார்; பல தீர்ப்புகளில் இருந்து மேற்கோள் காட்டினார்.

1972-இல் சேஷம்மாள் வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். அர்ச்சகர் பதவியில் பரம்பரை முறை கூடாது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

2022-ஆம் ஆண்டில் ஆதித்தியா எதிர் கேரள தேவசம் போர்டு வழக்கில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையும் நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஒரு ஆகமக் கோயிலில் பிராமணரோ அல்லது மலையாள பிராமணரோ அர்ச்சகராக இருந்தால் அவர்களே அவர்கள் மட்டும் தான் தொடர்ச்சியாக அர்ச்சகர்களாக இருக்க வேண்டும் என்கிற வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. பிராமணர்கள்



மட்டுமே அர்ச்ச கர்களாக இருக்கிறார்கள் என்பதன் பொருள் பிராமணர் அல்லாதார் அர்ச்சகர் ஆகக் கூடாது என்பது அல்ல; அதற்குப் பல்வேறு காரணங்கள் உண்டு. வேதம் படிப்பதற்குத் தடைபோடப்பட்டது. பூணூல் அணிவதற்கு தடைப்போடப்பட்டது. பிராமணர்களுக்கு மட்டுமே இந்த உரிமை இருந்த காரணத்தினால் தான் பிராம ணர்களே அர்ச்சகர்களாகத் தொடர்ந்து இருக்க முடிந்தது.

இப்போது அந்த நிலை மாறிவிட்டது. தேவசம் போர்டு அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகும் வகையில் வேத ஆகம பாடசாலைகளை நடத்தி பார்ப்பனர் அல்லாத மற்ற சாதியினரும் அர்ச்சகர் ஆக தகுதி உண்டு என்று சான்று அளித்துள்ளதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. எனவே பயிற்சி பெற்ற பார்ப்பனரல்லாதாரும் அர்ச்சகர் ஆகலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது" என்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் ஆதித்தியன் வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் கேரளாவில் பட்டியல் வகுப்பினர் கூட சிவன் கோயில்களில் அர்ச்சகர்களாகப் பணி அமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் எந்தெந்த கோயில்கள் ஆகமத்தின் கீழ் வருகின்றன என்பதைக் கண்டறிய ஓய்வுபெற்ற நீதிபதி சொக்கலிங்கம் தலைமையில் குழு அமைக்கப் பட்டுள்ளது. அதை எதிர்த்தும் பல வழக்குகள் தொடரப் பட்டுள்ளன. எனவே அந்தக் குழுவின் அறிக்கை

வரும் வரையில் காத்திருக்க வேண்டும் என்ற மனுதாரரின் கோரிக்கையையும் நீதிபதி ஏற்க மறுத்தார். அந்தக் குழுவின் அறிக்கைக்காக காத்திருந்தால் அன்றாடம் நடைபெற வேண்டிய பூசை, அபிசேகம் போன்றவற்றை தடையின்றி மேற்கொள்வதில் சிக்கல் ஏற்படும். எனவே அதுவரை புதிய அர்ச்சகர் நியமனம் செய்யாமல் காத்திருக்க முடியாது என்று நீதிபதி தீர்ப்பளித்தார். புதிய நியமனம் செய்யும் வரை முத்து சுப்பிரமணிய குருக்கள் அர்ச்சகராகப் பணியாற்றலாம் என்றும் புதிய அர்ச்சகர் நியமன நேர்காணலில் முத்து சுப்பிரமணிய குருக்கள் கலந்துகொள்ள வாயப்பளிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளித்தார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து முத்து சுப்பிரமணிய குருக்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். தலைமை நீதிபதி கங்கா புர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு முன்பு 27.7.23 அன்று இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் பி. வள்ளியப்பன் ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்களில் அர்ச்சகர்களைப் பரம்பரையாகத்தான் நியமிக்க வேண்டும் என வழக்காடினார். தனி நீதிபதி தீர்ப்பு உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு எதிரானது; அதற்கு தடைவிதிக்க வேண்டும் என்றார். தமிழ்நாட்டரசின் இந்து அறநிலையத் துறை தரப்பில் வழக்குரைஞர் சண்முகசுந்தரம் ஆகம விதிகளைப் பின்பற்றும் கோயில்கள் எவை? ஆகம விதிகளைப் பின்பற்றாத கோயில்கள் எவை? என்பது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்டுள்ள குழு தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது. இந்தப் பணி நடைபெற்றுவரும் நிலையில் தனி நீதிபதி உத்தரவுக்குத் தடைவிதிக்கக்கூடாது. 2,405 அர்ச்சகர் பணியிடங்கள் காலியாக உள்ளன என வாதிட்டார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள் ஆய்வுக்கு குழு இன்னும் அறிக்கை சமர்ப்பிக்காத நிலையில் சேலம் சுகவனேசுவரர் கோயில் ஆகம கோயில் தான் என எவ்வாறு முடிவு செய்தீர்கள் என அரசுக்கு கேள்வி எழுப்பினர். தனி நீதிபதியின் தீர்ப்புக்கு தடைவிதிக்க மறுத்துவிட்ட நீதிபதிகள் வழக்கை செப்டம்பர் 22ஆம் நாளுக்கு ஒத்தி வைத்துள்ளனர்.

11.08.2023 அன்று சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், டி.பரத சக்ரவர்த்தி அமர்வு ஏற்கனவே உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நீதிபதி சுவாமிநாதன் பார்ப்பனர்களே அர்ச்சகர்களாகத் தொடரவேண்டும் என்று வழங்கியத் தீர்ப்புக்கு தடை உத்தரவு அளித்துள்ளது. இது பார்ப்பனரல்லாத அர்ச்சகர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

தமிழ்நாட்டரசின் இந்து அறநிலையத் துறை அனைத்து சாதியினர் அர்ச்சகர் பணிக்கு காலியாக உள்ள 2,405 பணியிடங்களையும் இடஒதுக்கீடு அடிப்படையில் விரைந்து பணிநியமனம் செய்திட வேண்டும். ❖

## புதுமைக்கவிஞர் புலமைதாசனின் பவழ விழா மற்றும் நூல்கள் வெளியீட்டு விழா



நாடறிந்த கவிஞரும் நல்ல தமிழ்ப் பதிப்பாளருமான புதுமைக் கவிஞர் புலமைதாசன் மற்றும் அவரின் துணைவியார் பால சரஸ்வதி அவர்களின் பவழ விழாக் கூட்டமும், கவிஞர் புலமைதாசனைப் பற்றிய பாவலர் போற்றும் புலமைதாசன் மற்றும் புலமைதாசனின் புகழ்ப்பூக்கள் ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவும் 1.7.2023 அன்று மாலை 6 மணியளவில் சென்னை, திருவல்லிக்கேணி, நீலிவீராச்சாமி தெருவிலுள்ள என்.ஜி.ஓ. சங்கக் கட்டடத்தில் புலவர் தங்க. சங்கரபாண்டியன் தலைமையில் மிகச்சிறப்பாக நடை பெற்றது.

திரு. சு. தினகரன் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். விழாவின் தொடக்கத்தில் வாழ்த்துக் கவியரங்கம் ‘‘பாவலர் பார்வையில் புலமைதாசன்’’ என்னும் தலைப்பில் கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கத்திற்கு முகம்மது அசன் பாவா தலைமை ஏற்றார்.

விழாவில் பாவலர் போற்றும் புலமைதாசன் நூலை ஓவியக்கவிஞர் அமுதோன் வெளியிட முதற்பிரதியை கவிஞர் தாரை. அ. குமாரவேலு அவர்கள் பெற்றுக் கொண்டார். ‘புலமைதாசன் புகழ்ப் பூக்கள்’ நூலை இரா. மோகனசுந்தரம் வெளியிட முதற்பிரதியை காவல்துறைக் கூடுதல் கண்காணிப் பாளர் (ஓய்வு) ரெ. நாகராசன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து வாழ்த்தரங்கம் நடைபெற்றது. தன்மானப் புலவர் தங்க. சங்கரபாண்டியன் தம் தலைமை உரையை நிகழ்த்தினார். புதிய சிந்தனையாளன் ஆசிரியர் வாலாசா வல்லவன் மேனாள் தமிழ்வளர்ச்சித் துறை இயக்குனர் (ஓய்வு) கூ.வ. எழிலரசு ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இறுதியில் பவழ விழா நாயகர் புதுமைக் கவிஞர் புலமைதாசன் அவர்கள் ஏற்புரை ஆற்றினார். சு. பார்த்திபன் நன்றி உரை ஆற்றிட விழா இனிதே முடிவுற்றது.

செய்தி : தங்க. சங்கரபாண்டியன், சென்னை-74

# உடல் நலம் பேணல்

- மா. தசரதன்

நம் சமூகத்தில் அறிவியல் வளர்ந்துள்ளது. வசதி வாய்ப்புகள் பெருகியுள்ளன. இருப்பினும் உடல் நலமும் பேணுவோர், பெற்றோர் அரிதினும் அரிதாகவே உள்ளனர். இதற்குக் காரணம் நம் மக்கள் படிப்பறிவு அடைந்த அளவிற்கு பயனறிவு (Practical Knowledge) அடையாத வர்களாகவே உள்ளனர்.

நோய்களுக்கு அடிப்படை, ஒன்று மலச்சிக்கல்; மற்றொன்று மனச்சிக்கல். இவை இரண்டும் ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையது. மனத்தில் சிக்கல் இருந்தால் மலத்தில் சிக்கல் இருக்கும். மலத்தில் சிக்கல் இருந்தால் அவர்களுக்கு மனத்திலும் சிக்கல் இருக்கும்.

"காலை மலமொடு கடும்பகல் பசி, நிசிவேளை நித்திரை பிழைத்தும்" என்பது தமிழறிஞரின் கூற்று.

காலையில் மலங்கழித்துப் பிழைக்க வேண்டும். நண்பகல் தேவைக்கு உண்டு பசியினின்று பிழைக்க வேண்டும். இரவில் நன்றாகத் தூங்கி தூக்கத்தினின்று பிழைக்க வேண்டும் என்றும், இரவில் தூக்கம் வராமல் புரண்டு,புரண்டு படுத்து உறக்கமின்றி அவதிப்படுவதிலிருந்து பிழைக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்தி னையே நம் திருமூலர்,

"காணுமே மந்தம் கவளிக்கும் அன்னத்தால்
காணுமே மந்தம் கடுமாமிசம் மீறிப்
காணுமே மந்தம் கலந்தமாப் பண்டத்தால்
காணுமே மந்தம் கடுமேதிப் பாலுக்கே"

என்று குறிப்பிடுகின்றார். வாயிலிட்ட உணவை பற்களால் நன்றாக மென்று விழுங்குதல் (செரிமானப் பாதையில் வாயைத் தவிர வேறெங்கும் பற்கள் இல்லை). இறைச்சி உணவினாலும், மாவினால் செய்த இட்லி, தோசை முதலிய பலகாரங்களினாலும், எருமைப் பாலினாலும் மந்தம் உண்டாகி மலச்சிக்கல் ஏற்படும் என்கின்றார். இதனை நாம் கவனத்தில் கொண்டு கடைபிடித்தல் அவசியம்.

மலச்சிக்கலும், மனச்சிக்கலும் அடையாதிருக்க, காலையில் எழுதல், காலைக்கடன்களை முடித்தல், காலை, மாலை உடற்பயிற்சி இசைவிருக்கை என்கின்ற யோகாசனம் செய்தல், காலை எழுந்தவுடனும் இரவு படுக்கும் முன்னும் தேவையான தூய நீர் அருந்துதல், அடிவயிற்றுப் பயிற்சி, இடுப்புக் குளியல், மலச்சிக்கல் செய்யாத உணவை தேர்ந்து உண்ணல், இவைகளை கடைபிடித்தால் மலச்சிக்கலின்றி நலமுடன் வாழலாம்.

**மலச்சிக்கல் இல்லை என்று அறிவதெவ்வாறு?**

அதிகாலை துயிலெழுதல் வேண்டும். விழித்த பத்து அல்லது பதினைந்து மணித்துளிகளில் (நிமிடங்களில்) மலம் கழிக்கப்பட வேண்டும். அவ்வேலை ஓரிரு மணித்துளிகளில் முடிந்துவிட வேண்டும். விழித்தெழுந்து ஒரு மணிநேரம் கழித்தபின் மலம் கழிப்பவர் மலச்சிக்கல் உடையவரே. மலம் கழிக்க பத்து அல்லது பதினைந்து மணித்துளிகள் எடுத்துக் கொண்டால் மலச்சிக்கல் உடையவரே. காலையில் மலம் கழித்து, பின் தேநீர் முதலானவற்றை உட்கொண்டு பின்னர் மீண்டும் மலங்கழித்தால் மலச்சிக்கல் உடையவரே. காலையில் போகாமல் மாலையில் மலம் கழிப்பவர் மிகுதி யான மலச்சிக்கல் உடையவரே என்பதில் அய்யமில்லை. காலையில் போய்விட வேண்டும். சிறிது நேரத்தில் அவ்வேலை முடிய வேண்டும். தாராளமாய் போய்விட வேண்டும். சிரமம் இல்லாமல் கழிக்கப்பட வேண்டும். துர்நாற்றம் இல்லாமல் இருத்தல் வேண்டும். பிசுபிசுப்பும் ஒட்டுத்தன்மையும் இல்லாதிருத்தல் வேண்டும். மற்ற உயிரினங்களைப் போல் மலம் கழிபட வேண்டும். இவைகள் அனைத்தும் கிடைத்திட உட்கொள்ளும் உணவை நெறிபடுத்துதல் அவசியம்.

நம் முன்னோர்களாகிய தமிழறிஞர்கள் ஒவ்வொன்றிற் கும் பெயர் சூட்டும் போது, அறிவில் சிறந்தவர்களாகவும் நுண்ணுணர்வாளர்களாகவும் இருந்து ஆய்ந்தறிந்து பெயர்களைச் சூட்டியுள்ளனர். அதனடிப்படையில் பெயர் சூட்டும் போது "மலசலம்" (மலசலம் என்பது வடமொழிச் சொல் அல்ல; தூய தமிழ்ச் சொல்லே. அருவியில் தண்ணீர் சலசலவென கொட்டுகிறது என்று குறிப்பிடுகின்றோம் அல்லவா!) என்று பெயர் வைத்துள்ளனர். இந்நிலையிலே மலம் கழியும் போது, முதலில் மலம் வெளிவர வேண்டும். பின்னர் சிறுநீர் வெளியேற வேண்டும். இவ்வாறு இருப்பின் அவரிடம் மலச்சிக்கல் இல்லை என்று உணரலாம்.

**மலச்சிக்கலை தவிர்க்க:** அந்தந்த காலங்களில் கிடைக்கக் கூடிய நம் நாட்டுப் பழங்களை உட்கொள்ள வேண்டும். எப்பொழுதும், எல்லா காலங்களிலும் கிடைக்கக் கூடிய தேங்காயை உண்ணப் பழகுதல் வேண்டும். வயதானவர்கள் தேங்காயை திருகி உண்ணலாம். அல்லது பாலெடுத்து உண்ணலாம். தேங்காயை சமைத்து உண்ணும் போது அது கெட்ட கொழுப்பாகிறது. சமைக்காமல் உண்ணும் போது நல்ல கொழுப்பாகிறது. பழங்கள், தேங்காய், கொடிகாய்கள், கீரைகளையும் முக்கிய உணவாகப் பயன் படுத்த வேண்டும். இவைகளில் நார்ச்சத்தும், நீர்ச்சத்தும் மிகுந்துள்ளது. எனவே இவைகளை உண்ணும் போது மலச்சிக்கல் இருக்காது. மலச்சிக்கல் இல்லாத போது நமக்கு மனச்சிக்கலும் இருக்காது.

**இசைவிருக்கை (யோகாசனம்) :**

மலச்சிக்கலில் இருந்து விடுபட நாளும் இசைவிருக்கை பழகுவது அவசியம்.

**கைகால் தொடு இருக்கை (பாத அஸ்தாசனம்) :**

காலைக்கடன்கள் முடிந்தபின், தரைவிரிப்பின்மீது நேராக நிற்கவும். இப்பொழுது மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே இரண்டு கைகளையும் தலைக்குமேல் உயர்த்த வேண்டும். கைகள் காதுகளை ஒட்டினார்போல் நேராக இருக்க வேண்டும். மூச்சை வெளிவிட்டவாரே கைகள், தலை, முதுகு ஆகியவற்றை முன்பக்கமாக வளைத்து, கைவிரல்களால் கால் பெருவிரலைத் தொட வேண்டும். கால்கள் முன்பக்கம் வளையாமல் நேராக இருக்க வேண்டும். முழங்கை, கால்களை ஒட்டி இருக்க வேண்டும். தலைப்பகுதி கால்களின் முட்டிப் பகுதியை தொட வேண்டும். மூச்சை இயல்பு நிலையில் உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். பழக்கம் இல்லாதவர்களுக்கு கைகளால் கால்களைத் தொட முடியாத நிலை இருக்கும். சோர்வடையாமல் தொடர்ந்து முயற்சி செய்து முடியும் வரை குனிந்து, நிமிர்ந்து, காலை, மாலை வெறும் வயிற்றில் இப்பயிற்சியை இருபது, இருபது முறை செய்து வந்தால் நன்கு பழக வரும். முயற்சித்தால் முடியாதது இல்லை. கால்களை மடக்காமல், நேராக நின்று பழகுதல் அவசியம்.

**பறவை பறக்கும் நிலை இருக்கை (பச்சி மோத்தாசனம்) :**

தரை விரிப்பின் மீது நேராக உட்கார்ந்து கால்கள் இரண்டையும் முன்னோக்கி நீட்ட வேண்டும். கை, கால் தொடு இருக்கையில் செய்ததுபோல், கைகளை தலைக்கு மேல் நேராக உயர்த்த வேண்டும். மூச்சை உள்ளிழுத்துக் கொண்டே உயர்த்த வேண்டும். கைகள் காதுகளை ஒட்டினார்போல் இருக்க வேண்டும். பின் மூச்சை வெளி விட்டுக் கொண்டே கைகள், தலை, முதுகு, இடுப்பு ஆகிய வற்றை முன்பக்கமாக வளைத்து கைவிரல்களால் கால் பெருவிரல்களைத் தொட வேண்டும். கால்கள் தரையோடு ஒட்டி இருக்க வேண்டும். தலையை கால்களின் முட்டிப்பகுதியின்மீது வைக்க வேண்டும். கைகள் கால்களை ஒட்டினார்போல் வைக்க வேண்டும். பார்ப்பதற்கு பறவை பறப்பது போன்று தோன்றும். மூச்சை இயல்பு நிலையில் உள்ளிழுத்து வெளிவிட வேண்டும். சிறிது நேரம் இருந்துவிட்டு கைகளையும் தலையையும் நேராக உயர்த்தி இருக்கையை கலையலாம். இதுபோல் ஒரு இருபது முறை எனத் தொடர்ந்து பழகி வந்தால் சில, பல நாட்களில் நன்றாகச் செய்யவரும். ஒவ்வொரு முறை செய்து நிமிரும் போது மூன்று முறை மூச்சை நன்கு இழுத்துவிட்டு பின் அடுத்த முறை குனிந்து பழகுதல் வேண்டும். கைகளால் கால்களைத் தொட முடியாதவர்கள் சோர்வடையாமல் தொடர்ந்து பழக வேண்டும். வயிற்றில் தொப்பை உள்ளவர்களால் சிரமமாக இருக்கும். பழகப் பழக தொப்பை ஒரு தடையாக இருக்காது.

பெங்களூர் சுதந்தரம் என்று ஒரு இசைவிருக்கை ஆசிரியர் இருந்தார். அவர் தொப்பையோடுதான் இருந்தார். ஆனால் அனைத்து பயிற்சிகளையும் சிறப்பாக செய்வார். தொப்பை காரணம் இல்லை. பழக்கம்தான் காரணம். நம்மால் முடியும் என்ற நம்பிக்கையோடு பழகி வந்தால், நாளடைவில் எளிதாகச் செய்ய வரும்.

மேற்கண்ட இருக்கைகளினால் வயிறு அழுத்தப்படு வதால் மலச்சிக்கல் இன்றி வாழும் நிலை ஏற்படும். அளவோடு உண்ணுகின்ற நிலை நம்மையறியாமல் நம்மிடம் குடிகொள்ளும். மலச்சிக்கல் இல்லை என்றால் நம் உடம்புக்கு எச்சிக்கலும் இல்லை. மகிழ்வோடு வாழலாம். அனைவரும் முயற்சிப்போம்; மகிழ்வோடு வாழ்வோம். அறுவை சிகிச்சை செய்து கொண்டோர், குருதி குறை நிறை உடையோர் உரிய இசைவிருக்கை ஆசிரியரின் ஆலோசனைப்படி பழகுதல் நலம். ❖

## வாணியம்பாடியில் வெல்ஃபர் கட்சி ஆர்ப்பாட்டம் மா.பெ.பொ.கட்சி பங்கேற்பு




திருப்பத்தூர் மாவட்ட வெல்ஃபேர் கட்சியின் சார்பில், மணிப்பூரில் பழங்குடியின பெண்களை நிர்வாணமாக்கி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக் கக்கப்பட்டதையும் சிறுபான்மையின கிருத்துவர் களை படுகொலை செய்யும் கலவரக்காரர்களை கண்டித்தும், இந்த கலவரத்தைக் கண்டு கொள்ளாத ஒன்றிய, மாநில பா.ச.க அரசைக் கண்டித்து, சூலை- 28 அன்று வாணியம்பாடி ஆற்றுமேட்டில் மாவட்டத் தலைவர் பசீக் அக்ரம் அவர்களின் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட மக்கள் தொடர்பு செயலாளர், முகமது அயூப், மாநில செயலாளர் அய்.எம்.சாதிக் பாம்செப் தமிழ்நாடு செயல் தலைவர் அ.கசேந்திரன் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடை மைக் கட்சியின் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா.மதனகவி வெல்ஃபேர் கட்சியின் மாநில தலைவர், தோழர் அப்துல் ரகுமான் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

# திராவிட ஆட்சிமுறை எதிர்கொள்ளும் சிக்கல்கள்

- ஆ. கலையரசன்

தமிழ்நாட்டரசு ஒரு நாள் வேலை நேரம் 8 மணி என்பதை 12 மணிநேரம் என உயர்த்தி, சட்ட முன்வரைவுக் கொண்டுவந்தது. பின் எதிர்ப்புகளினால் திரும்பப் பெற்றது. இது தொழில்மயமாக்குவதற்கான அரசின் நடவடிக்கைகள், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிப்பதாக இருக்கக் கூடாது என்கிற கருத்தாடலைத் தொடங்கியது. தொழில் மயமாக்கலை ஊக்குவிப்பதன் வழியாக சாதியால் விளைந்த ஏற்றத்தாழ்வை நீக்குவதும் தனியார்மய சந்தையால் ஏற்பட்ட பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்குவதும் திராவிட ஆட்சிமுறையின் உயர் குறிக்கோளாகும். பொருளுற்பத்தி யால் விளையும் வளமையைப் பங்கீடு செய்வதே இந்தச் செயல்முறையாகும். இந்த வகையில் திராவிட ஆட்சி முறையில், முக்கியக் குறிக்கோளில் இருந்து விலகிச் செல்வதாகவே இந்த வேலை நேர மாற்றம் பற்றிய சட்ட முன்வரைவு இருக்கிறது. இந்தச் சட்ட முன்வரைவுத் திரும்பப் பெறப்பட்டிருந்தாலும் தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்த்து, அதன்மூலம் வேலை வாய்ப்பை உருவாக்குவதே இந்தத் திருத்தத்தின் நோக்கம் எனத் தி.மு.க. அரசு கூறுகிறது. இந்தப் புரிதல் மிகவும் பிழையானதே ஆகும்.

### கட்டமைப்பு மாற்றம் பின்நோக்கிச் செல்கிறதா?

இந்தியாவில் கட்டமைவு மாற்றத்தையும் ஏழ்மைக் குறைப் பையும் ஒருசேர நிறைவேற்றிய மாநிலங்கள் சிலவற்றுள் தமிழ்நாடும் ஒன்று ஆகும். மொத்த வேலைவாய்ப்புகளில் வேளாண்மையைச் சார்ந்து இருப்பதன் பங்கு அனைத் திந்தியச் சராசரியைவிட தமிழ்நாட்டில் குறைவாக இருப்பதே இதற்கான முக்கியக் குறியளவு ஆகும். எனினும் இந்தப் போக்கு இப்போது எதிர்மறையாகி வருகிறது. வேலை வாய்ப்பில் வேளாண்மைச் சார்பின் பங்கு 2018-2019-இல் 27 விழுக்காடாக இருந்தது. இது 2020-21-இல் 30 விழுக் காடாக அதிகரித்துள்ளது. இதையே எண்ணிக்கையில் பார்த்தால் வேளாண்மையைச் சார்ந்து வாழும் மக்கள் 85 இலட்சம் என்பதிலிருந்து 1.05 கோடியாக அதிகரித்துள்ளனர். தொழில் துறையில் ஏற்பட்ட நெருக்கடியால் 20 இலட்சம் மக்கள் வேளாண் தொழிலை நோக்கி விரட்டப்பட்டுள்ள அவலநிலை ஏற்பட்டுள்ளது. உற்பத்தித் தொழில் துறையைச் சார்ந்தவர்கள் விகிதம் 20 விழுக்காட்டிலிருந்து 16.8 விழுக்காடாகக் குறைந்துள்ளது. எண்ணிக்கையில் பார்த்தால் 2011-12-இல் தொழில் துறையில் 65 இலட்சம் மக்கள் என்பது 2020-21-இல் 58 இலட்சமாகச் சரிவேற்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள காலகட்டம் தி.மு.க. ஆட்சியதி காரத்தை ஏற்பதற்கு முந்தியதுதான். ஆனால் இந்தத் தவற்றைத் திருத்துவதற்கு இதுவரை வழிகாணப்படவும் இல்லை; அதற்கான உறுதிமொழி எதையும் அளிக்கவு மில்லை.




சான்றாக த.நா. அரசு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 224 புரிந் துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் உரு.2,73,448 கோடி முதலீட்டை ஈர்த்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் எவ்வளவு முதலீடு இதுவரை கிடைத்துள்ளது என்பது தெரியவில்லை.

உறுதியளிக்கப்பட்டுள்ள முதலீட்டினால் 4,10,561 இளைஞர் களுக்கு வேலைகள் கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இதனைக் கணக்கிட்டால் முதலீட்டிற்கும் வேலை வாய்ப்பிற்கு மான விகிதம் 0.01 என்கிற அளவில் மிகவும் குறைவாக உள்ளது. உருபா ஒரு கோடி முதலீட்டினால் ஒரு ஆளுக்கும் குறை வாகவே வேலை கிட்டும். இதற்கு முன் இருந்த விகிதத் தைவிட இது மிகவும் குறைவாகும்.

தொழில் நிறுவனங்கள் பற்றிய ஆண்டு (2019-20) கணக்கெடுப்புப் புள்ளிவிவரப்படி ஒரு முதலீட்டுக்கு உருவாக் கப்பட்டுள்ள (மொத்த முதலுக்கு வேலை பெற்றத் தொழிலாளர் எண்ணிக்கை) வேலைகளின் விகிதம் தமிழ்நாட்டில் 0.58, குசராத்தில் 0.34, மகாராட்டிரத்தில் 0.33 ஆகும். இந்தப் போக்குத் தடுத்து நிறுத்தப்படாவிட்டால் ஊதியமும் குறைந்து போகும். வேலைகள் கிடைப்பதும் கானல் நீராக முடிவுறும்.

வரலாற்று நிலையில், வளர்ச்சியின் நோக்கத்தில் முதலீடுகளின் தேவையையும் தொழிலாளர் நலன்கள் ஓரளவுப் பேணிக் காப்பதையும் உணர்ந்து சமன்செய்வதில் தமிழ்நாட்டின் தனித்தன்மை அமைந்துள்ளது. முதலீட்டின் வலிமை அதிகரிப்பின் காரணத்தினால் உலகம் முழுவதும் தேசிய வருமானத்தில் தொழிலாளர் ஊதியத்தின் விகிதம் குறைந்து வருகின்றது. அதேவேளையில் தொழில் உற்பத்தித் துறையில் கூட்டப்பட்ட மொத்த மதிப்பை (Gross

Value Added-GVA) வரையறுப்பதில் த.நா.இன் அணுகுமுறையின் விளைவாகத் தமிழ்நாட்டுத் தொழிலாளர் ஊதியத்தின் விகிதம் மற்ற பல மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது.

2019-2020-ஆம் ஆண்டிற்கான கூட்டப்பட்ட மொத்த மதிப்பில் (GVA) சராசரியாக ஊதியத்தின் விகிதம் குசராத்தில் 12 விழுக்காடு, மகாராட்டிரத்தில் 14 விழுக்காடு என இருந்த போது, தமிழ்நாட்டில் அவற்றைப் போல் கிட்டத்தட்ட இருமடங்காக 21 விழுக்காடு ஆகும். உலகம் முழுவதிலும் முதலீட்டாளர்களுக்குச் சார்பான கொள்கைகளினால் சந்தையில் தொழிலாளர்களின் தேவை நிலையற்ற போக்கிற்குத் தள்ளப்பட்டதால் கூ.மொ.ம. (GVA)இல் ஊதியத்தின் பங்கு குறைந்துள்ளது. தமிழ்நாடு இதற்கு விலக்கு அல்ல என்றாலும் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க முடிந்துள்ளது.

இதற்குமுன் தமிழ்நாட்டில் தொழிலாளர் ஊதிய நிலைகள் ஒப்பீட்டளவில் அதிகம் என்பதற்குக் காரணம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் குறைவாக இருந்ததும் தொழிற்சங்கங்கள் மூலம் தொழிலாளர்களின் பேரம் பேசும் ஆற்றல் அதிகமாக இருந்ததும் ஆகும். தமிழ்நாட்டில் 2015-2016-இல் நேரடியாக பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் விகிதம் 80 விழுக்காடு; ஆனால் அனைத்திந்திய சராசரி விகிதம் 65 விழுக்காடாக இருந்தது. இந்தப் போக்கு தமிழ்நாட்டில் 2019-2020-இல் 76 விழுக்காடாகச் சரிந்துவிட்டதற்குக் காரணம் 1970ஆம் ஆண்டைய ஒப்பந்தத் தொழிலாளர் (ஒழுங்கு முறை மற்றும் ஒழிப்புச்) சட்டத்தைச் சரியாகவோ, முறைகேடாகவோ பயன்படுத்தியதே ஆகும். இந்தச் சட்டத்திற்குத் தொழிலாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களிலும் களத்திலும் தவறான விளக்கமளிக்கப்பட்டதால், தொழிலாளர்களுக்கு எதிரான போக்கு வளர்ந்தது. தமிழ்நாட்டில் தொழிலாளர்களின் முன்னைய மேம்பட்ட நிலை இப்போது தேய்ந்து வருகிறது. தொழிலாளர் களின் குறைகளைக் களைந்திட மாநில அளவிலும் தேசிய அளவிலும் முத்தரப்புக் குழுக்கள் அமைக்கப்பட ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்படுவோம் என்று தி.மு.க.வின் 2019-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் அறிக்கையில் உறுதிமொழி அளித்திருந்தது.

இந்தப் பின்னோக்கிய நிலையை தமிழ்நாடு பின்பற்றத் தேவையில்லை. தொழிலாளர்ச் சட்டங்களை நீர்த்துப் போகச் செய்வதோ, முதலீட்டாளர்களுக்கு வரிச்சலுகைகளை அளிப்பதோ மட்டுமே தொழிற் போட்டியில் வளர்ச்சியடைவதற்கான வாயில் அல்ல. தமிழ்நாட்டின் சாதகமான நிலை என்பது திறமையான பணியாளர்கள், வலுவான உள் கட்டமைப்பு, நிலவும் சாதகமான புறநிலை ஆகியவற்றால் அமைகிறது. மேலும் உற்பத்திக்கான பொருள்களைத் தருவிப்பதற்கும் உற்பத்திச் சரக்குகளை அனுப்புவதற்கும் உள்ள இணைப்பு வசதி, அவை நிர்வகிக்கப்படும் முறை ஆகியவற்றின் மூலம் ஒரு தொழில் நிறுவனத்தின் உற்பத்திச் செலவு குறைவதற்கான நிலை அமைகிறது. இவற்றை மேலும் முறைப்படுத்துவதே தொழில் வளர்ச்சியைப் பெருக்கும்.

**செயல் திறப்பாடும் வேலைவாய்ப்பின் எதிர்காலமும்**

தொழிலாளர் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக உற்பத்தித் துறையில் தானியங்கி தொழில்நுட்பங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. புதிய வகை இயங்குத் தளங்களில் பொருளாதாரச் செயல்பாடு வளர்ந்து வருகிறது. இவற்றின் காரணமாக தொழிலாளர்கள் முன்பு வேலை செய்த பணிகள் கைவிடப்படுவதும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஊதியத்தின் விகிதம் குறைந்து வருவதும் அனைத்து நாடுகளிலுமே தவிர்க்க இயலாததாகிவிட்டது. ஒரு செயல்திறனில் (Skill) சராசரி பயன்பாட்டுக் காலம் மேலும் மேலும் சுருங்கி வருகிறது. இனிவரும் காலங்களில் உற்பத்தித் தொழில் மட்டுமே வேலை வாய்ப்புக்கானத் தீர்வாக இராமல் போகலாம். சேவைத் துறைகளில் அறிவுசார் அடித்தளம் தேவைப்படும் தொழில்களுக்கு மாற வேண்டியது தவிர்க்கவியலாது.

எனினும் உயர்கல்வியில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனை - உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் அனைத்திந்திய சராசரி 27 விழுக்காடாக உள்ள போது தமிழ்நாடு 51.4 விழுக்காடாக இருப்பது இந்த மாற்றத்தை எதிர்கொள்ள உதவாது. தகுநிலைக் குறைபாடுடையப் பள்ளிக் கல்வி, உயர்கல்வியில் உள்கட்டமைப்புக் குறைபாடு, தொழில்முறைக் கல்வியில் பயன்பாட்டுத் திறன் பயிற்சியளிப்பதில் குறைபாடு ஆகியவை செயல்திறனிலும் பணிக்கானத் தகுதியாக்கத்திலும் உள்ள போதாமையை ஏற்படுத்தியுள்ளது. இது இளைஞர்கள் வேலை பெறுவதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாம் நிலை மாநகரங்களின்பால் மென்பொருள் துறைகளை ஈர்த்துள்ள அண்மைக்கால முயற்சிகள் ஊக்கமளிப்பதாக உள்ளது. நலிந்த நிலைப் பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கான நான் முதல்வன் திட்டம், செயல்திறன் மேம்படுத்தும் திட்டம் ஆகியன பாராட்டுக்குரியவையாகும். எனினும் இந்த நடவடிக்கைகள் வேலை வாய்ப்பைப் பெற்றிடுவதில் எந்த அளவுத் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது தெரியவில்லை.

நல்ல ஊதியமும் கண்ணியமாக பணிபுரியும் சூழ்நிலையும் உறுதிச் செய்திடத்தக்கச் சிறந்த கூறுகள் அடங்கிய சமூகக் கொள்கையும் தொழில்மயமாக்கும் செயல்முறைகளையும் உருவாக்கிட புதிய அணுகுமுறைகளே தமிழ்நாட்டிற்கு இப்போதையத் தேவையாகும்.

(The Hindu நாளேட்டில் 19.06.2023 அன்று வெளியானக் கட்டுரை) தமிழில் **சா. குப்பன்**

(இக்கட்டுரையாளர் ஆ. கலையரசன் சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவிப் பேராசிரியர் மற்றும் ஹார்வர்டுப் பல்கலைக்கழகத் தெற்காசிய நிறுவனத்தில் இணைந்துள்ள ஆராய்ச்சியாளர்.)

❖

# இந்திய ஒன்றிப்பு நாடுகள்

## (UNITED STATES OF INDIA)

என். மனோகர் ரெட்டி

இந்தியாவின் தென்னகத்தையும் வடக்கையும் அரசியல் நிலையில் வேறுபடுத்தும் காரணிகள் எவை என்பது பற்றி அறிஞர்களின் கருத்தாடல் அண்மையில் நடந்தது (The Hindu June 2, 2023).

தென்னகத்தின் மொழி அரசியல், மாநிலக் கட்சிகள், அவை மாநில அரசுகளுக்கு அதிக உரிமைகள் கோருவதும், பல மொழிகள் பேசப்படுவதும் பண்பாடுகளும் சாதியமைப்புக்கு எதிராகவும், பார்ப்பனர்களுக்கு எதிராகவும் நிலவுதல் ஆகியவற்றுடன் சாதி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, பகுத்தறிவு இயக்கங்கள் - இவற்றால் உருவெடுத்துள்ள புதிய கலாச்சாரம் ஆகியவையும் காரணங்களாகும். மேலும் பொருளியல் நிலையில் மேம்பட்டிருப்பது, கல்விக்கு அதிக முதலீடு செய்வது, சமூக மேம்பாட்டுக்கான புதிய இயக்கங்கள் செயல்படுவது, தொழில் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது முதலான பிற காரணங்களும் ஆகும். இவற்றுடன் ஒப்பிட தென்னகத்தைவிட வட மாநிலங்கள் பல நிலைகளில் பின்தங்கியுள்ளன என்பவையும் தென்னகத்தையும் வடக்கையும் வேறுபடுத்திடும் காரணங்கள் ஆகும்.


**மொழிசார் இயக்கங்கள்**

இதேபோன்று "வடக்கு மாறுதல் விரும்பாத பிற்போக்கினதாகவும், மூடநம்பிக்கையில் மூழ்கியும், கல்வியில் பின்தங்கியும் உள்ளது. அதேவேளையில் தென்னகம் முற்போக்கானதாகவும், பகுத்தறிவிலும் கல்வியிலும் முன்னேறியும் உள்ளது" என்று டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் 1956-இல் எடுத்துரைத்துள்ளார். மேலும் அவர் சவகர்லால் நேரு பார்ப்பனியச் சடங்குகளைக் கடைப்பிடிப்பதைக் கண்டித்துள்ளார். இராசேந்திர பிரசாத் வாரணாசியில் பார்ப்பனர்களை வழிபடுவதற்கு அவர்களின் பாதங்களைக் கழுவி. அந்தக் கழுவிய நீரைப் பருகியதையும் மேதை அம்பேத்கர் குறை கூறியுள்ளார். மேலும், "இந்தத் தலைவர்களின் 'வடக்கர் ஆட்சியை' எப்படித் தென்னகத்தில் உள்ளவர்கள் ஏற்பர்?" எனவும் வினவியுள்ளார். வடக்கில் உள்ளவர்கள் இந்துத்துவக் கடும்போக்கை ஊட்டி வளர்ப்பதையும் தென்னகப் பகுதியில் பா.ச.க. நுழைவதைத் தடுப்பதையும் காண்கையில் மேதை அம்பேத்கர் கூறியது இன்றும் பொருந்துவதாக உள்ளது. தென்னகம் பா.ச.க. வெல்ல முடியாதக் கோட்டையாக இப்போதும் திகழ்வது சிக்கலான வினாவாக உள்ளது.

இந்த நிலையைப் புரிந்துகொள்வதற்கு இவ்விரு நிலப்பகுதிகளை வேறுபடுத்தும் மிக முதன்மையான வரலாற்றுக் காரணிகளைக் காணல் வேண்டும். தென்னகத்தில் இயங்கிய



பட்டாபி சீதாராமையா




கொண்டா வெங்கடப்பய்யா

மொழிவழித் தேசிய இன இயக்கங்கள் இந்தியாவைத் தேசிய இனங்களின் கூட்டமைப்பாகக் கண்டனர். அதே வேளையில் வடவர்களால் இந்தி-இந்து-இந்துஸ்தான் என்ற முழக்கத்தினால் ஒரே படித்தான தேசமாக இந்தியாவைப் புரிந்துகொண்டனர். ஆனால் தென்னகத்தார் இந்தியாவை மொழித் தேசியங்களின் ஒரு கூட்டமைப்பாகக் காண விழைந்தனர். தென்னகத்தில் வெளியிடப்பட்ட ஏடுகள், நூல்கள், பண்பாடு, மொழியின் தனித்தன்மையைப் பொது மக்களிடையே பரப்பின. மேலும் திரைப்படங்கள் குறிப்பாகத் தமிழில் எம்.ஜி. இராமச்சந்திரன், தெலுங்கில் என்.டி. இராமராவ், கன்னடத்தில் இராஜ்குமார் ஆகியோர் நடித்தவை இக்கருத்தை உருவாக்கிட உதவின.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென்னகத்தில் வேறுபட்ட மொழி பேசும் மக்கள் தங்களைத் தனித் தேசிய இனமாகக் கருதுமாறு கோரினர். அய்ரோப்பிய நாடுகளில் புரட்சிக்குப் பிந்தைய காலகட்டத்தில் மொழி அடிப்படையிலும் அரசியல்நோக்கு அடிப்படையிலும் இறையாண்மையுள்ள தனித்தனி தேசங்கள் அமைந்ததைக் கண்டு ஊக்கம் பெற்றத் தென்னகத் தலைவர்கள் அதேபோன்று மொழிவழித் தேசிய இனக் குடியரசாகத் தங்களையும் கருதினர்.

அப்போதைய சென்னை மாகாணத்தில் இருந்த தலைவர்கள் இன, மத அடையாளங்களைக் காட்டிலும் நெகிழ்வுத் தன்மையுள்ள மதச்சார்பற்ற, மொழி அடிப்படையிலான அடையாளத்தைத் திட்டமிட்டு வளர்த்தனர். தென்னகத்தில் இடைநிலை மக்களிடையே இருந்த சிந்தனையாளர்கள் மொழிசார் தேசியத்திற்கும் குடியாட்சிக்கும் இடையே இருந்த முக்கியமானப் பிணைப்பை அறிந்தேற்றிருந்தனர்.



ஜனநாயகம் செம்மையாகச் செயல்படுவதற்கு கல்வித் துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை ஆகியவை மக்களின் மொழியில் நடத்தப்பட்டாக வேண்டும். இதுவே மக்களி டையே சமத்துவத்தையும் நீதியையும் சாத்தியப்படுத்தும் என அச்சிந்தனையாளர்கள் உணர்ந்திருந்தனர். மேலும் இந்தப் புதிய நடவடிக்கைகளின் தேவைக்கு ஏற்ற வகையில் மக்களின் மொழிகள் போதிய நவீனத்துவம் பெறல் வேண்டும். எப்படி இருப்பினும் இந்தியா தேசிய இனக் குடியரசுகளின் கூட்டமைப்பாக மாறும்போது இவை சாத்தியமாகும் என அவர்கள் நம்பினர். அப்படி இல்லாமல் இந்தியா ஒரே படித்தான ஒற்றைத் தேசமாக இருக்கக் கட்டாயப்படுத்தினால் இம்மொழிகள் அழிக்கப்பட்டுவிடும் எனவும் கருதினர். தென்னகத்தில் உள்ள மொழிகளின் நிலையை மேலோட்டமாகப் பார்த்தால் கூட தங்கள் மொழிகள் அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் நியாய மானது என இன்றுள்ள நிலையில் தெளிவாக அறியலாம்.

ஆந்திர மகாசபைத் தலைவர்களான கொண்டா வெங்கடப்பய்யாவும் பட்டாபி சீத்தாராமய்யாவும் 1913-இலேயே ஒற்றை இந்தியா உருவாக்கத்திற்கு எதிராக காங்கிரசுத் தலைமையை எச்சரித்தனர். மக்களில் பெரும் பான்மையினர் இந்து மதத்தினர் என்ற அடிப்படையைக் கொண்டால், அது தவறானச் செயலாகிவிடும் என்றும் எச்சரித்தனர்.

பின்னர், தெலுங்கரான புச்சலப்பள்ளி சுந்தரய்யா, தமிழர்களான அண்ணாதுரையும் பெரியாரும், மலை யாளரான இ.எம்.எஸ். நம்பூதிரிபாத் அதன் பின்னர் கன்னடரான வி.கே. கோகக் முதலானோரும் மற்றவர்களும் உண்மையான கூட்டமைப்பாக இந்தியாவை உருவாக்க வேண்டியதன் முதன்மையை வலியுறுத்தி எழுதியும் பேசியும் உள்ளனர்.

**வலுவான இணைப்பிற்கானத் தேவை**

இந்தியா ஒரு தேசமன்று; மாறாக அய்ரோப்பாவைப் போன்று பல தேசிய இனங்களைக் கொண்ட ஒரு துணைக் கண்டம் என்பதைக் குறிப்பாக ஆந்திர மகாசபைத் தலைவைர்கள் வாதிட்டுள்ளனர். ஒற்றை இந்தியா என்பது ஜனநாயகத்திற்குப் பொருந்தாத ஒன்றாக அமையும் என்றும் இறைமையுள்ள குடிமக்கள் தேசிய அரசின் முடிவுகளை மேற்கொள்ளும் செயல்முறைகளில் துடிப்பாகப் பங்கேற்பதில் தான் ஜனநாயகம் தழைக்கும் என்றும் வாதிட்டுள்ளனர். இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் ஒரே மொழி என்பது மேற்சுட்டிய மக்கள் பங்கேற்கும் நடைமுறைக்குத் துணைபுரிய இயலாது என அவர்கள் வாதிட்டுள்ளனர். மேலும் வலுவான தேசத்திற்கு மக்களிடையே வலுவானப் பிணைப்புத் தேவை. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள மக்கள் பற்பல மொழிகளைப் பேசுபவர்களாக உள்ளனர். இம்மக்களை ஒரே தேசச் சமூகமாகப் பிணைத்திட எந்த ஒரு மொழியாலும் முடியாது. இந்தி இந்தியாவைச் சேர்த்து வைக்கும் என்ற பிழையானக் கருத்தே இன்றும் தொடர்கிறது. இந்தி பேசாத மக்களை அவர்கள் அம்மொழி யைப் பேசாத நிலையிலும் ஒன்றிணைக்க இந்தி மொழியால் முடியும் எனும் முற்றிலும் தவறான புரிதல் தொடர்ந்து வெளிப்படுகிறது.

பிரெஞ்சு மொழி பேசும் மக்களை அம்மொழியால் ஒன்றிணைக்க முடிகிறது என்பதை அறிவோம்; அதேபோல் தமிழ்மொழியில் அன்றாடம் பேசுபவர்களைத் தமிழ்மொழி யால் ஒன்றிணைக்க முடிகிறது. கேரளர்களையும் பஞ்சாபியர் களையும் அல்லது இந்திமொழி அறியாத வங்காளியரையும் இந்தி மொழியால் ஒன்றிணைக்க இயலும் என்பது சாத்தியமற்ற ஒன்று.

சுதந்திரத்திற்குப் பின் காங்கிரசுக் கட்சி தென்னக மக்களுடன் இணக்கமான ஒரு தீர்வாக, அரசமைப்புச் சட்டத்தில் வரம்புப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களுடன் கூடிய மொழிவழி மாநில அரசுகள் அமைத்திட அமைதி வழியில் உடன்பாடு காணப்பட்டது. ஆனாலும் ஆந்திர மகா சபை எதிர்பார்த்த தேசிய இனங்களின் உரிமைகளிலிருந்து அவை வெகு தொலைவில் உள்ளது. இந்துத்துவ வலதுசாரிகளின் குழுக்கள், கூட்டாட்சி என்ற கருத்தையே கடுமையாக எதிர்க்கின்றனர். அவர்கள் கனவு கண்டுகொண்டுள்ள ஒற்றை இந்து தேசம் என்ற நோக்கத்திற்குக் கூட்டமைப்பு என்பது முட்டுக்கட்டையாகிவிடும் என்று எதிர்க்கின்றனர்.

இந்திய அரசு தென்னகத்தின் தேசிய இனங்களை வெற்றி கொண்டுள்ள போதிலும் தேர்தல் வேளையில் தென்னிந்திய தேசிய இனங்களின் மக்கள் இந்திய ஆட்சிகளுக்குப் பெரும் அச்சம் தருவோராக உள்ளனர்.

- The Hindu நாளேட்டில் 26.6.23 அன்று வெளிவந்த கட்டுரை. தமிழில் : **சா. குப்பன்**

(இக்கட்டுரையாளர் என். மனோகர் ரெட்டி, அய்தராபாத்தில் உள்ள NALSAR தேசியச் சட்டப் பல்கலைக்கழகத்தில் உதவிப் பேராசிரியராக உள்ளவர்) ❖

# நூல் மதிப்புரை : டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு

மராட்டிய அறிஞர் தனஞ்சய் கீர் எழுதிய அம்பேத்கரின் வரலாறு அம்பேத்கர் வாழ்ந்த காலத்திலேயே 1954ல் ஆங்கிலத்தில் வெளியாகி பெரிய வரவேற்பைப் பெற்றது. அம்பேத்கர் மறைவுக்குப் பின்னர் மேலும் பல பகுதிகளை இணைத்து 1971ஆம் ஆண்டு புதிய வெளியீடாக வந்தது!

* அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவையொட்டி, இந்த வரலாற்று நூலை தமிழ் வாசகர்களுக்காக மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி க. முகிலன் அவர்களின் தமிழாக்கத்தில் மிக நேர்த்தியான நூலாக 1992இல் வெளியிட்டது!

* புரட்சியாளர் அம்பேத்கரின் அதிகாரபூர்வமான வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ள இந்த நூல் தான் முதல் தேர்வாக அமைந்துள்ளது. இந்த நூலை முழுவதும் படித்தறிந்தால் அம்பேத்கரின் வரலாற்றை மட்டுமல்ல இந்தியாவின் வரலாற்றையும் ஒரு சேர அறிந்து கொள்ளலாம்!

* அம்பேத்கரின் புரட்சிகரமான வரலாற்று நிகழ்வுகளிலிருந்து வாசகர்கள் தங்கள் நினைவில் நிறுத்திக் கொள்வதற்காக சில முக்கியமான தகவல்களை இந்த நூல் அறிமுகவுரையில் வழங்குகின்றேன்:

* மகாராஷ்டிராவில் இந்து தாழ்த்தப்பட்ட சாதி (மகார்) பிரிவைச் சேர்ந்த குடும்பத்தில் பதினான்காவது குழந்தையாக ஏப்ரல் 14ஆம் தேதி 1891ஆம் ஆண்டு பிறந்து, இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தை எழுதுகின்ற வல்லமை பெற்று, இந்திய அரசியலில் ஒரு மாபெரும் புரட்சியாளராக விளங்கியவர்தான் - பீம் ராவ் அம்பேத்கர்!

* அவர் படித்த உயர் நிலைப் பள்ளியின் பார்ப்பன ஆசிரியர் தனது குடும்ப பெயரான ' அம்பேத்கர் ' என்பதை பீமராவ் மீது மிகுந்த அன்பு கொண்டிருந்ததால், அவருடைய குடும்ப பெயரான 'அம்பவடே' என்பதை மாற்றி தனது குடும்ப பெயரான 'அம்பேத்கர்' என்று பள்ளி பதிவேடுகளில் மாற்றினார்! அன்றிலிருந்து அவர் பீம் ராவ் அம்பேத்கர் ஆனார் !

* அம்பேத்கர் தீண்டப்படாத சாதியைச் சேர்ந்தவர் என்ற காரணத்தால் பள்ளிகளிலும், பொது இடங்களிலும், கல்லூரிகளிலும் பட்ட அவமானங்களும் இன்னல்களும் ஏராளம். அவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு தன்னை ஒரு சிறந்த கல்வியாளராக கொஞ்சம் கொஞ்சமாக செதுக்கி உச்சத்தை அடைந்தார்!

* மேற்படிப்புக்காக அமெரிக்காவிற்கு சென்றார். அங்கு பயின்று கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தத்துவ இயலில் முனைவர் பட்டம் பெற்றார் ! புத்தகங்களை மிகவும் நேசித்தார் ! புத்தகங்களை மணிக்கணக்கில் வாசித்தார் ! பின்பு இங்கிலாந்துக்கு சென்றார். வாழ்நாள் முழுவதும் படிப்பதையே பேரின்பமாக கொண்டிருந்தார் . பம்பாய்க்கு திரும்பி வந்த பின் கல்லூரியில் பேராசிரியர் ஆனார்!




மூன்றாம் பதிப்பு : 2023
பக்கங்கள் : 896 ★ விலை : ரூ.950/-
நூல் பெற : 8668109047
★★★★★★★★★★★★★★★★★★★

* தான் எவ்வளவு பெரிய படிப்பை படித்து முடித்தாலும் எவ்வளவு பெரிய பதவியில் இருந்தாலும் தன்னை ஒரு தீண்டப்படாதவனாகவே இந்தச் சமுதாயம் நடத்துவதை நன்கு உணர்ந்தார். தீண்டப்படாத மக்களின் உரிமைகளைப் பேச ஆரம்பித்தார்.

* இதே வேளையில்தான் 1925இல் வைக்கத்தில் நடைபெற்ற, பெரியார் தீவிரமாக பங்கேற்ற - தெருக்களில் தீண்டப்படாதவர்கள் நடப்பதற்கான உரிமைப் போராட்டம் வெற்றிகரமாக நடந்ததை அறிந்தார் ! அதன் விளைவாக அம்பேத்கருக்கு ஒரு புதிய உத்வேகம் பிறந்தது!

* மகாராஷ்டிராவில் கொலாபா மாவட்டத்தில் மகத் என்ற ஊரில், 1927 மார்ச் 19, 20 தேதிகளில் நடைபெற்ற தீண்டப்படாத மக்கள் மாநாட்டை சிறப்பாக நடத்த ஏற்பாடு செய்தார். இறுதி நாள் நிகழ்வாக, மகத்திலுள்ள தீண்டப்படாத மக்களை அனுமதிக்காத - சௌதார் குளத்திற்கு மாநாட்டில் கலந்து கொண்ட மக்களை ஊர்வலமாக திரட்டி சென்றார்!

* அம்பேத்கர் சௌதார் குளத்தில் இறங்கி தண்ணீரை எடுத்துப் பருகினார் ! ஜெய் பீம் என்ற முழக்கம் எங்கும் பரவியது !அன்று முதலாக, பெரியாரின் வைக்கம் போராட்டம் போல அம்பேத்கரின் மகத் போராட்டமும் வரலாற்றில் பொறிக்கப்பட்டது!

* அம்பேத்கர் தனது தீண்டப்படாத மக்களிடையே ஆவேசமாக உரையாற்றினார் . “பணிவாக வேண்டுதல்

மூலமாகவோ, உரிமைகளைப் பறித்தவர்களின் மனம் நெகிழ வேண்டும் எனக் கோருவதாலோ நாம் இழந்த உரிமைகளை என்றும் பெற முடியாது. இடையறாத போராட்டங்களின் மூலம் தான் உரிமைகளைப் பெற முடியும்! ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள் ! சிங்கங்களை அல்ல!" ...என கர்ஜித்தார்!

* அம்பேத்கர் பார்ப்பனர்களைக் கடுமையாகச் சாடினார்! "வேதங்களைப் படிக்கும் அல்லது பக்கத்தில் நின்று கேட்கும் சூத்திரர்களின் காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும் என்று மனுநீதி சொல்கிறது ! அந்த மனுநீதியை கொளுத்த வேண்டும் !" என்று ஆத்திரமுடன் பேசினார். அதன்படியே டிசம்பர் 25ஆம் தேதி 1927ஆம் ஆண்டு மகத்தில் மனுநீதியைக் கொளுத்தினார்!

* தீண்டப்படாத மக்களின் இழிவை சாதி இந்துக்கள் நீக்காவிட்டால் இந்து மதத்தை விட்டு விலகி வேறொரு மதத்தில் சேர வேண்டியிருக்கும் என மே 29 - 1929இல் எச்சரிக்கை விடுத்தார்!

* மத மாற்றம் பற்றி அம்பேத்கர் தன் நிலைப்பாட்டை 13.10.1935 அன்று இவ்வாறு மிகத் தெளிவாகப் பிரகடனப்படுத்தினார், " என் போதாத காலம் நான் இந்துத் தீண்டப்படாதவனாக பிறந்து விட்டேன் ! ஆனால் இந்து மதத்தின் மரியாதைக் கெட்ட, இழிவு படுத்தும் சூழ்நிலையின் கீழ் நான் வாழ மறுப்பது என்பது என் சக்திக்கு உட்பட்டதே ஆகும். ஆகவே நான் ஒரு இந்துவாக சாக மாட்டேன் என்று உங்களிடம் உறுதி கூறுகின்றேன்!"

* அம்பேத்கரின் புகழ் பெற்ற வழிகாட்டு கோஷம் - நாக்பூரில் ஜூலை 18ம் நாள் 1942ஆம் ஆண்டு நடைபெற்ற அனைத்திந்திய தீண்டப்படாத மாநாட்டின் சிறப்புரையின் போது அம்பேத்கரால் முழங்கப்பட்டது . அவை : "கற்பி ! போராடு ! ஒன்றுசேர்!"

* இன்று இந்துத்துவா சக்திகள் கீதையை தலைக்கு மேல் வைத்து கொண்டாடுவதின் காரணம் அறிய வேண்டுமா ? அம்பேத்கர் சொன்னதைக் கேளுங்கள்: " வேதங்களின் கருத்துக்களை தூக்கிப் பிடிப்பதையும், பார்ப்பனியத்தை உச்ச நிலைக்கு உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட அரசியல் நூல் தான் - கீதை ! " ...இதை விட தெளிவான விளக்கம் தேவையா ?

* சுதந்திர இந்தியாவில் 1947இல் நேருவின் அமைச்சரவையில் இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சராகப் பணியாற்றி னார். புதிதாக பிறந்த இந்தியாவுக்கான அரசியல் அமைப்பு சட்ட வரைவுக் குழுவின் தலைவரானார்!

* இந்து சட்ட திருத்த மசோதா காரணமாக அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். 1952இல் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் அம்பேத்கர் தோல்வியுற்றார். பின்பு அவர் மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். தலித் மக்களுக்கான உரிமைகளைப் பெற தொடர்ந்து போராடினார் !

* பிறவி இழிவாம் தீண்டப்படாத சாதி என்ற சகதியிலிருந்து வெளியேற வேண்டுமென்றால் இந்து மதத்தை விட்டு வெளியேறுவதே சரியான தீர்வு என முடிவெடுத்தார். நாக்பூரில் அக்டோபர் 14ஆம் நாள் 1956ஆம் ஆண்டு, மூன்று லட்சம் தொண்டர்களுடன் புத்த மதத்தில் தன்னையும் இணைத்துக் கொண்டார்! தான் ஒரு இந்துவாக சாக மாட்டேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்றினார் !

* பல ஆண்டுகளாக அவரது உடல் நலன் குறைய ஆரம்பித்தது. அதை உணர்ந்து கொண்டதால் மத மாற்றம் செய்து கொள்வதில் குறியாக இருந்து நிறைவேற்றினார். அவரது இறுதிக்காலம் நெருங்கியது. டெல்லியிலிருந்த அவரது இல்லத்தில் டிசம்பர் 6ஆம் நாள் 1956ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்! புரட்சி தீபம் அணைந்தது!

* புரட்சியாளர் அம்பேத்கரின் அரசியல் பங்கெடுப்புகள், பூனா ஒப்பந்தம், வட்ட மேசை மாநாடுகள், பாகிஸ்தான் பிரிவினை பற்றி, காந்தியுடன் உறவு, அரசியல் அமைப்பு சட்ட குழு விவாதங்கள் ஆகியவற்றை தெரிந்து கொள்ள அவரது முழு வாழ்க்கை வரலாற்றையும் படித்து அறிந்து கொள்வது அவசியமாகிறது .

* அம்பேத்கரின் வாழ்க்கைப் போராட்டத்தையும், போராட்ட வாழ்க்கையையும் முழுவதுமாக படிக்க இயலாதவர்களுக்கு இந்த அறிமுகவுரை ஒரு சிறிய உதவியாக அமையும் எனக் கருதியே இந்தப் பதிவு!

ஆங்கில மூலம் தனஞ்சய் கீர் -
தமிழாக்கம் க. முகிலன்

**பொ. நாகராஜன்**
பெரியாரிய ஆய்வாளர், சென்னை

## தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி மக்கள் கவன ஈர்ப்புக் கருத்தரங்கம்

தமிழ்வழிக் கல்வி இயக்கமும், தமிழர் நீதிக் கட்சியும் இணைந்து 29.07.2023 சனிக்கிழமை காலை 10 மணிக்கு செயங்கொண்ட சோழபுரத்தில் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி மக்கள் கவன ஈர்ப்பு கருத்தரங்கத்தை நடத்தியது. ப.முத்துக்குமரன் தலைமை தாங்கினார். புலவர் இர.அரங்கநாடன் தொடக்கவுரையாற்றினார். அ.சி.சின்னப்ப தமிழர், சி.பன்னீர்செல்வம், தமிழ்க்களம் இளவரசன், தங்கத் தமிழன், சுப.இளவரசன் ஆகியோர் கருத்துரையாற்றி னர். சீனி அறிவுமழை பாடல் பாடினார். இராமகிருட்டிணன் நன்றியுரையாற்றினார்.

## இராணிப்பேட்டை சிப்காட்டில் பற்றி எரிகிறது மணிப்பூர்! ஆர்ப்பாட்டம்



மணிப்பூரில் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள், மலைவாழ் மக்கள் மீதான தாக்குதல்களை கண்டித்து பற்றி எரிகிறது மணிப்பூர், பற்ற வைத்தது பாஜக! பாசிச மோடி அரசு என்ற தலைப்பில் புரட்சிகர இளைஞர் முன்னணி சார்பில், இராணிப்பேட்டை சிப்காட்டில் 30-07-2023 ஞாயிறு காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. புரட்சிகர இளைஞர் முன்னணி தோழர் தமிழ்க்கனல் தலைமை தாங்கினார். தோழர் வீராசாமி வரவேற்புரை ஆற்றினார். தி.மு.க. சிப்காட் கிளைச் செயலாளர் சி.சுப்பிரமணி முன்னிலை வகித்தார். நவ்லாக் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் சிவஞானம், மா.பெ.பொ.க தோழர் சா.குப்பன், ஏ.ஐ.டி.யு.சி தோழர் சங்கர் மேஸ்திரி, வி.சி.க. வேலூர் மாவட்ட செயலாளர் பிலிப், ம.தி.மு.க. நகரச் செயலாளர் பால்சத்தியன், பு.ஜ.தொ.மு. சுந்தர், சி.பி.ஐ. இரவிவாணன், மா.பெ.பொ.க. டில்லிபாபு, வி.சி.க. மண்டல துணைச் செயலாளர் சோ.தமிழ், வி.சி.க. மாவட்டச் செயலாளர் சீ.ம.இரமேஷ்கர்னா நகரமன்ற துணைத்தலைவர், வி.சி.க. நகர செயலாளர் இராஜசேசகர், பெல்.சேகர், சோளிங்கர் மா.பெ.பொ.க. குப்புசாமி, ம.க.இ.க. அகிலன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அழகுஒளி நன்றி கூறினார்.

## எது சனாதனம்? எது திராவிடம்? தெருமுனைக் கூட்டம்




எது சனாதனம்? எது திராவிடம்? என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகம் ஆயிரம் தெருமுனைக் கூட்டங்களை நடத்த முடிவு செய்தது. சென்னை மாவட்டத்தில் இருநூறு கூட்டங்கள் நடத்த திட்டமிட்டுள்ளனர். முதல் கூட்டம் 8.7.2023 அன்று சென்னை போரூர் காரம்பாக்கத்தில் நடைபெற்றது. புகழ்வளவன் தலைமை தாங்கினார். நாத்திகன் வரவேற்புரையாற்றினார். தி.வி.க. தோழர்கள் தபசிகுமரன், இரா.உமாபதி, ம.தி.மு.க. ஜனார்த்தனம் ஆகியோர் உரையாற்றினர். நாத்திகனின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சிக்குப் பின்பு ம.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் சிறப்புரை யாற்றினார். அட்டி அருண் நன்றியுரையாற்றினார்.


## கி.வெற்றிச்செல்வன் மறைவுற்றார்



கோலார் தங்கவயலில் இருந்து சென்னைக்கு வந்து தமிழ் இன உணர்வோடு செயல்பட்டவர் தோழர் கி.வெற்றிச்செல்வன் உடல் நலக்குறைவால் 22.7.2023 அன்று மறைவுற்றார். தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் இதழான 'தமிழியக்கம்' இதழைப் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிட்டார். சில ஆண்டுகள் சிந்தனையாளன் அலுவலகத்திலும் பணியாற்றினார். உலகத் தமிழர் கழகத்தின் ஏடான முதன் மொழி இதழை ந.அரணமுறுவல், பா.இறை யெழிலன் மறைவுக்கு பின்னர் பொறுப்பேற்று வெளிக்கொண்டு வந்தார். அவருடைய மறைவு பேரிழப்பாகும். அன்னாருடைய குடும்பத்தாருக்கு மா.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## தோழர் வே.டில்லி மறைவுற்றார்



காஞ்சிபுரத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியில் 1980முதல் செயல்பட்டு வந்தவர் தோழர் வே.டில்லி அவர்கள். 30.4.2023 அன்று உடல் நலக் குறைவுக் காரணமாக மறைவுற்றார். 1980 முதல் சிந்தனையாளன் இதழ் விற்பனை செய்து வந்தார். மா.பெ.பொ.க. நடத்தும் போராட்டங்களில் கலந்து கொண்டவர். தோழரின் மறைவுக்கு ம.பெ.பொ.க. சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# திராவிடர் இயக்க ஆய்வாளர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் நூல்கள் திறனாய்வு அரங்கம்



சமூக அறிவியல் பேரவைச் சார்பில் 23.7.2023 அன்று அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் திராவிடர் இயக்க ஆய்வாளர் எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "The Strangeness of Tamil Nadu", "Brahmin and Non-Brahmin" ஆகிய இரண்டு நூல்கள் திறனாய்வுக் கூட்டம் வரலாற்றுப் பேராசிரியர் அ. கருணானந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்லாஸ் உசேன் வரவேற்புரையாற்றினார். பொன்மணி தொகுப்புரை ஆற்றினார். The Strangeness of Tamil Nadu என்ற நூலை வாலாசா வல்லவன் அவர்களும், Brahmin and Non-Brahmin என்ற நூலை தமிழ்க்காமராசன் அவர்களும் திறனாய்வு செய்து உரையாற்றினர். பேராசிரியர் அ. கருணா னந்தம் அவர்கள் தலைமையுரையாற்றினார். சாரதி நன்றியுரையாற்றினார். எம்.எஸ்.எஸ். பாண்டியன் அவர்களின் துணைவி ஆனந்தி அவர்களும், பெல். கு.இராசன், அ. லாரன்சு, தேவதாஸ் சுவாமிநாதன் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூலை-ஆகத்து - 2023

| | | |
|---|---|---|
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார் கோவில் | 1000/- |
| மா.முருகேசன்-அலமேலு | தீத்தாண்டப்பட்டு | 1000/- |
| ப.சேரலாதன் | அண்ணாநகர், சென்னை | 1000/- |
| து.காமராசு | பென்னக்கோணம் | 1000/- |
| புலவர் இர.அரங்கநாடன் | அரியலூர் | 500/- |
| து.செ.பெரியசாமி | துங்கபுரம் | 500/- |
| புலவர் கு.வரதராசன் | பூலாம்பாடி | 500/- |
| க.வெங்கடேசன் | போளூர் | 500/- |

# வாணியம்பாடியில் ஒன்றிய அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்



மணிப்பூர் கலவரத்தைத் தடுக்கத் தவறிய இந்திய ஒன்றிய அரசை கண்டித்து சூலை 27 அன்று அனைத்து கட்சிகளின் சார்பில் வாணியம்பாடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சியப் பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சியின் சார்பில் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி பங்கேற்று கண்டன உரையாற்றினார்.

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர் மற்றும் ஆசிரியர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441

Editor & Published by **VALASA VALLAVAN,** No.2/12, C.N.K. Lane, Chepauk, Chennai - 600 005. Mobile : 8668109047
**Printed by Pavai Printers Pvt. Ltd.,**
16, (142), Jani Jankhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-2848 2441